Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
ஒக். 31- நவ.06, 2013

# வாரமலர் தினமுரசு




THIN RI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1038







## சிவாஜிலிங்கத்தின் தாகம்

# இன்னொரு முள்ளிவாய்க்கால்

## மலையகத்தில் சத்தமின்றி நடக்கிறது இன அழிப்பு?

முரசு
வாசகர்களுக்கு
தீபாவளி
வாழ்த்துக்கள்



## பொதுநலவாய மாநாட்டிலும் அரசியல்

## குருவார மகாலட்சுமி விரதம்

மார்கழி மாதம் முதல் வியாழக்கிழமை ஆரம்பித்து ஒவ்வொரு வியாழனன்றும் விரதமிருந்து, கடை-சி வியாழனன்று இந்த விரதத்தை முடிக்கவேண்டும். பிறகு வருடம் முழுவதும் வியாழக்கிழமைகள் தோறும் கதையை மட்டும் படிக்கவேண்டும்.

இதுதான் குருவ்ர மகாலட்சுமி விரதமாகும். நாள் முழுவதும் உபவாசம், இரவில் மட்டும் சாப்பாடு என்பது இவ்விரத கோட்பாடுகளில் ஒன்று. விரதம் முடியும் வியாழக்கிழமை அன்று ஏழு கன்னிப் பெண்கள் அல்லது சுமங்கலிகளை அழைத்து, பிரசாதம், தாம்பூலம், பழம் கொடுக்கலாம்.

இந்த விரதத்தை பெண்கள் முறைப்படி கடைப்பிடித்து வந்தால் வாழ்வில் எல்லா வகையான இன்பங்களையும் பெற்று வாழ்வில் வளம்பெறலாம். இந்த விரதத்தை பெண்கள் மட்டும்தான் கடைப்பிடிக்கவேண்டும்.

திருமணம் ஆகாத கன்னிப்பெண்கள் இந்த விரதத்தை கடைப்பிடித்தால் விரைவில் திருமணம் நடக்கும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை.

## தர்மம் கொடுங்கள்!

ஆன்மீகம்

தூய்மையைப் பற்றிய இயேசுவின் போதனை இன்று நம் கவனத்தைக் கவர்கிறது. இயேசு வின் பார்வையில் புறத்தூய்மையைவிட அகத்தூய்மையே மேலானது, அதிகக் கவனத்துக்குரியது. எனவே, வெளித் தூய்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல், உள்ளத் தூய்மைக்கு, தூய மனநிலைக்கு அதிக அழுத்தம் கொடுக்க ஆண்டவர் இன்று நம்மை அழைக்கிறார்.

அதற்கான ஆலோசனையையும் அவரே தருகிறார். உட்புறத்தில் உள்ளவற்றைத் தர்மமாகக் கொடுங்கள். அப்பொழுது உங்களுக்கு அனைத்தும் தூய்மையாய் இருக்கும் என்கிறார் இயேசு. உட்புறத்தில் இருப்பவை எவை? மனநிலை, எண்ணங்கள், ஆலொசனைகள், சிந்தனைகள், நன்றியுணர்வு, மகிழ்ச்சி... இவை அனைத்துமே நமது உட்புறத்தில் இருப்பவைதாம்.

இவற்றைத் தர்மமாகக் கொடுக்க இயேசு அறைகூவல் விடுக்கிறார். பிறரோடு பகிர்ந்துகொண்டால், நமது உள்ளமும், மனநிலையும் நிச்சயம் தூய்மை அடையும் என்பதில் சந்தேகமே இல்லை.

## நபி வாக்கு...


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். உத்தம நபி அவர்கள் உடல்நலம் வேண்டி அல்லாஹ்விடம் பின்வருமாறு பிரார்த்திப்பார்களாம்.

நோய் மனிதனுடைய வாழ்க்கையில் வருகின்ற பெரும் சோதனையாகும். நோயற்ற வாழ்க்கையை ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறான். அதற்காக அண்ணல் நபி செய்த பிரார்த்தனைகளை நாமும் நமது வாழ்வில் கொண்டுவர வேண்டும்.

உன்னுடைய நிஃமத் என்னைவிட்டு பிரிந்து செல்கின்ற நிலையை விட்டு நான் பாதுகாப்புத் தேடுகிறேன். எனக்கு நீ அளித்த ஆரோக்கியம் அற்றுப்போகும் நிலையில் இருந்து நான் பாதுகாப்புத் தேடுகிறேன். உன்னிடமிருந்து துர்ப்பாக்கியம் திடீரென்றுவந்து என்னை விழிக்கச் செய்கின்ற நிலையில் இருந்து நான் பாதுகாப்புத் தேடு கிறேன். உனது எல்லாவிதமான கோபத்தில் இருந்தும் நான் பாதுகாப்புத் தேடுகின்றேன். இவ்வாறான பிரார்த்தனைகள் எமது வள்மான வாழ்வுக்கு வழிவகுக்கும் என்பது வான்மறை தந்த வள்ளல் நபி வாக்கு.

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1035



### பாரமில்லா பாசமான உறவு

பா ரா ட் டு க் கு ரி ய து

நாற்காலியில் நான் ஏறி
இரு கரத்திலும் கயிரோடி
என் உறவான உத்தமியே
ஊஞ்சலாட - இது
வசந்த காலமே
உன் தாயார் பத்துத் திங்கள்
உன்னை கரு சுமக்க
பாசத்தில் நான் உனை
கையில் ஊஞ்சலாட்ட
இதமான வாழ்க்கையில்
இன்னல்களைத் தாண்டிவர
மாக்கள் எனும் வரம்
உனைத் தேடி வர
ஆனந்தக் கண்ணீரில்
என் கண்கள் நனைந்தோட
நீ வளரும் காலம்
பொற்காலமாய் வாழ்ந்திடுவாய்.

சி.திவாகரசர்மா, வவுனியா.

## கவிதைப் போட்டி இல 1038



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04. 11. 2013

கவிதைப் போட்டி இல. 1034 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### கடமை

உன்னைத் தாங்கும்
வலுவுள்ள
தந்தையின் தோள்கள்
வலுவிழக்கும் போது
வலுவிழந்த அவர்
தோள்களைத்
தாங்கு
உன் வலுவற்ற
உன் தோள்களால்...

மானியூர், கவின்.

### மழலைக்குத் தொட்டில்

ஊஞ்சலுக்கு
உதவிய மரம்
அநியாயமாக இங்கு
அழிக்கப்பட்டதால் இன்று
மரமாக மனிதன் மாறி
மனிதப் புயங்களில்
மழலைக்குத் தொட்டில்...

எம்.சி.கலீல், கல்முனை-05.

### பொன்னூஞ்சல்!

பிள்ளைச் செல்வமிது
போலவே
பேரின்பம் வேறேதும்
இல்லை!
தோளில் ஊஞ்சல்
கட்டிச் செல்லக்
குட்டியினைத்
தொங்க வைத்தாட்டுகிறார்
இது பழைய ஊஞ்சலன்று
புதிய பொண்ணு
ஊஞ்சல்!

பாண்டியூர் பொன்.நவநீதன்

### எதிர்காலச் சாட்சி

எதிர்காலம்
விரையும் பயணத்தில்
குழந்தைகளின்
அழுகையைத் தணிப்பதற்கு
பெற்றோர் நடமாடும்
ஊஞ்சலாகலாம்
சிலர் தொட்டிலாகவும் மாறலாம்...
எதிர்காலத்தில் நிகழும்
காட்சிப்படுத்தும்
புகைப்படச் சாட்சி.

A. பாரிஸ், மிகிந்தலை.

## உங்கள் பக்கம்

### ஜெயபுரத்தில் மருத்துவமனை அவசியம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட ஜெயபுரம் கிராமத்தில் வசித்துவருகின்ற 640க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்குத் தேவையான மருத்துவ தேவை-களை பூர்த்தி செய்துகொள்வதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த பகுதியில் வாழ்கின்ற மக்கள் முழங்காவில், பூநகரி, கிளிநொச்சி போன்ற இடங்களுக்குச் சென்று தங்களது மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் குறித்த இடங்களுக்குச் செல்வதற்கு சீரான போக்குவரத்து வசதியின்மையால் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்கின்றனர். ஜெயபுரம் கிராமத்தில் மருத்துவமனை ஒன்று அமைக்கப்படுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்ட போதிலும் இதுவரை அதற்கான எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை.

அதேவேளை ஜெயபுரம் கிராமத்திற்கு வாரம்தோறும் நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்படுமென குறித்த பிரதேசம் தொடர்பான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சொல்லப்பட்டபோதிலும் அவற்றை நடைமுறையில் காணமுடியாதுள்ளது.

எனவே குறித்த விடயத்தில் உரிய அதிகாரிகள் தங்களது கவனத்தை செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எம்.தவபாலன், ஜெயபுரம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com




## வாசகர் சாலை

### புதிய தகவல்கள்

தினமுரசு வணக்கம்!

தினமுரசு பத்திரிகையானது மக்களுக்கு பல விடயங்களை எளிமையுடன் எடுத்து [illegible]க்குகின்றது.

[illegible] மாணவனாக என்னை கவர்ந்துள்ள [illegible]க்கத்தில் வெளியர்கும் [illegible] பற்றிக்கூறுவது ஆகும்.

இவ்வாறு வெளிவரும் விடயங்கள் எனக்கு மிகவும் பிரயோசனமாகவும் உலக விடயங்களை அறிந்துகொள்ளும்வாயிலாகவும் விளங்குகின்றது.

ஜெ.ஜெயலக்ஷன், கோண்டாவில்

### உன் பணி தொடர்க...

வாரம் தோறும் சிந்தையைத் தொடும் வகையில் சிந்தைக்கினிய செய்திகளையும், சிறந்த அம்சங்களையும் தாங்கிவரும் தினமுரசு வாரமலரை எவ்வாறு பாராட்டுவதென்றே தெரியாது. காரணம் உன்னில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சங்களுமே ஒவ்வொரு விதமாய் அமைந்துள்ளது. அரசியல் கட்டுரைகள், நாட்டின் தற்போதைய நிலவரங்களை அவ்வாறே விளக்குகின்றது. இன்னோரன்ன அம்சங்களுமே முரசை மெருகூட்டுகின்றது. உன்பணி தொடர வாழ்த்துக்கள்.

எஸ்.கஜன், மன்னார்.

### சவால்!

யதார்த்தமான உண்மைகளை மக்களுக்கு நாசூக்காக எடுத்துச் சொல்கின்றாய். சுவாரசிய மான விடயங்களை எடுத்தியம்புகின்றாய். சிலரின் பிழைகளை நெஞ்சுக்கு நேரே கூறுகின்றாய். இந்த துணிச்சல்மிக்க சவால்தான் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது.

ச.காவியா, கோப்பாய்.

### சோதனைகள் - சாதனைகள்

எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். வாசகர் வாசிப்புக்கு முரசே பிரதானம். இந்த உண்மையை உணர்ந்த வாசகர்கள் இதனை வாசித்து நேசித்துவருகின்றனர். விருப்பத்திற்கேற்ற விடயங்களை முரசு முன் வைப்பதால் மலர் மணம் கமழுகிறது. மனம் கவருகிறது. வியாழன்தோறும் விற்பனை நிலையங்களில முரசுக்கு முந்துகின்றனர். சோதனைகள் தாண்டும் முரசு சாதனை படைக்கும்.

எம்.சி.கலீல், கல்முனை - 05.

# அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு பலன்

## யாழ். போதனா வைத்தியசாலையில் நேர்முக தேர்வு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியின் பயனாக யாழ்.போதனா வைத்திய சாலை சிற்றூழியர்களை நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வு இடம்பெற்றுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் சிற்றூழியர்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு வைத்தியசாலை நிர்வாகத்தினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கிணங்க அமைச்சர் அவர்கள், ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்றதையடுத்து மேற்படி நேர்முகத் தேர்வு இடம்பெற்றது.

மேற்படி நேர்முகத் தேர்வில் ஆயிரக்கணக்கான இளைஞர் - யுவதிகள் பங்குபற்றியிருக்கின்ற நிலையில் தகுதியானவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய அணியில் மன்னார் வீரர்கள்

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தினால் 41ஆவது ஆசிய உதைபந்தாட்ட போட்டிக்காக இலங்கை 19வயது தேசிய உதைபந்தாட்ட அணியானது நவம்பர் மாதம் 6ஆம் திகதி தாய்லாந்து சென்று 16ஆம் திகதி இலங்கை திரும்பவுள்ளது.

இலங்கை தேசிய அணியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியை சேர்ந்த ஜோன்சன் மற்றும் கிசோர் ஆகிய மாணவர்கள் இலங்கை அணிக்காக ஆடுவதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மன்னாரில் தலைசிறந்த வீரர்களாக திகழ்வதுடன் மன்னாருக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

## தலவாக்கலை மக்கள் ஆர்ப்பாட்டம்

தோட்ட நிர்வாகத்தின் அசமந்தப் போக்கை கண்டித்து தலவாக்கலை - ஹொலிரூட் பகுதியைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர். இதில் 300ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

ஹொலிரூட் பகுதி தேயிலை தோட்டங்களில் உள்ள மரங்கள் தோட்ட நிர்வாகத்தால் வெட்டப்பட்டு வெளிநபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. அந்தப் பணத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு வழங்கப்படும் எனத் தோட்ட நிர்வாகம் முன்னதாக உறுதியளித்தபோதிலும், தற்போது நிறுவனம் நட்டத்தில் இயங்குவதால் குறித்த பணம் நிர்வாகச் செலவுகளுக்கு எடுக்கப்பட்டுவிட்டதாக தோட்ட முகாமையாளர் தொழிலாளர்களுக்கு அறிவித்துள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## இந்தியத் திருமண நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்!

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் றவூப் ஹக்கீம் இந்தியாவில் நடைபெறும் திருமண நிகழ்வொன்றுக்காக இந்தியா சென்றுள்ளார். அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம் ஹரீஸ், பைஸால் காஸிம், எம்.எஸ். தௌபீக் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் ஏற்கெனவே இந்தத் திருமண நிகழ்வுக்காக இந்தியா சென்றுள்ளனர். இது முக்கிய திருமண நிகழ்வு என்று அவர்கள் கூறியுள்ளனர். இந்நிலையில், கட்சிச் செலவிலா, அரச செலவிலா அல்லது தனிப்பட்ட செலவிலா இந்த முக்கிய திருமணத்துக்கான படையெடுப்பு என்பதை எவரும் தெளிவுபடுத்தவில்லை.

## நள்ளிரவில் வைத்தியசாலைக்குப் பாம்புடன் வந்த நோயாளி!

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

வெருகல் பிரதேச வைத்தியசாலைக்கு கடந்த ஞாயிறு அதிகாலை ஒரு மணியளவில் ஒருவர் பாம்புடன் வந்து சேர்ந்தார் என்று அந்த வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் பாக்கியதுரை வடிவுக்கரசி தெரிவித்தார்.

ஈச்சிலம்பற்று கிண்ணையடி வாசியான 27 வயதுடைய எஸ். கோபி என்பவரே இவ்வாறு வளலைப் பாம்புடன் வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்து வைத்தியரின் கதவைத் தட்டியவராகும்.

சனிக்கிழமை இரவு கோபி தனது வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் போது இந்த வளலைப் பாம்பு அவரது கழுத்தைச் சுற்றியுள்ளது. உடனடியாக தூக்கம் கலைந்து விழித்தெழுந்த அவரின் கழுத்தில் இந்தப் பாம்பு மாலையாகத் தொங்கியுள்ளதைக் கண்டுள்ளார்.

உடனே பாம்பை கழுத்தை விட்டுப் பிரித்தெடுக்க முயற்சித்துள்ளார். அத்தருணம் பாம்பு கையில் வளையமாகச் சுற்றிப் பிடித்துள்ளது. கடும் முயற்சியின்பின்னர் கையிலிருந்தும் பாம்பைப் பிரித்தெடுத்து போத்தல் ஒன்றினுள் போட்டு அடைத்துக்கொண்டு வைத்தியசாலைக்கு ஓடோடி வந்துள்ளார். பட்டவுடன் விஷம் ஊடுருவும் இந்தவித வளலை இன விஷப் பாம்பினால் அவர் பாதிக்கப்படவில்லை என்றபோதிலும் அவரை உடனடியாக திருகோணமலை வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைக்காக அனுப்பிவைத்ததாக வைத்தியர் பாக்கியதுரை வடிவுக்கரசி மேலும் தெரிவித்தார். தற்போது அவர் தேறிவருவதாக உறவினர்கள் கூறுகின்றனர்.

# ஒரு சதம் கொடுத்தால் ராட்சத கப்பல்!



**ஒரு** சதத்தை வைத்து இங்கு எதுவும் வாங்க முடியாது. அமெரிக்கா, கனடாவில் ஒரு சதத்தை penny என்பார்கள். அதை வைதது, அங்கேயும் எதுவும் வாங்க முடியாது. ஆனால், அமெரிக்க கடற்படை தலைமைச் செயலகத்துக்கு 1 அமெரிக்க சதத்துடன் போனால, ஒரு கப்பலை வாங்கலாம்.

காகிதக் கப்பல் அல்ல, நிஜக் கப்பல. அதுவும் சாதாரண கப்பல் அல்ல. அமெரிக்க வரலாற்றில் இடம்பெற்றுள்ள விமானம் தாங்கி கப்பல். அமெரிக்க கடற்படைக்காக கட்டப்பட்ட முதலாவது superc arrier இதுதான். பெயர் யு.எஸ்.எஸ். பொரஸ்ட்டல்.

இந்த கப்பல் தற்போது ஓய்வு பெற்றுள்ள நிலையில், இதை வெளிநாட்டு கடற்படைகளுக்கு விற்றுவிட முயற்சிகள் நடந்தன. எந்த நாடும் வாங்க முன்வரவில்லை. சரி. இனாமாக கொடுக்கலாம் என்று முயற்சி செய்து பார்த்தார்கள். யுத்த நினைவுச் சின்னங்களை வைத்திருக்கும் மியூசியங்களை கேட்டுப் பார்த்தார்கள். பெற்றுக்கொள்ள யாரும் முன்வரவில்லை.

அதற்கு காரணங்கள் இரண்டு. ஒரு காரணம், மிகப் பிரமாண்டமான இந்தக் கப்பலை கடலில் நிறுத்தி பராமரிப்பதற்கு ஏகப்பட்ட செலவாகும். இரண்டாவது, தற்போது இந்தக் கப்பல் உள்ள இடத்தில் இருந்து (பிலடெல்ஃபியா கடற்படை தளம்), இழுத்துச் செல்லவே மில்லியன் கணக்கான டொலர்கள் தேவை.

இப்படி அனைவராலும் கைவிடப் பட்ட கப்பலை, அமெரிக்கா டெக்சாஸ மாநிலத்தை சேர்ந்த ஆல்-ஸ்டார் மெட்டல்ஸ் என்ற நிறுவனம் விலை கொடுத்து வாங்கியிருக்கிறது. அந்த விலைதான், 1 சதம்!

கப்பலுக்கு விலை 1 சதம் என்று எப்படி நிர்ணயிக்கப்பட்டது?

இந்த நிறுவனம் பழைய கப்பல்களை வாங்கி அதில் இருந்து இரும்பு, மற்றும் உலோகங்களை பிரித்து விற்கும் நிறுவனம். இந்தக் கப்பல் மிகப்பெரியது என்பதால், அதை இழுத்துச்செல்ல ஏற்படும் செலவு, உடைப்பதற்கான செலவு, மீதி பாகங்களை டிஸ்போஸ் செய்வதற்கான செலவு எல்லாவற்றையும் கணக்குப் பார்த்து, கப்பலில் இருந்து பிரித்து எடுக்கக்கூடிய உலோகத்தின் மதிப்பு எவ்வளவு என்பதையும் கணிப்பிட்ட பின், தமக்கு சொற்ப இலாபமே கிடைக்கும் என்று சொல்லியது.

'வேண்டுமானால் இலவசமாகக் கொடுங்கள், எடுத்துச் செல்கிறோம்' என்றது நிறுவனம்.

ஆனால், தனியார் நிறுவனத்துக்கு எதையும் இலவசமாக கொடுக்க அமெரிக்க பாதுகாப்பு சட்டத்தில் இடமில்லை. இதனால் 1 சதம் என்று விலை நிர்ணயித்தார்கள்.

இந்தக் கப்பல், அமெரிக்க சரித்திரத்தில் இடம்பிடித்த கப்பல் என்றோமே. அந்த விபரம் என்ன?

1967ஆம் ஆண்டு, ஜூலை 29ஆம் திகதி, இந்தக் கப்பல் மேல்தளத்தில் பெரிய விபத்து ஒன்று ஏற்பட்டது. கப்பல் மேல்தளத்தில் இருந்த ரொக்கெட் ஒன்று, தவறுதலாக வெடித்தது. இது விமானம்தாங்கி கப்பல் என்பதால், மேல் தளத்தில் பல விமானங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

தவறுதலாக வெடித்த ரொக்கெட், கப்பல் மேல்தளத்தில் வெடிகுண்டு பொருத்தப்பட்டு புறப்பட தயாராக நின்ற விமானத்தை போய் தாக்கியது. அந்த விமானத்துக்குள் இருந்த இளம் விமானி ஜோன் மக்கெயின், விமானத்தில் இருந்து வெளியே குதித்து தப்பினார். ஆனால், அவரது விமானம் வெடித்தது. அதைத் தொடர்ந்து, கப்பல்தளத்தில் இருந்த மற்றைய விமானங்களும் வெடிக்கத் தொடங்கின.

அமெரிக்க கடற்படை வரலாற்றின் மிகப்பெரிய விபத்துக்களில் இதுவும் ஒன்று. 134 கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். 21 விமானங்கள் சேதமடைந்தன.

இளம் விமானி ஜோன் மக்கெயின், விமானத்தில் இருந்து வெளியே குதித்து தப்பினார் என்று சொன்னோமே.. அவருக்கு மார்பிலும் காலிலும் பலத்த அடி. அதிலிருந்து குணமடைந்தபின், மீண்டும் போர் விமானங்களை செலுத்தியபோது, அவரது விமானம் வியட்னாமில் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதிலும் உயிர்தப்பினார். ஆனால், வியட்னாமியர்களிடம் போர்க்கைதியாக சிக்கிக் கொண்டார். ஐந்தரை ஆண்டுகள் போர்க்கைதியாக இருந்தார். அதன்பின் விடுவிக்கப்பட்டு 1973ஆம் ஆண்டு அமெரிக்கா சென்றார்.


பின்னாட்களில் அரசியலில் ஈடுபட்டு செனட்டர் ஆனார். நாட்டுக்காக அவர்புரிந்த சேவை காரணமாக ஜெயிப்போம் என்ற நம்பிக்கையில், ஜனாதிபதி வேட்பாளராகவும் போட்டியிட்டார்.

ஆம். அந்த இளம் விமானிதான், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு, ஒபாமாவிடம் தோற்றுப்போன ஜோன் மக்கெயின் .



அன்று ஜோன் மக்கெயின்

இன்று ஜோன் மக்கெயின்



# தருணம் பார்த்து வந்திருக்கிறதா?

## பாகிஸ்தான் போர்க்கப்பல்!

கொழும்பில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்துகொள்வாரா, இல்லையா என்ற சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில், கொழும்பு துறைமுகத்துக்கு வந்துசேர்ந்துள்ளன பாகிஸ்தானின் இரு போர்க் கப்பல்கள்.

இதனையடுத்து கருத்துரைத்துள்ள அரசியல் அவதானி ஒருவர், இலங்கை தொடர்பாக இந்தியாவில் பெரிதாக சர்ச்சைகள் அடிபடும் நேரங்களில் கொழும்பில் என்ன நடக்கிறது என்பதை தொடர்ந்து கவனித்து வந்தீர்கள் என்றால், ஏதோ ஒரு பாகிஸ்தான் நடவடிக்கை அங்கு இருப்பதை கவனிக்கலாம்.

இலங்கை இராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சிகொடுப்பது தொடர்பான சர்ச்சைகள் உச்சத்தில் இருந்த நாட்களில், பாகிஸ்தானின் உயர்மட்ட இராணுவக் குழு கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது. இலங்கை இராணுவத்துக்கு தேவையான பயிற்சிகளை வழங்கத் தயார் என அறிவித்துவிட்டு சென்றது அந்தக் குழு.

தற்போது, கொமன்வெல்த் மாநாட்டை இந்தியா பகிஷ்கரிக்கவேண்டும் என்ற குரல்கள் எழுந்துள்ள நிலையில், பாகிஸ்தான் கடற்படைக்கு சொந்தமான 'கைபர்', 'நஸ்ர்' என்ற இரு போர்க் கப்பல்கள் கொழும்பு துறைமுகம் வந்து நங்கூரமிட்டுள்ளன. பாகிஸ்தான் கடற்படையின் நல்லெண்ண விஜயம் இது என கூறப்பட்டுள்ளது, என்று தெரிவித்துள்ளார்.

117 மீற்றர் நீளமான பி.என்.எஸ். கைபர் கப்பல், 263 மாலுமிகள் மற்றும் ஹெலிகொப்டர்களுடன் வந்துள்ளது. 302 மாலுமிகளையுடைய பி.என்.எஸ்.நஸ்ர், பாகிஸ்தான் கடற்படையின் எண்ணெய் கொள்கலன். இந்த இரு கப்பல்களும் கொழும்பில் 30ஆம் திகதிவரை நிற்கும் என கூறப்பட்டுள்ளது.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## இந்தியாவின் பிரசன்னம் அவசியம்!!

பொதுநலவாய மகாநாட்டுக்கு பல நாட்டுத் தலைவர்களும் வருகைதரவுள்ள நிலையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வருகைதரக் கூடாத என்றும், இந்தியா முற்றாக நிராகரிக்கவேண்டும் என்றும் தமிழ்நாட்டில் பல்வேறு தரப்பினர் வற்புறுத்தி போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து பிரதமர் முடிவை எடுப்பார் என்று அண்மையில் இந்திய மத்திய அரசு அறிவித்திருந்தது.

பின்னர் தமிழக சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றினார்கள். அத்தீர்மானத்தில் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மகாநாட்டை புறக்கணிக்கவேண்டும் என்றும் இந்திய மத்திய அரசுக்கு கோரிக்கை விடுப்பதாக அமைந்தது.

ஆனால் இந்திய பிரதமர் பொதுநலவாய மகாநாட்டில் கலந்துகொள்வது தொடர்பில் மத்திய அரசு இன்னும் திட்டவட்டமாக தனது முடிவை அறிவிக்கவில்லை. இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் பொதுநலவாய மகாநாட்டில் இந்தியா கலந்துகொள்வதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றார்.

இதேபோல் பொதுநலவாய மகாநாட்டில் கலந்து கொள்ளவேண்டிய முக்கிய தலைவராக கருதப்படும் பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரூன் மகாநாட்டில் கலந்துகொள்வார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. முதலில் அவர் கலந்து கொள்ளக்கூடாது என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது. எனினும் கெமரூன் கூறிய கருத்துக்கள் யதார்த்தமானது.

பொதுநலவாய மகாநாட்டில் கலந்துகொண்டு இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் தேவையான கருத்துக்களை முன்வைப்பதே பொருத்தமாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிடவுள்ளேன் என்றும் கூறியிருந்தார். கெமரூனின் கருத்து நூறுவீதம் சரியாகும். பிரச்சினையை சம்மந்தப்பட்ட இடத்தில், சம்மந்தப்பட்டவர்களுடன் பேசவேண்டும். அதைவிடுத்து வெளியில் நின்றுகொண்டு கதைப்பதில் அர்த்தமில்லை.

மகாநாட்டை இந்தியா புறக்கணித்தால் இந்தியாதான் தனிமைப்பட்டுவிடும் என்று இலங்கையின் தூதரக அதிகாரி ஒருவர் கூறிய கருத்து தமிழக அரசியல் தரப்புகளை அதிர்ச்சியூட்டியுள்ளது. அவர்கள் இலங்கையைப் பற்றி கூறுகின்ற கருத்துக்களைவிடவும் இலங்கை அதிகாரி கூறியது தவறு அல்ல என்பதும். அவர் எவற்றை அவ்வாறு கூறினார் என்பதும் புரிந்தவர்களுக்கு புரிந்திருக்கும்.

சல்மான் குர்சித் கொண்டிருப்பதுபோல் இந்தியாவின் பிராந்திய இறைமை மற்றும் தனித்துவம் என்பவற்றை கருத்தில் கொண்டும். இலங்கையில் தமிழ்பேசும் மக்களுக்கு இந்தியாவின் அக்கறையை உறுதிப்படுத்துவதற்கும். இப்பிராந்தியத்தில் எதிர்காலத்தை சிந்தித்தும் இந்திய மத்திய அரசு முடிவை எடுக்கவேண்டும்.

தமிழ் கூட்டமைப்பு கலந்து கொள்ளப் போவதில்லை என்று கூறியிருப்பது ஒரு பொருட்டே அல்ல. பார்வையாளர்கள் வரிசையில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனாங்கள் ஆர்வமுள்ளவர்களுக்கு வழங்கப்படும். இதில் எவ்வித இராஜதந்திரமும் இல்லை.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# சிவாஜிலிங்கத்தின் தாகம் இன்னொரு முள்ளிவாய்க்கால்

கடந்த இருபத்தி ஐந்தாம் திகதி வட மாகாண சபையின் கன்னி அமர்வு நடைபெற்றது. அதில் உறுப்பினர்கள் தமது விடயதானங்களை எவ்வளவுக்குச் சிறப்பாக நிகழ்த்த வேண்டும் என்பதில் அதிக சிறத்தை எடுத்துக்கொண்டு உரையாற்றியதை காணக் கூடியதாக இருந்தது.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் மற்றும் மாகாண சபையின் எதிர்க்கட்சியின் தலைவர் க.கமலேந்திரன் ஆகியோரின் உரைகள் கருத்தாளம் மிகுந்ததாகவும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும், சர்வதேசம் நோக்கியும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை முன்வைப்பதாகவும், தமிழர்களின் நியாயமான எதிர்பார்ப்புக்களை எடுத்துரைப்பதாகவும் இருந்தது.

முதல் அமர்வு மிகவும் சுமூகமான சூழலில் நடைபெற்றது. அந்த அமர்வில் பலரின் முகச்சுழிப்புக்குரிய பேச்சாகவும் நடத்தையாகவும் அமைந்திருந்தது. சிவாஜி லிங்கத்தின் உரையும், உரையின்போது அவர் பிடிக்க முயற்சிசெய்த அபிநயமும்தான்.

அவர் தனது உரையில், “தமிழ் மக்களுக்கு உள்ளக சுயாட்சியுடனான தீர்வினை வழங்கவேண்டும் என்பதை மத்திய அரசாங்கம் விளங்கிக் கொள்ளவேண்டும். தமிழ் மக்களுக்கு ஆட்சி அதிகாரத்தினை வழங்க மத்திய அரசாங்கம் மறுக்குமாயின் கிழக்குத் திமோர், தென் சூடான், கொசோவோ போன்று நாமும் தமிழீழத்தில் ஆட்சி அமைக்கவேண்டியேற்படும். வடக்கு, கிழக்கில் இணைந்த தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களுக்கான தன்னாட்சி அலகினை அமைப்பதே எமது மக்களின் கனவாகவுள்ளதால் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்'' என்று கூறினார்.

சிவாஜிலிங்கத்தின் உரையை கேட்டபோது, முன்னர் ஒரு தடவை பாராளுமன்றத்தில் குதிரைக் கஜேந்திரன் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சு ஞாபகம் வந்தது. அதாவது, “மீண்டுமொரு யுத்தத்தை தமிழர்கள் மீது சிங்கள அரசு திணிக்குமானால், பாரிய விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும். எனவே யுத்தத் தயாரிப்புக்களுக்கு முன்னதாக வடக்கில் நிலைகொண்டிருக்கும் படைகளுக்கு அதாவது, நாற்பதாயிரம் சவப்பெட்டிகளை தயார் செய்துவிட்டு யுத்தத்தை ஆரம்பிக்கட்டும்” என்ற விதமாகப் பேசியிருந்தார்.

இறுதியில் என்ன நடந்தது. புலிகள் கூண்டோடு அழிந்ததும், அதே குதிரைக் கஜேந்திரன் பேசிய தீவிர தமிழ்த் தேசிய இனவாதத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாமல் தேர்தலில் கஜேந்திரனை தூக்கி எறிந்தார்கள்.

நாற்பதாயிரம் சவப்பெட்டிகளை தயார்செய்து கொள்ளுங்கள் என்று பேசி புலிகளை உசுப்பேற்றியதோடு, தன்னையும் தமிழ்த்தேசிய உணர்வாளனாகக் காட்டிக்கொண்டார். அதே சபையில் கூட்டமைப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த சம்மந்தன், மாவை சேனாதிராசா, சுரேஸ், செல்வம் போன்றவர்கள்கூட தமது பதவிக்காலத்தில் அவ்வாறு உரையாற்றியதில்லை.

இப்போது மாகாண சபையில் சிவாஜிலிங்கம் இவ்வாறு கூறியிருக்கின்றார். இதே சிவாஜி லிங்கத்துக்காக மாகாண சபைத் தேர்தலில் வாக்குச் சேகரித்த ஒருவர் நல்லூர் தேர் உற்சவத்தில் கலந்து கொண்டு பலாலி வீதியால் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தவர்களை சட்டத்தரணி சிறீகாந்தாவின் அலுவலகத்துக்கு முன்னால் நின்றுகொண்டு வழிமறித்து சிவாஜியின் பிரசாரத் துண்டுப் பிரசுரங்களை வழங்கிக் கொண்டிருந்தார்.

அவ்வாறு துண்டுப்பிரசுரம் வழங்குவது தேர்தல் விதிகளுக்கு மாறானது என்பது வேறு விடயம். இதுதான் சிவாஜியின் தேர்தல் அலுவலகம் என்று கூறினார். சிவாஜி யார் என்று தெரியவில்லையே என்று பொதுமக்கள் தெரியாததுபோல் கூறியபோது, அந்தப் பிரகிருதி, “சிவாஜியைத் தெரியாதோ, அவர் பிரபாகரனின்ர மச்சான் என்றார்”. எப்படி மச்சான் என்று கேட்டபோது, “அதுவோ பிரபாகரனின்ர தாயை கடைசிக் காலகட்டத்தில பார்த்ததோடை கொள்ளிவைத்ததும் அவர்தானே, அதாலதான் மச்சான்'' என்று ஒரு விளக்கத்தையும் கொடுத்தார். இந்த தகவலை அப்போதைய தினமுரசு தாங்கியும் வந்திருந்தது.

பிரபாகரனின் தாயார் தனது இறுதிக்காலத்தில் முதுமையாலும், நோயினாலும், தனது மகனை(பிரபாகரன் கூறியதுபோல்) கனடாவில பார்க்கமுடியாமல் போயிடுமோ என்ற ஏக்கத்தினாலும் வாழ்வுக்கும் சாவுக்கும் போராடிக் கொண்டிருந்தபோது சிவாஜி உதவி செய்ததை எல்லோரும் மனிதாபிமானமாக நினைத்திருப்பார்கள். ஆனால் அந்த உதவியை எங்கே பயன் படுத்தினார், எவ்வாறு அதற்கான பலனை அறுவடை செய்து கொண்டார் என்பதும் இப்போது புரிந்திருக்கும். பிரபாகரனின் மனைவி மதிவதனியின் ஒன்றைவிட்ட சகோதரன் என்று கூறியிருந்தாலும் அது ஒற்றைப் பொய்யாகப் போயிருக்கும், செய்த உதவியை அரசியலுக்காக அறுவடை செய்தது தமிழ் தேசியத்தில் சாதாரணமாகப் போய்விட்டது.

உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதும், முள்ளிவாய்க்காலில் பதவிப்பிரமானம் செய்தது. அங்கு அவலச்சாவை எதிர்கொண்டவர்களின் தியாகங்களை கொச்சைப் படுத்துவதாக இருந்தது. என்று இன்னும் தமிழ்த் தேசிய ஊடகங்கள் எழுதிக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் அங்கே பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவேண்டாம் என்று கூட்டமைப்பின் நிழல் தலைமையாக கூட்டமைப்பினரால் மதிக்கப்படும் ஆயர் கூறியதையும் மீறி சிவாஜி பதவிப்பிரமானம் செய்து கொண்டதால் ஆயர் அவமானப் படுத்தப்பட்ட கடுப்பில் இருப்பதும் வேறுவிடயம்.

முன்னர் தமிழ்த் தேசியத்தின் பெயரால் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப் பட்டவர் பின்னர், அதே தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டுச் சென்றபோது தமிழ் மக்கள் சிவாஜியை நிராகரித்தார்கள். இப்போது அதே தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு தேசிய உணர்ச்சி அலையில் எடுபட்டு மாகாண உறுப்பினராகியுள்ளார்.

அவை ஒன்றும் ஆச்சரியங்களில்லை. தமிழ்த்தேசியம் பேசிக்கொண்டு நாய், பூனை, நரி, எலி என்பவை எல்லாம் பதவிகளுக்கு வந்துவிடுகின்ற காலம் இரு என்றும், வழங்கப்பட்ட வாக்குகள் தனிநபருக்கானது அல்ல, அது கூட்டமைப்புக்கானது என்றும் பலர் வியாக்கியானம் கூறுகின்றார்கள்.

சிவாஜியின் பேச்சு தமிழ் மக்களின் விருப்பத்துக் குரியதாக ஒருபோதும் இருக்கவில்லை. அது சிவாஜிலிங்கத்தின் தாகம் தமிழீழத் தாயகமாக இருக்கலாம், என்றே பார்க்கப்படுகின்றது. அதுதவிரவும் இவ்வாறான கருத்துக்கள் எதிரிகளை விழிப்படையச் செய்வதோடு, தமிழ் மக்களின் மீட்சியை காட்டிக்கொடுப்பதாகவுமே அமைந்துள்ளது.

அடுத்த தேர்தலில் தோல்வி அடைந்துவிட்டால் ‘தமிழ் மக்களுக்கு அறிவில்லை’ என்று கூறக்கூடியவர்களாகவே தமிழர் அரசியலில் முகம்காட்டும் பலர் இருக்கின்றார்கள். இந்த நிலையில் பதவிக்கு வந்ததும், திட்டங்களை வகுக்காமல், அது பற்றி கலந்துரையாடல்களை நடத்தாமல் உணர்ச்சிப் பேச்சுக்களை பேசியோரால் தமிழ் மக்களுக்கு அழிவுகளைத்தவிர வேறு எதையும் இதுவரை பெற்றுக் கொடுக்கமுடியவில்லை.

அதே தவறையே தற்போதும் செய்யமுற்படுவது தமிழ் மக்களை மீண்டு எழ விடாமலும், அடுத்த கட்டம் நோக்கி நகரவிடாமலும் தடுப்பதற்கே வழிவகுக்கும் என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ் மக்களுக்கு பிரதிநிதிகளானால் மட்டும் போதாது. இலக்குளை நோக்கி சாணக்கியமாக நகர்வதற்கு தேவையான தந்திரோபாயங்களையும் புரிந்துகொள்ள வேண்டும். அது தெரியாவிட்டால், எல்லாவற்றையும் மூடிக்கொண்டு, பதவியின் ஊடாக கிடைப்பவற்றை அனுபவித்துக் கொண்டும், தனது குடும்பத்துக்கு சொத்துச் சேர்த்துக் கொண்டும் இருந்துவிடவேண்டும்.

தென் சூடான், கொசோவோ, கிழக்குத்திமோர் போன்ற நாடுகளில் நடந்தது வேறு விடயம், இலங்கையில் நிலைமை வேறுவிதம், இருதுருவ உலக அரசியல் போக்கையும், பிராந்திய அரசியல் காய் நகர்த்தல்களையும், தமிழ் மக்களின் அரசியல் யதார்த்த நிலையையும், மிகத் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். சிவாஜிக்கு வாயில் இருக்கும் வீரம் உடலிலும் இல்லை. பலரின் நிலைமையும் இது தான். உண்மையையும், யதார்த்தத்தை தெளிவாக தெரிந்து வைத்திருப்பவர்கள் அறிவையே ஆயுதமாகப் பிரயோகிப்பர்.

அதிகப்பிரசங்கிகளும், முட்டாள்களும் வெற்றுப் பேச்சினாலும், விவேகமற்ற நடத்தையினாலுமே தமது பிரதாபங்களை வெளிக் காட்டுவார்கள். இது தமிழ் மக்களுக்குத் தெரியும்.

**மதியூகி**

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நீங்கேனம்மா — இயக்கமானீங்க



மாதம் இருமுறை பிள்ளைகளை கொண்டுவந்து திருப்பியனுப்பும்போதும் அவர்களுக்குத் தேவையான சவர்க்காரம் முதற்கொண்டு யாவும் வாங்கிக் கொடுக்க வேண்டும். எல்லாவற்றையும் நிறைவேற்ற பணமே முன்னுக்கு தேவை. கிடைத்த நிவாரணத்தை விற்றும், தெரிந்தவர்களிடம் கையேந்தியும் சமுர்த்தி வேலைக்குப் போய் கிடைக்கிற அரிசி, மா, சீனியை விற்றும் சமாளித்தாள்.

அப்போதுதான் வெளிநாட்டுத் தொடர் பொன்று கிடைத்தது. தொடர்பில் வந்தவன் அக்கா அக்காவென தினமும் இலங்கை நேரம் 6 மணிக்கு அவளைத் தொலைபேசியில் தொடர்புகொள்வான். அவளுக்கு சுயதொழிலாக கடையொன்று போட்டுத் தருவதாகவும் சைக்கிள் எடுத்துத் தருவதாகவும் பிள்ளைகளின் கல்விக்கு உதவுவதாகவும் வாக்குறுதி கொடுத்தான். 3 வாரம் கதைத்து முடிய, 5ஆயிரம் ரூபா அவளது வங்கிக்கு அனுப்பிவைத்தான்.

5ஆயிரம் ரூபா அனுப்பிவிட்டு தினமும் தொலைபேசியில் பேசி நம்பிக்கையை விதைத்தான். 2 மாதம் தொடர்ந்து அழைப்பதும் இதோ கடை திறப்பதற்கு ஒரு இலட்சரூபா வருகிறதென கதைசொல்லிக் கொண்டிருந்தவன் தொடர்பையறுத்துக் கொண்டான். அவன்கொடுத்த தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்தும் பதிலில்லை.

4 மாதம் முடிந்தது. தொலைபேசியும் இல்லை, உதவியும் இல்லை. உதவுகிறேன் என வந்தவனும் பொழுதுபோகக் கதைத்திருக்கிறான் போல. ஒரு கட்டத்தில் சலிப்பும் வெறுப்பும் ஒன்றாகி ஏனடா வாழ்க்கையென்ற நிலமையாகிவிட்டது.

கையில் முதல் இல்லாமல் எதையும் செய்யமுடியாத நிலைமை. நாளுக்கு நாள் ஏறிப்போகிற விலைவாசியில் சம்பலும் சோறும் கொடுக்கவே பெரிய திண்டாட்டமாக வாழ்க்கையை எப்படிக் கொண்டு போவதென்று சொல்லமுடியாத துயரை இந்தப் பிள்ளைகளுக்கு எப்படிப் புரியவைப்பதென்று தெரியவில்லை. ஒன்றாய் பிள்ளைகளையும் அழித்துத் தானும் செத்துப்போய்விட வேணும் போலவுமிருந்தது.

(முற்றும்)



# புலிகளின் வதை முகாமில்

வதை 85

## மணியம்

அரசொன்றை உருவாக்கி வருவதாகவும், அதன் ஓர் அங்கமாக தலைவர் பிரபாகரனின் ஆலோசனைப்படி சிறைக் கூடங்களை அமைத்து, அவற்றில் தம்மால்

> இதுதான் அவர்கள் சொன்ன அந்த ஆறுதலான செய்தி. எனக்கு இந்தத் தகவலைச் சொன்னவர்கள் சாதாரண மானவர்கள் அல்லர். முன்னர் புலிகள் இயக்கத்தில் முக்கிய பொறுப்புகளில் இருந்தவர்கள்.

அவர்கள் கூற்றிலிருந்து ஒன்று தெரியவந்தது.

அதாவது இதற்குமுன்னர் புலிகளால் கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் கேள்வி நியாயமின்றி கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதே அது. மேலும் அவர்கள் சொன்ன தகவலில் இன்னொரு முக்கிய விடயமும் உள்ளடங்கி இருந்தது. அந்தத் தகவலின்மூலம் எனதும், என்னைப் போன்ற பலரினதும் மண்டையை நீண்ட நாட்களாகக் குடைந்துகொண்டிருந்த ஒரு கேள்விக்கு ஓரளவு விடை கிடைத்தது.

அதாவது, பல ஆண்டுகளாக புலிகள் ஏராளமானோரைக் கொலை செய்துவந்திருக்கின்றனர். அவ்வாறு கொலை செய்யப்படுபவர்களின் உடல்களை புலிகள் என்ன செய்கிறார்கள் என்ற கேள்வி எம்மில் பலருக்கு இருந்து வந்தது.

ஆரம்பத்தில் புலிகள் கொலை செய்யப்படுபவர்களின் உடலை எங்காவது புறம்போக்கான இடங்களில் கொண்டு சென்று புதைக்கிறார்கள் என்றுதான் நாம் நீண்டகாலமாக நம்பி வந்தோம். ஆனால் புலிகள் அவ்வாறான முட்டாள்தனமான செயலைச் செய்யவில்லை என்பதை, என்னுடன் கதைத்த முன்னாள் புலி உறுப்பினர்கள் உறுதிப்படுத்திவிட்டார்கள்.

அதாவது "அப்ப பிடிபட்டிருந்தால் உங்கடை சாம்பல் எப்பவோ காத்தோடை கலந்திருக்கும்" என்ற அவர்களின் கூற்று ஓர் உண்மையைப் புட்டு வைத்தது. அதாவது, புலிகள் தம்மால் கொல்லப்படுபவர்களின் உடலை அடையாளம் காணமுடியாதவாறு எரித்து அழித்துவிடுகிறார்கள் என்ற உண்மை அதில் தொக்கி நிற்கிறது. என்னே முன்யோசனை! (சைவத் தமிழர்கள் இறந்த உடல்களை எரிப்பதுதான் வழமை.

தம்மால் கொலை செய்யப்படுபவர்களை புலிகள் புதைப்பதே இல்லை, எரிப்பதே வழமை என்ற உண்மையைப் பின்னர் எம்முடன் நாவற்குழி - கோவிலாக்கண்டி திறந்தவெளிச் சிறைச்சாலையில் இருந்த புலிகளின் முன்னாள் புலனாய்வாளன் ஒருவனும் உறுதிப்படுத்தினான். புலிகளின் புலனாய்வுப் பிரிவினர்களில் மிகவும் கொடூரமானவன் என வர்ணிக்கப்படும் 'மல்லி' என்பவன் துனுக்காய் வதை முகாமுக்குப் பொறுப்பாக இருந்த போது, இந்த புலனாய்வாளன் மல்லியின் கீழ் செயற்பட்டவன். மல்லியின் உத்தரவுப்படி பல கொலைகளை இவனே செய்திருக்கிறான். இப்படியானவர்கள் உரிய முறையில் விசாரிக்கப்பட்டால், பல தகவல்கள் வெளிவரக்கூடும். எமக்கு இந்த புலனாய்வாளன் தெரிவித்த சில மேலதிக தகவல்கள் பற்றிப் பின்னர் தெரிவிப்பேன்.

ஏதோ எனது அதிர்ஷ்டம், புலிகளின் கேள்வி நியாயமற்ற கொலை வெறியாட்டத்தின்போது நான் கைதுசெய்யப்படாமல் தப்பியது. அதன்காரணமாகத்தான் நான் இன்னமும் கொலை செய்யப்படாமல் புலிகளின் விசாரணை (சித்திரவதை)க் கைதியாக உயிர்வாழ முடிந்தது. இதுபற்றி நான் எதுவும் பிரஸ்தாபிக்காமலே, இடையிடையே என்னுடன் கதைக்கும் அம்புறோஸ் என்ற புலனாய்வாளன் எனக்கு விளக்கம் அளித்தான்.

அதாவது, வடபகுதி முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத காலத்தில், தம்மால் கைதுசெய்யப்படுபவர்களை வைத்து விசாரிக்கவோ, பராமரிக்கவோ தமக்குப் போதிய வசதிகள் இல்லாமையால், அவர்களைக் கொல்லவேண்டிய கட்டாயத்தில் தாம் இருந்ததாகவும், இப்பொழுது அந்த நிலை இல்லையென்றும், தமக்கு என்று நிலையான தளப்பகுதிகள் உருவாகிவிட்டதால், தாம் தமிழீழத்துக்கான அரசொன்றை உருவாக்கி வருவதாகவும், அதன் ஓர் அங்கமாக தலைவர் பிரபாகரனின் ஆலோசனைப்படி சிறைக் கூடங்களை அமைத்து, அவற்றில் தம்மால் கைது செய்யப்படுபவர்களை அடைத்து வைத்து 'முறையான' விசாரணைகளை நடாத்தி 'தண்டனை' வழங்குவதாகவும் அவன் எனக்கு 'விளக்கம்' அளித்தான்.

ஒருமுறை அம்புறோஸ் என்னுடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது, அருகே ஒரு கைதியை விசாரணை செய்துகொண்டிருந்த புலிகளின் இன்னுமொரு விசாரணையாளன் ஒருவன், அந்தக் கைதியின் மீது மிகவும் மோசமான தூசண வார்த்தைகளை பிரயோகித்து பலத்த குரலில் விசாரணை நடாத்திக்கொண்டிருந்தான். இன்னொரு பக்கம் வேறு ஒரு விசாரணையாளன், ஒரு கைதியை தடி ஒன்றினால் மிகவும் பலமாகத் தாக்கிக் கொண்டிருந்தான். அடி தாங்க முடியாமல் அந்தக் கைதி கூக்குரல் இட்டுக் கொண்டிருந்தார்.

கூக்குரல் இட இட அடி கூடியதே தவிரக் குறையவில்லை. இந்தக் காட்சிகள் எனது புலனைத் தாக்குகின்றன என்பதை உணர்ந்த அம்புறோஸ், பெரும் அசௌகரியத்துக்குள்ளாவதை என்னால் அவதானிக்க முடிந்தது.

இருந்தும் அவன் தனது ஆட்களின் செயற்பாடுகளை நியாயப்படுத்தவே முயன்றான். அதாவது அவனது கூற்றுப்படி, கைதிகள் உண்மைகளைக் கூறாமல் பொய் பேசுவதால் அவர்களைத் தூசண வார்த்தைகள் ஏசுவதும், தடிகளால் தாக்குவதும் தவிர்க்க முடியாததாக இருக்கின்றது என அவன் சொன்னான். அவன் அத்துடன் தனது நியாயத்தை நிறுத்தவில்லை. ரஸ்யா, சீனா போன்ற நாடுகளிலும் புரட்சி நடைபெற்ற காலங்களில் கம்யூனிஸ்ட்டுகள் தமக்கு எதிரானவர்களைக் கைதுசெய்ததும், சிறை வைத்ததும், சித்திரவதை செய்ததும், ஏன் கொலை செய்ததும் நடந்து வந்திருக்கிறது தானே எனத் தெரிவித்து, புலிகளது நடவடிக்கைகளை நியாயப்படுத்த முயன்றான்.

அவனது கூற்றில் எனக்கு புதுமையாக எதுவும் தென்படவில்லை. ஏனெனில் மெத்தப் படித்தவர்கள் எனக் கூறிக்கொள்ளும் பலர் இன்றும்கூட, பாசிசவாதி - கொடுங்கோலன் ஹிட்லரையும், மாபெரும் பாட்டாளி வர்க்கப் புரட்சி வாதி ஸ்டாலினையும் ஏகத்தொனியில் ஒரே தராசில் வைத்து 'சர்வாதிகாரிகள்' எனக் கூறுவதுண்டு. அப்படியிருக்க ஆயுதங்களைத் தெய்வமாகவும், கொலை செய்வதைப் புனிதப் பணியாகவும் கருதும் புலிகளின் ஓர் உறுப்பினன், இவ்வாறு வாதங்களை முன்வைப்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

இதுவரை என்னை விசாரித்த புலிகளின் விசாரணையாளன் தயாபரனின் விசாரணைகளின் முடிவாக, என்ன விடயத்தை புலிகள் என்னிடம் கண்டுபிடித்துள்ளார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை இனிமேல்தான் முக்கியமான கட்டம் வர இருக்கிறதோ என்னவோ? அப்படியான ஒரு நிலை ஏற்படுமாயின், இன்னும் பலவிதமான சித்திரவதைகளும் காத்திருக்கின்றன என்பதுதான் அர்த்தம்.

இந்த மாதிரியான ஒரு சூழ்நிலையில் 'இறைச்சிக்கடை' என அழைக்கப்படும் வரணி சித்திரவதை முகாமில் இருந்து சில கைதிகள் எமது முகாமுக்கு அழைத்து வரப்பட்டனர். வந்தவர்கள் இருந்த கோலத்தைப் பார்த்த போதும், அவர்கள் சொன்ன கதைகளைக் கேட்டபோதும் எமக்கு அதிர்ச்சியைத் தவிர வேறு எதுவும் ஏற்படவில்லை.

### பொய்க் குற்றச்சாட்டுகளைப் புனைவதிலும் வதந்திகளைப் பரப்புவதிலும் கோயபல்ஸ்சையும் விஞ்சிய புலிகள்!

வரணி 'இறைச்சிக்கடை' முகாமிலிருந்து எமது சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டவர்கள் வரும்போதே ஒழுங்காக நடக்க முடியாத நிலைமையில் தான் வந்து சேர்ந்தார்கள். ஒருவரின் காதுகள் அறுக்கப்பட்டிருந்தது. இன்னொருவருக்கு மூக்கு நுனி வெட்டப்பட்டிருந்தது. மற்றொருவருக்கு உதடு கிழிக்கப்பட்டிருந்தது. விரல் நகங்கள் பிடுங்கப்பட்டிருந்தன. (எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் பெருவிரல்களில் ஒன்று பிளேட்டினால் கீறப்பட்டது)

அவர்களில் ஒருவர் ஏற்கெனவே அறிமுகமானவர். மகேஸ்வரன் என்ற பெயருடைய அவர் வேலணையைச் சேர்ந்தவர். உடுப்பிட்டியில் திருமணம் செய்திருந்தார். முதலில் பொலிஸ் சேவையில் பணியாற்றிய அவர், பின்னர் அதிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராகச் சேர்ந்து கடமை புரிந்தார். கைதுசெய்யப்படும்போது யாழ்ப்பாண குதத்தில் பணி புரிந்துகொண்டிருந்தார்.

அவர் யாழ்ப்பாணத்தில் வேலை செய்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நேர் எதிரிலேயே எமது யாழ். புத்தக நிலையம் அமைந்திருந்ததாலும், அவருடன் எமது கட்சியைச் சேர்ந்த தோழர் சிவதாசன் (பின்னாளில் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்) அவர்களும் அங்கு பணிபுரிந்ததாலும், சில வேளைகளில் மதிய ஓய்வு நேரங்களில் மகேஸ்வரன் எமது கடைக்கு வந்து எம்முடன் சிறிதுநேரம் உரையாடிவிட்டுச் செல்வது வழக்கம். அத்துடன் அவரது சகோதரிகளில் ஒருவர் எமது கட்சி அனுதாபியான எமது ஊரைச் சேர்ந்தவர் ஒருவரைத் திருமணமும் செய்திருந்தார்.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்



74

பா.ராகவன்

மாறாக, தங்கள் திட்டத்தின் இன்னொரு பகுதியாக, உள்ளூர் மக்கள் நிலம் வாங்குவதற்குக் கடன் கொடுக்கவும் அவர்கள் தவறவில்லை. கடன்வாங்கி, நிலம் வாங்கும் அராபியர்கள், உரிய காலத்தில் வங்கிக்கடனைத் திருப்பிச் செலுத்தா விட்டால், நோட்டீஸ் எல்லாம் அனுப்பிக் கொண்டிராமல் நேரடியாக அந்த நிலங்களைக் கையகப்படுத்தத் தொடங்கிவிடுவார்கள்.

இன்னொரு உத்தியையும் அல்ல. வங்கிகள் விரும்பியிருந்தால் வட்டி மூலமே எத்தனையோ கோடிகள் லாபம் பார்த்திருக்கலாம். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. மாறாக, ஒரு துண்டு நிலம் கிடைத்தாலும் விடக்கூடாது என்பதில் மட்டுமே கவனமாக இருந்தார்கள். தமது நோக்கத்திலிருந்து இம்மியும் பிசகாமல் இருந்ததுதான் யூதர்களின் மிகப்பெரிய சாதனை. அது சரியான நோக்கம் தானா என்பதெல்லாம் அப்புறம் யோசிக்க வேண்டிய விஷயம்.

அவற்றில் எந்த ஒரு கேள்வியும் பாலஸ்தீனத்து அராபியர்களுக்குத் தோன்றவேயில்லை என்பது மிகவும் வியப்பான விஷயம். நிறைய பணம் கிடைக்கிறது என்கிற ஒரே காரணத்தால் அவர்கள் தமது நிலங்களையெல்லாம் யூதர்களுக்கு அளித்து விட்டார்கள்.

யூத நில வங்கி வாங்கும் நிலங்களிலெல்லாம் உடனடியாக யூதக் குடியிருப்புக்கள் ஏற்படுத்தப் பட்டன. அவர்கள் விளைநிலங்களில் கூட சாகுபடி செய்யவில்லை. அங்கும் குடியிருப்புக்களை மட்டுமே உருவாக்கினார்கள். மலைப்பாங்கான பகுதிகள், பாலைவெளிகள், பொட்டல்காடுகள், நதிப்படுகைகள் என்று எந்த இடம் கிடைத்தாலும் குடியிருப்பை நிறுவிட யூதர்கள் தயாராக இருந்தார்கள்.

சிலகாலம் இப்படியாக அவர்கள் பாலஸ்தீனில் நிலங்களை வாங்கிச் சேர்த்துக்கொண்டிருந்தார்கள். அதற்குள் மாநிலம் முழுவதும் நிலவங்கிகளுக்கு மிகப்பெரிய மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டிருந்தது. பேங்கர்கள் என்று சொல்லப்பட்ட வங்கி அதிகாரிகள் மிகப்பெரிய மனிதர்களாக மதிக்கப்பட ஆரம்பித்தார்கள்.

முஸ்லிம் பண்ணையார்கள் இருந்த இடங்களிலெல்லாம் யூதப் பண்ணையார்கள் தோன்றிவிட்டார்கள். பணம் அதிகம் இருப்போரே மதிக்கத் தகுந்தவர்கள் என்னும் பொதுவான



அவர்கள் கடைப்பிடித்தார்கள். கடன் வாங்கவரும் அராபியர்களிடம் முதலில் எளிய வட்டி விகிதங்கள் மட்டுமே சொல்லப்படும். பெரிய கஷ்டம் ஏதும் வராது என்று நம்பும் அரேபிய முஸ்லிம்கள் நிறைய கடன்பெற்று, நிலங்களை வாங்குவார்கள். பத்திரங்களை வங்கியில் அடகுவைப்பார்கள்.

ஆனால் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் நீடிக்குமானால் வட்டிவீதங்கள் கண்ணுக்குத் தெரியாமல் ஏற ஆரம்பித்துவிடும். பெரிய படிப்பறிவு இல்லாத பாலஸ்தீனத்து அராபியர்களுக்கு, வங்கி முதலிலேயே வழங்கும் கடன் விதிமுறைகள் அடங்கிய தாளை முழுவதுமாகப் படித்துப் புரிந்துகொள்ளக்கூட ஒரு நாளும் முடிந்ததில்லை.

இதன் விளைவு என்னவானது என்றால், ஏராளமான அரேபிய நிலச்சுவாந்தர்கள் நிலவங்கியில் கடன்பெற்றே ஓட்டாண்டியாகிப் போனார்கள். திருப்பிச்செலுத்தும் காலம் அதிகரித்துக்கொண்டே போக, வட்டி விகிதம் மலையளவு உயர்ந்து கழுத்தை நெரித்தது. வழியில்லாமல் அவர்கள் தமது நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை வங்கியிடமே விற்றுவிட நேர்ந்தது. அப்படி விற்கப்படும்போது கூடுதலாகப் பணம்கேட்காமல், வாங்கிய கடன் தொகைக்கே சமமாக விலையை நிர்ணயித்து யூதர்கள் கழித்துவிடுவார்கள்! தர்மம்!

ஒரு விஷயம் சொல்லவேண்டும். யூதர்களின் நிலவங்கிக்கு, நிலம் வாங்குவது ஒன்றுதான் குறிக்கோளாக இருந்ததே தவிர, பணம் சம்பாதிப்பது

உலகில் வேறெந்த ஒரு இனமும் இத்தனை திட்டமிட்டு ஒரு காரியம் செய்ததாகச் சரித்திரமே இல்லை. அதுவும் இரகசியமாக. ஒரு ஈ, காக்கைக்குக்கூடத் தங்கள் நோக்கம் தெரிந்துவிடாமல்!

அராபியர்கள் இப்போதாவது சற்று விழித்துக்கொண்டு யோசித்திருக்கலாம்.

♦ஏன் இந்த வங்கிகள் சந்தை விலையைவிட இரண்டரை மடங்கு அதிக விலை கொடுத்து நிலங்களை வாங்குகின்றன?

♦அப்படி வாங்கப்படும் நிலங்களிலெல்லாம் ஏன் யூதக்குடியிருப்புக்கள் மட்டுமே நிறுவப்படுகின்றன?

♦முயற்சிசெய்தாலும் வங்கி வாங்கிய நிலத்தை ஒரு முஸ்லிம் ஏன் திரும்ப வாங்க முடிவதில்லை?

♦பாலஸ்தீனில் ஏற்கெனவே உள்ள யூதர்களின் எண்ணிக்கை எல்லாருக்கும் தெரியும். இப்படிப் புதிதாக வங்கி வாங்கும் நிலங்களில் வந்து குடியமரும் யூதர்களும் புதியவர்களாக இருக்கிறார்களே, இவர்களெல்லாம் எங்கிருந்து வருகிறார்கள்? வங்கி நிலம் வாங்கியது தெரிந்ததும் சொல்லி வைத்த மாதிரி வந்து குடியமர்கிறார்களே, இவர்களுக்காகத்தான் வங்கி நிலங்களை வாங்குகிறதா? அல்லது தற்செயலாக நடக்கிறதா?

♦இந்த வங்கிகளின் செயற்பாடுகள் முழுவதுமாக அரசுக்குத் தெரியுமா? இது பற்றி அரசின் கருத்து என்ன?

♦ஏராளமாகப் பணம் கொடுத்து தரிசு நிலங்களை வாங்கும் வங்கிகளுக்குப் பணம் எங்கிருந்து வருகிறது? யார் தருகிறார்கள்?

கருத்தாக்கம் மிக வலுவாக அங்கே கடைப்பிடிக்கப்பட ஆரம்பித்தது. அதன் அடிப்படையில் பாலஸ்தீனில் யூதர்களுக்கு மீண்டும் செல்வாக்கு ஏற்பட ஆரம்பித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் யூதர்கள் இன்னொரு நடைமுறையை அறிமுகப்படுத்தினார்கள். மிரட்டல்கள் மூலம் நிலங்களைப் பெறுவது என்பதே அது.

அதுவரை தாமாக நிலங்களை விற்க முன்வரும் முஸ்லிம்களுக்கு அதிகப் பணம் கொடுத்து நிலங்களை வாங்கிக்கொண்டிருந்தது நிலவங்கி. கொஞ்சம் இருப்பை ஸ்தாபித்துக் கொண்டபிறகு வேறுவகையில் இம்முயற்சியைத் தொடர ஆரம்பித்தார்கள்.

வங்கியின் சர்வேயர்கள், வண்டி எடுத்துக்கொண்டு நகர்ப்புறங்களையும் கிராமப்புறங்களையும் சுற்றி வருவார்கள். நூறு ஏக்கர் வங்கி நிலம் இருக்கும் இடத்தின் நடுவே பத்து ஏக்கர் அராபியர் நிலம் இருக்குமானால் அந்த இடங்களை வங்கிக்கு விற்றுவிடும்படி சம்பந்தப்பட்ட நிலவுடைமையாளர் கேட்டுக்கொள்ளப்படுவார். உரிமையாளர் மறுத்தால், முதலில் மிரட்டல் ஆரம்பிக்கும். பிறகு அதுவே பரிமாணம் அடைந்து சில சந்தர்ப்பங்களில் கடத்தல் வரைகூடப் போயிருக்கிறது! ஆனால் இத்தகைய காரியங்களை வங்கியே நேரடியாகச் செய்ய முடியாது அல்லவா? என்ன செய்யலாம்?

யூதர்கள் யோசித்தார்கள். விளைவாக, பாலஸ்தீனின் பல்வேறு பகுதிகளில் வங்கிக்குச் சம்பந்தமில்லாத சில தனியமைப்புகளைத் தோற்றுவித்தார்கள்.

(தொடரும்...)

# பழிக்குப்பழி வாங்கிய ஓர் ஆவி



சாணத் தண்ணீர் வந்து விழுந்தது. தடியால் அடிபட்டு அவர்கள் உடம்பெங்கும் இரத்தம் கண்டியது. திடீரென்று கட்டியிருந்த சேலை நெருப்புப் பிடித்தது. இவ்வாறு பட்டதுன்பங்களுக்கு கணக்கில்லை. இப்படித் துன்பப்படும் போதுகூட "இந்த தீயவள் ஆவியாக வந்து என்னை அடிக்கிறாளே" என்று சொல்லுவதும், இகழ்வதும் அன்றி அந்தப் பெண் உயிரோடு இருந்தபோது நாம் எவ்வளவு துன்பம் அவளுக்குச் செய்தோம் என்று சிறிதும் நினையாமலும், நாம் செய்தது தவறாயிற்றே என்று மனம் இரங்காமலும் கடின் மனம் உடையவர்களாகவே இருந்தனர். நாளாக நாளாக இத்துன்பங்களால் இருவரது உடம்பும் இளைத்து எலும்பு வெளித்தோன்றி ஊதினால் பறக்கும் இயல்பு உடையவர்களாயினர்.

ஒரு நள்ளிரவு, ஓர் ஒலியும் இன்றி அமைதியாயிருந்தது. அவ்வீட்டில் எல்லோரும் மிகவும் அயர்ந்து உறங்கினார்கள். அப்போது இறந்துபோன அப்பெண்ணின் கணவன் ஒரு கனவு கண்டான்; தன் மனைவி தன்பக்கத்தில் மிகவும் அமைதியோடு நின்றுகொண்டு தன்னுடன் ஏதோ பேசுவதாக நினைத்தான். முதலில் சிலநிமிடம் அவள் பேசுவது இன்னதென்று தெரிந்துகொள்ளக் கூடவில்லை; அதன்பிறகு அவன் உற்றுக் கேட்கையில், "என் ஆருயிர்க் கணவனே! நான் உயிரோடு இருந்தபோது நான் உம்மை நெருங்கவிடாமல் பலவகையாலும் என்னை வருத்தி வந்த உம் உடன் பிறந்தாள் ஒழிந்தாள் ; என் அன்புள்ள தலைவனே! நான் உமக்கு ஏதுந் தீங்கு செய்வேன் என்று எண்ணாதீர்கள்! உம்மை என் கண்மணி போல் பாதுகாத்துவருவேன் ; நான் உயிரோடு இருக்கும்போது நீர் என்னிடம் அன்பு பாராட்டாவிடினும், இப்பொழுதாயினும் என்னிடம்

## (உண்மைச் சம்பவம்)

நீர் அன்பு பாராட்டிவருவீரானால், அதுவொன்றே எனக்குப்போதும்" என்றுகூறக் கேட்டான். அது கேட்டவன் திடுக்கிட்டு எழுந்தான். எழுந்து தன் உடன்பிறந்தாள் படுத்திருந்த இடத்திற்கு ஓடினான். அங்கே அவளைக் காணவில்லை. இவன்போட்ட சத்தத்தால் வீட்டிலுள்ள எல்லோரும் விழித்துக் கொண்டார்கள். வீடெங்கும் அவளைத் தேடினார்கள். எங்கும் காணவில்லை. பிறகு வீட்டிலுள்ள கிணற்றில்போய் பார்க்க, இவள் அதில் பிணமாய் மிதக்கக் கண்டார்கள்.

இவ்வாறு மகள் இறந்தபின்னர் தாயின் அறிவு நாளுக்குநாள் ஒரு நிலைப்படாமல் வந்தது ; சிறிதுசிறிதாகத் தன் நினைவையும் இழந்து வந்தாள். தான் இன்னாள் என்பதையுங்கூடச் சிற்சில சமயங்களில் மறந்து போனாள். பித்துப்பிடித்தவர்கட்கு உள்ள செய்கை எல்லாம் இவளிடத்துங் காணப்பட்டன. இப்படிச் சில கிழமைகள் கழிந்தன.

திடீரென ஒருநாள் விடியற்காலையில் கடற்கரையில் ஒரு பிணம்வந்து ஒதுங்கிக் கிடக்கிறதெனும் ஒரு செய்தி எங்கும் பரவியது. ஊரவர்கள் கடற்கரையில் கூடினார்கள். அப்பிணத்தின் தலைமுதல் பாதம்வரை துணியால் வரிந்து கட்டப்பட்டிருந்தது. இந்தப் பிணம் வேறு யார்?. மாமியாரே-தான்! இந்த மாமி தன் வீட்டிலிருந்து நள்ளிரவிலே புறப்பட்டு எவ்வாறு வந்தாள்? எப்படி கடலிலே வீழ்ந்தாள் என்பது யாருக்குமே தெரியாது.

மாமியார் இறந்த பிறகு, ஆவி அவ்வீட்டில் ஏதும் ஆரவாரஞ் செய்வதில்லை என்றாலும், இந்நிகழ்ச்சியின் பிறகு அவ்வீடு செழிக்வில்லை. இத்தகைய வீடுகளைத்தான் "பேய் பிடித்த வீடு" என்று சொல்லுகிறோம்.

இவ்வரலாற்றினால் அறியக்கிடக்கும் உண்மை யாது? பிறரால் நீதியின்றி அளவுக்குமேல் துன்புறுத்தப்பட்டவர்கள் தாம் இறக்கும் காலத்தில் தமக்குத் தீங்கு செய்தவரிடம் பழிக்குப்பழி வாங்கவேண்டும் எனும் எண்ணத்தோடும் உறுதியுடனும் போவார்களானால், அவர்கள் இறந்தபிறகு சில நாட்களில் தமது நுண்ணுடலினுள் அந்த நினைவுக்கேற்ற வலிவு அடைந்து, தமக்குத் தீங்கு இழைத்தவனுக்குப் பெரும் துன்பத்தை விளைவிப்பார்கள் என்பதேயாகும். இவ்வுண்மைகளை முற்றும் உணர்ந்த முதலாசிரியரான திருவள்ளுவ நாயனார்,

**"பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின், தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்"**

என்று அருளிச் சென்றுள்ளார். காலை நேரத்தில், ஒருவருக்கு நீ தீங்குசெய்தால், உறுதியாக மாலைநேரத்தில் நீ எதிர்பார்க்காத தீங்குகள் எல்லாம் உன்னை வந்தடையும்.

மற்றைய உயிர்களுக்கு இல்லாத பகுத்தறிவுணர்ச்சி மனிதர்களுக்கு உண்டு. எனவே பிற உயிர்களுக்கும், மனிதர்களுக்கும் எந்தத் துன்பத்தையும் மனதால்கூட நினைக்காமல் இருப்பவன் எவனோ? அவனை, நாள் என்செய்யும்? வினைதான் என் செய்யும்? அவனை நாடிவந்த கோன் என் செய்யும்? கெடும் ஆவிதான் என்ன செய்துவிடும்? இது சமய நற்சிந்தனை மட்டுமல்ல; வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய சத்தியப் பாதையாகும்.



(முற்றும்)

சொல்லின் செல்வர்
இரா.செல்வவழிவேல்

# 'மடை' பண்பாட்டுத் திருவிழா

**பிரகஸ்பதி**

பல்வேறு சமூகங்களின் சமூகப்பண்பாட்டு பின்புலங்களைக் கொண்ட பல்வேறு தலைமுறைகளின் பாரம்பரிய கலைஞர்களின் ஊடாட்டங்களை ஊக்குவிக்கும், பகிரும் 'மடை' எனும் பாரம்பரியக் கலைகளின் திருவிழா திருமலை சிவானந்த தபோவனத்தில் கடந்த 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெற்றது.

'மடை' என்கிற படையல் பாரம்பரியக் கலைகளின் திருவிழா, கலைஞர்களின் கொண்டாட்டம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருமலை நகரில் 'மடை' நிகழ்வுகள் ஆற்றுகைகளாகவும், காட்சிப்படுத்தல்களாகவும், கலந்துரையாடல்களாகவும் நடைபெற்று நிறைவடைந்தது.

ஆரம்ப நிகழ்வுகள் தமிழர்களின் பாரம்பரிய பறைமேளம் முழங்க அதிதிகள் வரவேற்று அழைத்துவரப்பட்டு சிவானந்த தபோவன மண்டபத்தில் நடைபெற்றன. இதில், இந்துக் கலாசாரத் திணைக்கள ஆராய்ச்சி அலுவலர் திருமதி தேவகுமாரி ஹரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இந்தியாவின் தமிழ்நாடு மதுரை காமராஜா பல்கலைக்கழக நாட்டாரியல் துறைப் பேராசிரியர் பி.டி.நஜிமுதீன், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி சி.ஜெயசங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்வில், முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, புத்தளம், அம்பாறை, இற்க்காமம், திருகோணமலை, மலையகத்தின் பண்டாரவளை, ஹட்டன், மற்றும் மட்டக்களப்பு பாரம்பரியக் கலைஞர்கள் கலந்துகொண்டனர்.

இதனையடுத்து, பாரம்பரிய கலைப்பொருள்கள் கண்காட்சியும், அனைத்து பிரதேசக் கலைஞர்களது ஆற்றுகைகள் ஆரம்ப நிகழ்வுக்கு வருகைதந்த பாடசாலை மாணவர்களுக்காக நிகழ்த்தப்பட்டன. அதனையடுத்து, கலைஞர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், பௌத்த சாசன மற்றும் மத விவகார பிரதி அமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்ன, இந்து கலாசாரத் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இவ் கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்விற்குரிய எண்ணக்கரு வடிவமைப்பு கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி சி.ஜெயசங்கரால் வழங்கப்பட்டுள்ளதுடன் இச்செயற்பாடுகள் யாவும் அவரது இணைப்பாக்கத்தில் செயற்படும் ஒழுங்கமைப்புக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இலங்கையின் சகல பகுதிகளிலும் பாரம்பரிய நிகழ்த்து கலை வடிவங்கள் பல பயில் நிலையில் இருந்துவருகின்றன. பல்வகைப் பண்பாடுகளுடனும் பல்வகையான வித்தியாசங்களுடனும் இக்கலை வடிவங்கள் பயிலப்பட்டு வருகின்றன. இத்தகைய பாரம்பரிய நிகழ்த்து கலை வடிவங்களின் பயில்வு என்பது மிகப் பெரும்பாலும் பேணுகையாகவன்றி வாழ்தலுக்கான பயில்வாகவே நிகழ்ந்து வருகின்றதனைக் காணமுடிகின்றது.

வருடாவருடம் ஊரவரின் மகிழ்ச்சிக்காகவும் ஊரவர் ஒன்றுகூடிச் செயலாற்றுவதற்காகவும் தத்தமது ஆற்றல்களைத் திறன்களை வெளிப்படுத்தி வளர்த்தெடுப்பதற்காகவும் ஊர் கூடி நடத்தும் கலைத்திருவிழாவாக பாரம்பரிய நிகழ்த்து கலைகள் மிகப் பெரும்பாலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய வாழ்தலுக்கான பாரம்பரிய கலைப்பயில்வுகள் இலங்கையின் பல்வேறு இடங்களிலும் பல்வகைத் தன்மைகளில் இடம் பெற்றுவருகின்றன. குறிப்பாக, இலங்கையின் தமிழ்பேசும் சமூகங்கள் மத்தியில் பயிலப்பட்டு வரும் பாரம்பரிய நிகழ்த்து கலை வடிவங்கள் பல சமுதாய கலை நிகழ்வுகளாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் நாம் எதிர்நோக்கும் நுகர்வுப் பண்பாட்டின் ஆபத்திலிருந்து எம்மை விடுவிப்பதற்கான பொறிமுறைகள் பல எம்மத்தியில் பயிலப்பட்டு வரும் பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் இயங்கியலில் பின்னிப்பிணைந்துள்ளன.

இவ்வாறு தன்னளவில் முழுமையும் நிறைவும் கொண்டதாக பயிலப்படும் கலைகளில் சில அடையாளங் காணப்படாமல் உள்ள துரதிர்ஷ்ட நிலையும் எம்மத்தியில் இருந்து வந்துள்ளது. அதேநேரம் பொதுப் புத்தியில் பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் மனித வாழ்வியலுக்கான பயில்வின் இயங்கியல் பற்றிய அறிகை நோக்கு பிரதானப்படுத்தப்படாது மாறாக பேணுதலுக்கான அறிகை நோக்கே மிக முக்கியப் படுத்தப்பட்டு வந்துள்ளது. அதாவது எமது அடையாளம், எமது பண்பாட்டின் சின்னம் அதற்காகப் பேணவேண்டும் எனும் கருத்தியலே பிரதானப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இத்துடன் பாரம்பரிய நிகழ்த்து கலைகள் குறித்து உரையாடப்பட்ட மிகப் பெரும்பாலான உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் பாரம்பரியக் கலைஞர்களின் குரல்கள் ஒலிப்பதற்கான வாய்ப்புக்கள் அமையவில்லை. இதனாலேயே வாழ்வியலுக்கான பயில்வு பற்றிய அறிகை நோக்கு வலுவற்றுப்போனதுடன் தரகு அறிஞர்களின் பேணுகைக்கான அறிகை நோக்கு பிரதானப்படுத்தப்பட்டது.



இதேவேளை இலங்கைத் தமிழ்ச் சூழலில் 2002 இலிருந்து "கூத்து மீளுருவாக்கம்" எனும் கோட்பாடு பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் வாழ்வியலுக்கான பயில்வின் இயங்கியலை ஓர் அறிகை நோக்காக முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் இலங்கையிலுள்ள பெரும்பாலான தமிழ்பேசும் சமூகங்கள் மத்தியில் பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் பயில்வில் ஈடுபட்டுவருகின்ற மூத்த தலைமுறைகளைச் சேர்ந்த கலைஞர்களும் இளைய தலைமுறைகளைச் சேர்ந்த கலைஞர்களும் சில நாட்கள் ஓரிடத்தில் ஒன்றிணைந்து தத்தமக்குத் தெரிந்த வித்தைகளை மற்றையோர் முன்னிலையில் வெளிப்படுத்தி தமது கலைப்பயில்வுகளின் சாத்தியப்பாடுகள், சவால்கள் குறித்து கருத்துக்களை வெளிப்படுத்தி கலந்துரையாடி விவாதித்து பிறருக்கு கொடுக்கவேண்டிய தம் அனுபவங்களைக் கொடுத்து தாம் பிறரிடமிருந்து பெறவேண்டியதைப் பெற்று இந்த 21ஆம் நூற்றாண்டில் ஆக்கபூர்வமாக இயங்குவதற்கான கருத்தியலை வலுவாக்கிக் கொள்ளும் பாரம்பரியக் கலைஞர்களின் ஊடாட்டக் களமாக இவ்விழா வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதற்கேற்ப மலையகத்திலிருந்து காமன் கூத்தும் அதனோடு தொடர்புபட்ட கலைஞர்களும், மட்டக்களப்பிலிருந்து மகிடிக் கூத்து, தப்பிசை, பறைமேளக்கூத்தும் அதனோடிணைந்த கலைஞர்களும், கபறிஞ்ஞா நடனமும் அதனோடிணைந்த கலைஞர்களும் கூத்து அண்ணாவிமார்களும், பத்ததிச் சடங்கு, வேடுவர் சடங்கு சார்ந்த கலைஞர்களும், மன்னாரிலிருந்து வடபாங்கு, தென்பாங்கு, வாசாப்பு முதலிய ஆற்றுகைகளும் அதுசார் கலைஞர்களும், முல்லைத்தீவிலிருந்து கோவலன் கூத்தும் அதுசார் கலைஞர்களும், யாழ்ப்பாணத்திலிருந்து காத்தான் கூத்து, பப்பிரவாகன் கூத்தும் அதுசார் கலைஞர்களும் திருகோணமலையிலிருந்து கரகாட்டமும் அதுசார் கலைஞர்களும், அக்கரைப்பற்றிலிருந்து களிகம்பு, சிலம்பு, வாள்வீச்சு ஆற்றுகைகளும் அதுசார் கலைஞர்களும் கலந்துகொண்டனர்.

திருகோணமலையின் உப்புவெளி சிவானந்த தபோவனத்தில் இம்மாதம், 25,26,27ஆம் திகதிகளில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 4.00 வரை கலந்தாய்வரங்குகளும், காட்சிப்படுத்தல்களும் நடைபெற்றன. அதே நேரம், ஆரம்பதினமான வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரைக்கும் ஓசில் மைதானத்தில் மட்டக்களப்பு சந்திவெளிக் கலைஞர்களின் மகிடிக் கூத்து ஆற்றுகையும், சிவானந்த தபோவனத்தில் மலையகக் கலைஞர்களின் காமன் கூத்து ஆற்றுகையும் இடம்பெற்றன.

அதேவேளையில் திருமலை நகரக் கடற்கரையில் தமிழர்களின் பாரம்பரிய வாத்திய இசை, களிகம்பு, கபறிஞ்ஞா நடன நிகழ்வுகள் நடைபெற்றன. அத்துடன், இரவு 8.30 தொடக்கம் 11.30 வரை உப்பு வெளியிலுள்ள சிவானந்த தபோவன மைதானத்தில் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணக் கூத்துக்கள் ஆற்றுகை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான ஏற்பாடுகள் கலைஞர்களின் ஒன்றுகூடல்களுக்கும்,கலைப்பரிமாறல்களுக்கும், சந்தேகங்களின் நிவர்த்திப்புக்குமாக பெரும்பங்காற்றுவதுடன் கலைகளுக்குள்ளான உறவுகளையும் மேம்படுத்துகின்றது.

அந்தவகையில் திருகோணமலை சிவானந்த தபோவனத்திலும் ஏனைய இடங்களிலும் நடைபெற்ற மிகப்பெரிய அளவான கலைப் பண்பாட்டுத்திருவிழா தமிழர்களின் பாரம்பரிய நிகழ்த்துக்கலைகளின் வளர்ச்சியிலும் பேணுகையிலும் பங்களிப்பினைப் பெரியளவில் செய்திருக்கிறது என்றே கூறிக்கொள்ள வேண்டும்.

# நாற்றமெடுக்கும் கல்முனை மேயர் பதவி இழுபறி!

**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

கல்முனை மேயர் பதவி ஒரு படியாக இரண்டு வருடங்கள் அல்லாடிக் கொண்டிருந்து, இப்பொழுது இழுபறிநிலைக்கு வந்துள்ளது.

கல்முனையை ஆள்வதற்கு அருகதை கல்முனைக்கா அல்லது சாய்ந்தமருதுவுக்கா என்பதுதான் இந்த இழுபறியின் உள்ளரங்கம்.

தற்போது கல்முனையை ஆளும் மேயர் மீராஸாஹிப் சிராஸ் சாய்ந்தமருதைச் சேர்ந்தவர். அவருக்கு வில்லனாக உள்ள பிரதிமேயர் நிஸாம் காரியப்பர் கல்முனையைச் சேர்ந்தவர்.

இந்த இருபெரும் வர்த்தக ஊர்களின் இழுபறிக்குள் சிக்கித் தவிக்கிறது கல்முனை மாநகர மேயர் பதவி.

இராஜினாமா மேற்கொள்வது தொடர்பில் எதிர்வரும் 31ம் திகதி வியாழக்கிழமை வரை கல்முனை மேயர் மீராஸாஹிப் சிராஸிற்கு காலக்கெடு வழங்கியுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

"தனது இராஜினாமா குறித்து 31ம் திகதிக்குள் பதில் வழங்குவதாக கடந்த செவ்வாய்க்கிழமை தன்னைச் சந்தித்த கல்முனை மேயர் தன்னிடம் உறுதியளித்திருந்தார்" என்றும் அமைச்சர் ஹக்கீம் சொல்லியிருக்கிறார்.

மாநகர சபையின் அமர்வினைக் கூட்டவேண்டியுள்ளதாகவும் அத்துடன் ராஜினாமா குறித்து குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தனக்கு வாக்களித்த கட்சி ஆதரவாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னரே தான் முடிவெடுக்க முடியுமென்றும் சிராஸ் மீராஸாஹிப் ஒரு போடு போட்டிருந்தார்.

எனினும் தற்போதைய கல்முனை மேயர் ஏற்கெனவே தனக்கு வழங்கிய உறுதிமொழிகளுக்கும் தற்போது அவரது நடவடிக்கைகளுக்குமிடையில் பாரிய முரண்பாடுகள் உள்ளதாக ஹக்கீம் வருத்தம் தெரிவித்துள்ளார். இருந்தபோதிலும் இந்த விவகாரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உறுதியான தீர்மானத்தில் இருப்பதாக ஹக்கீம் கூறிவருகின்றார். நவம்பர் மாதத் துவக்கத்திலேயே கட்சியின் இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்றும் ஹக்கீம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸிற்குள் தோன்றும் பதவிப் பங்கீடு என்பதும் பின்னர் அது மறுக்கப்படும்போது ஏற்படும் இழுபறிகளும் இன்று, நேற்று வந்த





ஒன்றல்ல.

அது அந்தக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப்பின் காலந்தொட்டே தொடர்ந்துவரும் ஒரு நோய்தான்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரண்டு வருடங்களுக்கு ஓட்டமாவடிக்கு விட்டுக்கொடுப்பது என்று காத்தான்குடியைச் சேர்ந்த ஹிஸ்புல்லாஹ் அவர்கள் அப்போது பள்ளி வாசலில் வைத்து சத்தியம் செய்து கொடுத்ததாகவும் பின்னர் இரண்டு வருடங்கள் கழிந்தநிலையில் அதனை அவர் மறுத்துவிட்டதாகவும் அப்போது அந்த விவகாரம் சூடுபிடித்திருந்தது.

அந்த விவகாரத்தை ஜனாதிபதி சட்டத்தரணியாகவிருந்த மர்ஹூம் அஷ்ரபினால் கூட முடிவுக்குக்கொண்டு வரமுடியாமல் தடுமாறித்தான் போயிருந்தார்.

பின்னர் அந்த விடயம் காத்தான்குடி எதிர் ஓட்டமாவடி என்ற பிரதேச வாதமாகவும் உருவெடுத்திருந்தது. இன்றுவரை அது தொடர்கின்றது.

இப்பொழுது கல்முனை - சாய்ந்த மருதுவுக்கிடையில் கிளம்பியுள்ளதும் பிரதேசவாதம்தான்.

கல்முனை மேயர் மீராஸாஹிப் சிராஸ் பலாத்காரமாக பதவி பறிக்கப்படுவாரேயானால் நிர்வாக ரீதியாக கல்முனையோடு தாங்கள் சேர்ந்திருக்காமல் சாய்ந்தமருதுவுக்கென தனியானதொரு பிரதேச சபையைக் கோரப்போவதாக சாய்ந்தமருது மக்கள் ஒரு படி மேலே சென்று ஒரு போடுபோட்டிருக்கின்றார்கள்.

இதனிடையே பிரதிமேயரான நிஸாம் காரியப்பருக்கெதிரான சுவரொட்டிகளும் சாய்ந்தமருது ஊர் முழுக்க ஒட்டப்பட்டுள்ளன.

சுழற்சி அடிப்படையில் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மேயர் பதவியை இராஜினாமா செய்யுமாறு தற்போதைய மேயர் மீராசாஹிபு சிராஸ், கட்சித் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமினால் நேரடியாக கேட்கப்பட்டுள்ளார்.

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம், காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றியது.

தேர்தலில் முதன்மை வேட்பாளராக கட்சியின் துணைச் செயலாளர் நிசாம் காரியப்பர் நிறுத்தப்பட்ட நிலையில் அவரே தேர்தலின் பின்னர் மேயராக தெரிவுசெய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தேர்தல் முடிவுகளின் படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் விருப்பு வாக்குகளில் மீராசாஹிபு சிராஸ் முதலாவது இடத்தை பிடிக்க நிசாம் காரியப்பர் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

தேர்தல் விருப்பு வாக்குகள் எப்படி இருந்தாலும் நிசாம் காரியப்பரை அந்தப் பதவிக்கு நியமிக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை விரும்பியதாக சில உள்ளூர் தகவல்கள் கூறுகின்றன.

ஆனால் கூடுதல் விருப்பு வாக்கு பெற்ற மீராசாஹிபு சிராஸுக்குத் தான் பதவி வழங்கப்படவேண்டும் என்று ஒருசாரார் கட்சிக்கு உள்ளேயும் ஆதரவாளர்கள் மத்தியிலும் கோரிக்கை வைத்தனர். அதன் காரணமாக அப்போது இழுபறி நிலை தோன்றியிருந்தது.

கட்சித் தலைமைப்பீடம் இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் 4 வருட பதவிக்காலத்தில் மேயர் மற்றும் துணை மேயர் பதவிகளை குறித்த இருவருக்கும் தலா இரண்டு வருடங்கள் என சுழற்சி அடிப்படையில் வழங்க முடிவு செய்தது.

முதல் இரு வருடங்களுக்கு மேயராக மீராசாஹிபு சிராஸும் துணை மேயராக நிசாம் காரியப்பரும் நியமனம் பெற்று பதவி வகித்து வருகின்றார்கள்.

# பொதுநலவாய மாநாட்டிலும் அரசியல்

**"இந்தியாவின் நேர்மையற்ற ஆட்சியாளர்களும் குடும்ப ஆதிக்கமும் சாதி வெறிபிடித்த தென்மண்டலப் பார்ப்பனர்களுமே இலங்கையில் இந்தியாவிட்ட தவறுகளுக்கும் காரணம். அதன்விளைவாக மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்தியா தான் உதவாவிட்டால் சீனா இலங்கைக்கு தமிழர்களைக் கொல்ல உதவும் என்ற பொய்யையும் இலங்கையில் தமிழர்கள் உரிமைபெற்றால் அது இந்தியாவில் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற பொய்யையும் சொல்லி இலங்கை அரசுகளுக்கு உதவிசெய்து தமிழர்களின் போராட்டத்தை வலுவிழக்கச் செய்தனர்" என தீவிர தமிழ் உணர்வாளர்கள் தெரித்துள்ளனர்.**

பொதுநலவாய நாடுகளின் அங்கத்துவத்திலிருந்து பிஜி, நைஜீரியா, பாகிஸ்தான், சியாரிலியோன், தென் ஆபிரிக்கா, சிம்பாப்பே போன்ற நாடுகள் தற்காலிகமாக நீக்கப்பட்டதுமல்லாது, சிம்பாப்பே பொதுநலவாய நாடுகளின் அங்கத்துவத்திலிருந்து தானாகவே நீங்கியுள்ளது. இவற்றின் அடிப்படையில், சிறிலங்காவின் நிலையை ஒப்பீடுசெய்து செய்து பார்க்கும்வேளையில், இதுவரையில் பொதுநலவாய நாடுகளிலிருந்து நீக்கப்பட்ட நாடுகளின் நிலையைவிட பலமடங்கு மோசமான நிலையை சிறிலங்கா கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

**தொகுப்பு: வேணு கிருஷ்ணா**

(Commonwealth Heads of Government Meeting, CHOGM) என்பது அனைத்துப் பொதுநலவாய நாடுகளினதும் அரசுத் தலைவர்கள் பங்குபற்றும் உச்சி மாநாடு ஆகும். இம்மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை அவ்வமைப்பின் உறுப்பு நாடு ஒன்றில் இடம்பெறுகிறது. இம்மாநாடு நடைபெறும் நாட்டின் அரசுத் தலைவர், மாநாட்டுக்குத் தலைமைவகிப்பதோடு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அவரே பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நடப்புத் தலைவராகவும் செயற்படுவார். பொதுநலவாயத்தின் தலைவர் இரண்டாம் எலிசபெத் மகாராணி 1973 ஆம் ஆண்டில் ஒட்டாவா நகரில் இடம்பெற்ற உச்சிமாநாட்டில் முதன் முதலில் பங்குபற்றியதில் இருந்து அனைத்து மாநாடுகளிலும் பங்குபற்றிவருகிறார். ஆனாலும், 87 வயதாகும் மகாராணியின் தேகநிலை இடம்கொடுக்காததால், கொழும்பில் நடைபெறவிருக்கும் 2013 மாநாட்டில் மகாராணிக்குப் பதிலாக வேல்சு இளவரசர் சார்ள்ஸ் கலந்து கொள்கிறார்.

பொதுநலவாய தலைவர்களின் முதலாவது மாநாடு 1971இல் சிங்கப்பூரில் நடைபெற்றது. மொத்தம் 21 தடவைகள் மாநாடுகள் இடம்பெற்றுள்ளன. கடைசியாக 2011 இல் மேற்கு ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இடம்பெற்றது.

பொதுநலவாயத் தலைவர்களின் உச்சி மாநாடுகளில் உறுப்புநாடுகள் எதிர்கொள்ளும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகள், மற்றும் தற்கால நிகழ்வுகள் ஆராயப்படுகின்றன. தென்னாபிரிக்காவில் இடம்பெற்றுவந்த இனவொதுக்கல் கொள்கை, மற்றும் அதனை முடிவுக்குக்கொண்டு வருவது, பாகிஸ்தான், பிஜி நாடுகளில் இடம்பெற்ற இராணுவப் புரட்சிகள், சிம்பாப்வே நாட்டில் தேர்தல் ஏமாற்று போன்றவை இவற்றுள் சிலவாகும். சில வேளைகளில், உறுப்பு நாடுகள் உச்சி மாநாட்டில் பொதுத் தீர்வு ஒன்றை எட்டி அதனைக் கூட்டு அறிக்கை மூலம் வெளியிடுகின்றன. 1997 ஆம் ஆண்டு முதல் மாநாடு நடைபெறும் நாடு பொதுவான 'கருப்பொருள்' ஒன்றை அறிவித்து, அதனைக் குறித்து விவாதங்கள் இடம்பெறுகின்றன.

## பொதுநலவாய மாநாடு 2013

23ஆவது பொதுநலவாய அரசுத் தலைவர்களின் மாநாடு, 2013 நவம்பர் 15 முதல் 17 வரை இலங்கையின் கொழும்பு நகரில் இடம்பெறுகிறது. 2009ஆம் ஆண்டில் திரினிடாட், டொபாகோவில் இடம்பெற்ற மாநாட்டில் 2013ஆம் ஆண்டில் மாநாட்டை நடத்துவதற்கு இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டது. 2011இல் ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இடம்பெற்ற மாநாட்டில் இது மீண்டும் உறுதிசெய்யப்பட்டது.

இலங்கையில் மனித உரிமைகளில் முன்னேற்றம் ஏற்படாத பட்சத்தில் இலங்கை மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக கனடா அறிவித்துள்ளது. இதே காரணத்துக்காக ஐக்கிய இராச்சியத்தின் மக்களவையின் வெளியுறவுத் துறைக் குழுவும் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன் மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது எனக் கேட்டுக்கொண்டுள்ளது. ஆனாலும், தாம் மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதாக கெமரூன் அறிவித்துள்ளார்.

## கனடாவின் புறக்கணிப்பு ஏற்படுத்தப் போகும் தாக்கம்?

இலங்கைக்கான நிதியுதவித் திட்டங்களையும் மீளாய்வு செய்யப்போவதாக கனடா அறிவித்தது. புலம்பெயர் தமிழ் உறவுகளின் அழுத்தமும் கனடாவின் ஆட்சியாளர்களின் மீது உள்ளது.

அதிலும் கனடாவானது பொதுநலவாய நாடுகளின் அமைச்சரவை மட்டத்திலான நடவடிக்கைக் குழுவின் எட்டு அங்கத்துவ நாடுகளில் ஒன்று. பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சரே தலைவராக இருக்கும் இந்தக் குழுவில் கனடா ஆதிக்கம் செலுத்தி கொழும்பில் முடிவுகளை எடுக்கலாம் என்றபோதிலும் ஏனைய ஏழு நாடுகளும் இதற்கு சம்மதம் தெரிவித்திருக்கவேண்டும். இந்த அமைச்சரவை மட்டத்திலான குழு கடந்த ஆண்டு செப்டம்பரில் நியூயோர்க்கில் கூடியிருந்தும்கூட அவை இலங்கை விவகாரத்தை விவாதித்ததாக அவற்றின் எந்த அறிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை.

எனவே இந்த கொழும்பு மாநாட்டில் எவ்வாறு சிறுபான்மையினருக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க ஸ்ரீலங்காவை காலவரையோடு நிர்ப்பந்திப்பது என்பதனைச் சிந்திக்கவேண்டிய நிலையில் கனடா உள்ளது. ஏனெனில் அது தலைவர்கள் மட்டத்தில் பங்குபற்றாவிடினும் மற்றைய மட்டங்களிலாவது பங்குபற்றவேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்காவில் வைத்து அதனை கண்டிக்காது தவிர்த்தால், அல்லது ஏதாவது ஒரு மட்டத்தில் பங்குபற்றாமல் தவிர்த்தால் கனடா காத்திரமாக மற்றைய நாடுகளிற்குச் சொல்லவேண்டிய செய்திகளை சொல்லாமல் தவிர்ப்பதாகவோ அல்லது தீர்வு காணப்படவேண்டிய ஒரு விவகாரத்தை கிடப்பில் போடுவதாகவோ அமைந்துவிடும்.

## பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்கு

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாடு நாட்டின் சகல துறைகளுக்கும்- முக்கியமாக பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்குவகிக்கும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இயக்குநர் நாயகம் பேராசிரியர் சுனந்த மத்தும பண்டார தெரிவித்தார்.

பேராசிரியர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், இலங்கையில் வெளிநாட்டவர்கள் தயக்கமின்றி முதலிடக்கூடிய நல்ல வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பொதுநலவாய நாடுகளின் வர்த்தக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் 1000 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றார்.

## பொதுநலவாய மாநாடு வருகைக்காக நாடுகள் உறுதியளிப்பு

மாநாட்டில் பங்கேற்பது குறித்து 25 நாடுகளின் தலைவர்களே இதுவரை (ஒக்ரோபர் 26 ஞாயிறு நிலவரப்படி) 'ஆம்' எனத் தெரிவித்துள்ளனர் எனச் செய்திகள் கூறுகின்றன.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் 53 நாடுகள் அங்கம்வகிக்கின்றன. இவற்றில் 32 நாடுகள் சிறிய நாடுகளாகும்.

அதன்படி பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்கக் கூடாது என இந்தியாவில் எதிர்ப்பலைகள் தொடர்ந்துள்ள நிலையில் பிரதமர் மாநாட்டில் கலந்துகொள்ளமாட்டார் என ஊகம் உள்ளது.

எனினும் பிரித்தானியா தலைமையிலான அரச தலைவர்கள் கொழும்பு மாநாட்டில் பங்கேற்கின்ற போதிலும் பொதுநலவாய மாநாட்டில் இலங்கை அரசாங்கத்தின் மீது விமர்சனங்களையும் அழுத்தங்களை கொடுப்பதற்குமே கொழும்புவருவதாக தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் கலந்துகொள்ளும் என்று அந்த நாட்டின் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதிகள் சிறிய நாடுகளுக்கு சென்று அந்த நாட்டு தலைவர்களிடம் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு கெஞ்சிமன்றாடுவதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதனிடையே பொதுநலவாய நாடுகள் மாநாட்டுக்கு கிடைக்கவேண்டிய நிதி கிடைக்காத நிலையில் இலங்கை அரசாங்கம் நெருக்கடிகளை சந்தித்துள்ளதுடன் தனது திறைசேரியில் உள்ள பணத்தையும் மாநாட்டுக்காக செலவிட்டு வருகிறது.

இதனால் அரச நிறுவனங்களின் செலவுகளை ஈடுசெய்ய முடியாத நிதி நெருக்கடியை அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சில நாடுகள் பொதுநலவாய மாநாட்டுக்கு வழங்கும் நிதியினை குறைத்துக் கொள்ளப்போவதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொதுநலவாய மாநாடும் தீவிர தமிழரும்

பொதுநலவாய பிரகடனத்தை நாம் ஆராயும்வேளையில், இம்மாநாட்டை ஸ்ரீலங்காவில் நடத்துவதற்கு சிறிலங்கா அருகதை அற்ற நாடு என்று தீவிர தமிழர் கூறுகின்றனர்.

பொதுநலவாயத்தின் பிரகடனங்களான, சிங்கப்பூர் 1971ம் ஜனவரி மாதம் 22ம் திகதி 'பொதுநலவாய கொள்கை', 1991ம் ஒக்டோபர் மாதம் 20ம் திகதி 'கராரி பிரகடனம்' யாவும் - சர்வதேச சமாதானம், உலகப் பொருளாதாரம், சர்வதேச விதி-முறைகள் போன்றவற்றை மதிக்குமாறு வலியுறுத்துகின்றன.

அவற்றுடன் சம அந்தஸ்து, தனியார் சுதந்திரம், இனவேறுபாடுகளுக்கு எதிரான கொள்கை, அரசியல் சுதந்திரம், ஜனநாயகம் போன்றவற்றையும் வலியுறுத்துகின்றன.

இவை மட்டுமல்லாது சிங்கப்பூர் 1971ம் ஜனவரி மாதம் 22ம் திகதி 'பொதுநாலவாய கொள்கை', சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்துகிறது.

இவற்றின் அடிப்படையிலேயே கடந்த காலங்களில் பொதுநலவாய நாடுகளின் அங்கத்துவத்திலிருந்து பிஜி, நைஜீரியா, பாகிஸ்தான், சியாரிலியோன், தென் ஆபிரிக்கா, சிம்பாப்பே போன்ற நாடுகள் தற்காலிகமாக நீக்கப்பட்டதுமல்லாது, சிம்பாப்பே பொதுநலவாய நாடுகளின் அங்கத்துவத்திலிருந்து தானாகவே நீங்கியுள்ளது.

இவற்றின் அடிப்படையில், ஸ்ரீலங்காவின் நிலையை ஒப்பீடுசெய்து செய்துபார்க்கும் வேளையில், இதுவரையில் பொதுநலவாய நாடுகளிலிருந்து நீக்கப்பட்ட நாடுகளின் நிலையைவிட பலமடங்கு மோசமான நிலையை ஸ்ரீலங்கா கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது என்று தீவிர தமிழர் கூறுகின்றனர்.

"பத்திரிகை சுதந்திரம் மறுக்கப்பட்டதுடன், பல ஊடகவியலாளர் படுகொலை செய்யப்பட்டும் காணமல் போயுள்ளநிலையில், ஸ்ரீலங்காவில் பொதுநலவாய நாடுகளின் மாநாடா" என்று தமிழர் தமிழகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் பிரசாரம் செய்கின்றனர்.

## இந்தியரின் மறுபக்கமும் பொதுநலவாய மாநாடும்

"இந்தியாவின் நேர்மையற்ற ஆட்சியாளர்களும் குடும்ப ஆதிக்கமும் சாதி வெறிபிடித்த தென்மண்டலப் பார்ப்பனர்களுமே இலங்கையில் இந்தியாவிட்ட தவறுகளுக்கும் காரணம். அதன்விளைவாக மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்தியா தான் உதவாவிட்டால் சீனா இலங்கைக்கு தமிழர்களைக் கொல்ல உதவும் என்ற பொய்யையும் இலங்கையில் தமிழர்கள் உரிமைபெற்றால் அது இந்தியாவில் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற பொய்யையும் சொல்லி இலங்கை அரசுகளுக்கு உதவிசெய்து தமிழர்களின் போராட்டத்தை வலுவிழக்கச் செய்தனர்" என தீவிர தமிழ் உணர்வாளர்கள் தெரித்துள்ளனர்.

## இலங்கை - இந்திய சீபா ஒப்பந்தம்

சீபா ஒப்பந்தம் எனப்படும் Comprehensive Economic Partnership Agreement (CEPA) இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் செய்யப்படவேண்டும் என கடந்த பதினொரு ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா இலங்கையை வேண்டிவருகின்றது. 2005-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சீபா பேச்சுவார்த்தை 2008-ம் ஆண்டு கடினமான பதின்மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஒப்பந்தம் வரையப்பட்டது. இலங்கையில் தமிழர்கள் போராட்டத்தை ஒழித்துக் கட்டியபின்னர் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படலாம் என இழுத்தடித்து வந்த இலங்கை 2012இல் அப்படி ஒரு ஒப்பந்தம் செய்யத் தங்களுக்கு விருப்பமில்லை என்று சொல்லிவிட்டது. இலங்கையின் சில தொழிற்துறையினர் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் சீபா எனப்படும் பரந்த பொருளாதார பங்காண்மை ஒப்பந்தம் தமக்கு நன்மை பயக்கும் என்று கருதுகின்றனர். உலகின் மிகப்பெரிய சந்தைகளில் ஒன்றான இந்தியா தமக்குத் திறந்துவிடப்படுவதை அவர்கள் விரும்புகிறார்கள். இலங்கையை சீபாவிற்கு சம்மதிக்க வைக்க தனது சலுகைகளை முக்கியமாக ஆடை உற்பத்தித் தொழிலில் அதிகரித்தது. ஏற்கனவே சுங்கவரியின்றி மூன்று மில்லியன் துண்டுகளை இலங்கை ஏற்றுமதி செய்யலாம் என்றிருந்தது. இதை இந்தியா இரட்டிப்பாக்கியதுடன் மேலும் பல மில்லியன் துண்டுகளை குறைந்த சுங்கவரியுடன் இலங்கை ஏற்றுமதி செய்யலாம் எனத் தெரிவித்தது. ஆனால் சிங்களவர்களுக்கு இந்தியாவில் இருக்கும் வெறுப்பை இந்தியா சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இலங்கை அமைச்சர் விமல் வீரவன்ச சிபாவில் இலங்கை ஒப்பமிட்டால் பாரிய விளைவுகள் ஏற்படுமென்றார். மேலும் அவர் தெரிவிக்கையில், இந்தியா தனது நாட்டு வேலையில்லாப் பிரச்சினையைத் →

தொழில்நுட்பம்



# மலையேறுகிறது புளூடூத்

தினமும் நாம் வியக்கும் வண்ணம் பல டெக்னோலஜி சம்பந்தப்பட்ட புதுப்புது தகவல்கள் வந்துகொண்டேதான் இருக்கிறது. நாமும் அவற்றை பார்த்து கொண்டுதான் இருக்கிறோம். அந்தவகையில் முன்பு படங்கள், வீடியோக்களை ஒரு போனில் இருந்து வேறொரு போனுக்கு அனுப்ப கேபிள்களை பயன்படுத்தினர் பின்னர் புளூடுத் பயன்படுத்தினர்.

தற்போது அதைவிட அட்வான்ஸ் டெக்னோலஜி வந்து விட்டது. அதாவது இதில் நீங்கள் 100MB அளவுள்ள ஒரு வீடியோவை ஒரு மொபைலிலிருந்து மற்றொரு மொபைலுக்கு நகர்த்த சில விநாடிகளே ஆகும். ஆமாங்க, இதற்காகவே பிரத்தியோகமான ரிங் மற்றும் பேண்ட் ஆகியவை வந்துள்ளது. இதனை பயன்படுத்தி ஒரு சில விநாடிகளிலே இந்த வேலைகளை நாம் செய்துமுடிக்கலாம். இதோ அது எப்படி செயற்படுகின்றது என்பதை பார்ப்போம். கையில் அணிந்திருக்கும் ஒருவித பேன்ட்மூலம் போட்டோக்களை ஒரு மொபைலில் இருந்து இன்னொரு மொபைலுக்கு நகர்த்தலாம். அல்லது அதில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு ஸ்டிக்கர்மூலம் URL ஐ கோப்பிசெய்து மற்றொரு மொபைலில் பேஸ்ட் செய்யலாம். அதில் கொடுக்கப்பட்டிருக்கும் ரிங் மூலம் ஒரு மொபைலில் இருந்து இன்னொரு மொபைலுக்கு வீடியோக்களையும் நகர்த்தலாம்.




# மின்னணு இரத்தத்தால் இயங்கும் கம்பியூட்டர்

மனிதனின் மூளையை போன்று மின்னணு இரத்தத்தால் இயங்கும் அதிநவீன கணனியை ஐ.பி.எம் நிறுவனம் வடிவமைத்துள்ளது. மனித உடல் உறுப்புகளிலேயே மிகவும் முக்கியமானது மூளை, அதனை கருத்தில்கொண்டே மின்னணு இரத்தத்தால் இயங்கும் கணினியை வடிவமைத்துள்ளனர். அதாவது, மனிதனின் மூளையை போன்று கணினி ஒருவகை திரவத்தால் சக்தியை பெறுவதுடன் அதே திரவத்தால் தன் வெப்பத்தை நீக்கி குளுமைப்படுத்தி கொள்ளும் திறன்கொண்டதாக இருக்கும்.

மூளையில் உள்ள குருதிச் சுற்றோட்டத்தொகுதி போன்ற ஒருவகை மின்னணு இரத்தத்தை கணினியின் வழியாக ஓடச் செய்வதன்மூலம் அந்தக் கணினிக்கான சக்தியை அதன் உள்ளே கொண்டு செல்லும். அத்துடன் அதிலிருந்து வெப்பத்தை வெளியேயும் கொண்டுவரும். தற்போதுள்ள கணினிகளில் ஒரு சதவிகிதம் மட்டுமே தகவல்களை பெறுவதற்கு பயன்படுவதாகவும், இந்த புதிய முறை பயன்படுத்தப்பட்டால் சிறப்பான கணினியை தம்மால் உருவாக்கமுடியும் என்று ஐ.பி.எம் நிறுவனத்தின் டாக்டர் பாட்ரிக் ருச் மற்றும் டாக்டர் புருனோ மைக்கல் தெரிவித்துள்ளனர்.

மேலும் 2060ஆம் ஆண்டளவில் முழுமையடையக் கூடிய இந்த முயற்சியின்மூலம், தற்போது மிகப் பெரியதாக இருக்ககூடிய கணினியை சிறியதாக உருவாக்கிவிட முடியும் என்றும் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் நடந்த பொதுஅறிவுப் போட்டியில் இக்கணினி மனிதமூளையை தோற்கடித்துவிட்டது. மனித மூளை 20 வாட்ஸ் சக்தியை மட்டுமே பயன்படுத்துகின்றது என்றும், கணினி 85,000 வாட்ஸ் சக்தியை பயன்படுத்துகின்றது இது நியாயமற்றது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த கேள்விகளுக்கு புதிய மின்னணு இரத்தத்தால் செயற்படும் கணினிகள் பதில் அளிக்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.



# பல்ப் எரிந்தால் கம்பியூட்டர் இயங்கும்!

ரேடியோ அலைகளுக்குப் பதிலாக, விளக்கொளி மூலம், சீன விஞ்ஞானிகள் இணையத்தளத்தை இயக்கி உள்ளனர். சீனாவின், ஷாங்காய் நகரத்தில் உள்ள, புடான் பல்கலைக்கழகத்தின், தகவல் தொழில்நுட்ப பேராசிரியரும், ஆய்வுக்குழுவின் தலைவர் ஷீனான் கூறியதாவது:

ரேடியோ அலைவரிசைக்குப் பதிலாக, எல்.இ.டி., பல்பை எரிய விடுவதன்மூலம், நான்கு கம்பியூட்டர்களில், இணையத்தளத்தை இயங்கச்செய்யலாம். மைக்ரோ சிப்பைவிட, வினாடிக்கு, 150 மெகா - பிட்ஸ் என்னும் வேகத்தில், பிராட்பேண்ட் வேகத்தில், இணையத்தளம் செயற்படும். விளக்கை பயன்படுத்தி, இணையத்தளத்தை இயக்கச் செய்வதால், இதற்கு, லை-பை என்று பெயரிடப்பட்டுள்ளது.

ஷாங்காய் நகரில், அடுத்த மாதம் நடைபெறவுள்ள, சீன சர்வதேச தொழில் கண்காட்சியில், சோதனை அடிப்படையில், மிகவும் மலிவான, எளிதான, லை-பையின், 10 மாதிரிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. விளக்கொளி தடைப்பட்டால், இணையத்தள இணைப்பு துண்டிக்கப்பட்டுவிடும். எனவே, இதனை வெளியிடுவதற்கு முன், பல்வேறு முன்னேற்றங்களை செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு, ஷீனான் கூறினார்.




# நவீன தலைக்கவசம்

செல்லும் இடத்திற்கான வழிகளையும், வானிலை குறித்த தகவல்களையும் தரும் புதிய ரக ஹெல்மெட் (தலைக்கவசம்) அமெரிக்காவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வாஷிங்டன் நகரிலேயே இந்த உயர் தொழில்நுட்பம் கொண்ட ஹெல்மெட்டை ஸ்கல் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

இதன்மூலம் செல்லவேண்டிய இடத்துக்கான வழிகளையும், வானிலை அறிவிப்புகளையும் தெரிந்துகொள்ளலாம்.

இதற்காக ஹெல்மெட்டின் வலதுபுறம் சிறிய அளவிலான காட்சிப்பலகை பொருத்தப்பட்டுள்ளது. அதன்மூலம் பின்புறம் வரும் வாகனங்களையும் பார்த்துக்கொள்ளலாம். இந்த ஹெல்மெட் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் விற்பனைக்குவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"




**இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**




**ஒரு** சமயம் சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு அவரது நண்பர் ஒருவரின் பண்ணை வீட்டில் தங்கியிருந்தார். அந்தப் பண்ணை வீடு மிகப்பெரிய நிலப்பரப்பில், இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் இருந்தது. அங்கே நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டன.

ஒரு நாள் மாலை, பண்ணை மைதானத்தில் விவேகானந்தர் நடந்து சென்றுகொண்டிருந்தார். அவருடன் நண்பரும், நண்பரின் மனைவியும் நடந்து சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது, சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு மாடு அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது. அதன் மூர்க்கத்தனமான ஓட்டத்தைப் பார்த்து பயந்துபோன நண்பரின் மனைவி, அப்படியே மயங்கி விழுந்துவிட்டார்.

நண்பர் மனைவியைத் தூக்க முயன்றார். அப்போது மாடு அவர்களை நெருங்கிவிட்டது. நண்பருக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இன்னும் சில நொடிகள் அங்கே இருந்தால் மாட்டின் கொம்புகளுக்கு இரையாக நேரிடும் என்பதை உணர்ந்த நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எழுந்து வேறு திசையில் ஓடினார். ஆனால், விவேகானந்தர் அப்படி இப்படி அசையாமல் ஆணி அடித்ததுபோல் அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்.

பாய்ந்து வந்த மாடு கீழே விழுந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விவேகானந்தரையும் விட்டுவிட்டு, ஓடிக்கொண்டிருந்த நண்பரைத் துரத்தியது.

அதிர்ஷ்டவசமாக ஒரு கட்டடத்திற்குள் புகுந்து தப்பினார் நண்பர். அதன்பிறகே பண்ணை ஊழியர்கள் ஓடிவந்து மாட்டைப் பிடித்துக் கட்டிப்போட்டனர்.

விவேகானந்தர் அதன்பிறகே அந்த இடத்தைவிட்டு அசைந்தார். அங்கு வந்த நண்பருக்கோ ஒரே வியப்பு. அப்போது நண்பரின் மனைவியும் மயக்கம் தெளிந்து எழுந்தார்.

"சிறிதுகூட பயமே இல்லாமல் அந்த ஆபத்தான நேரத்திலும் ஒரே இடத்தில் உறுதியாக உங்களால் எப்படி நிற்க முடிந்தது?" என்று கேட்டார் நண்பர்.

அதைக் கேட்டு மெல்லப் புன்னகைத்த விவேகானந்தர், "நான் வித்தியாசமாக எதையும் செய்துவிடவில்லை. வருவது வரட்டும் சமாளிப்போம் என்ற ஒருவித மன உறுதியுடன் நின்றுவிட்டேன். ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களுக்கு உரிய குணம். அதனால் தான் மாடு என்னை விட்டுவிட்டு, ஓடிக் கொண்டிருக்கும் உங்களைத் துரத்தியது," என்று முடித்தார்.

உயிருக்கு ஆபத்தான நேரத்தில் கூட, அதைக் கண்டு பயந்து ஓடாமல், வருவது வரட்டும் என்ற மன உறுதி பெற்றிருந்த சுவாமி விவேகானந்தரைப் பார்த்துப் பெரிதும் வியந்தார் நண்பர்.

## வாரம் ஒரு திருக்குறள்



குடிசெயல் வகை

**நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த**
**இல்லாண்மை ஆக்கிக்கொளல்.**

ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவதுதான் பிறந்த குடியை ஆளும் சிறப்பைத் தனக்கு உண்டாக்கிக் கொள்வதாகும்.

குறள்:1026

## தெரிந்து கொள்ளுங்கள்

### டோடோ

**சு**மார் 300 ஆண்டுகள் வரை இருந்து தற்போது முற்றிலும் அழிந்துவிட்ட ஒரு பறவையினம் டோடோ. இந்தியப் பெருங் கடலிலுள்ள மொரீஷியஸ் தீவுகளில் இது அதிகமாக வாழ்ந்தது. ஐரோப்பியர் வருகையால் இது அழிந்தது என்று கூறப்படுகிறது.

வான்கோழியைவிடப் பெரியது. பெரிய தலை. குட்டைக் கால்கள். வளைந்த அலகு. சிறிய இறக்கைகளைக்கொண்ட பறக்க முடியாத பறவை. ஐரோப்பியர் உணவுக்காக இதனை அழித்து விட்டனர். இதன் உருவம் லண்டனிலுள்ள மியூசியத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.



## புயலுக்கு பெயர்



உலக அளவில் புயல்களுக்குப் பெயரிடும் வழக்கம் 1945ஆம் ஆண்டில் துவங்கியது.

உலக வானிலை மையத்தில் உறுப்பினராக உள்ள நாடுகளின் பரிந்துரையின்படி ஒவ்வொரு புயலுக்கும் பெயர் சூட்டப்படுகிறது. உறுப்பினர் நாடுகள் சுழற்சி முறையில் புயல்களுக்குப் பெயரிடும். 2005ஆம் ஆண்டு வந்த புயலுக்கு ஃபானோஸ் என்று பாகிஸ்தான் பெயரிட்டது. 2008இல் ஏற்பட்ட நிஷா புயலுக்குப் பெயர் சூட்டியது வங்காளதேசம்.

2008இல் இந்தியா ஜோல் என்று ஒரு புயலுக்குப் பெயரிட்டது. மியன்மார் நாடு 2011இல் வந்த புயலுக்குத்தானே என்று பெயரிட்டது. 2012இல் நிலம் என்று பாகிஸ்தானால் பெயரிடப்பட்ட புயல் தமிழகம் மற்றும் ஆந்திராவில் பெரும் சேதத்தை விளைவித்தது.

## பற்களைச் சுத்தம் செய்யும் பறவை



ப்ளோவர் என்று ஒரு சிறு பறவை. இது முதலைகளுடைய பற்களைச் சுத்தம் செய்யும் வைத்தியராகப் பணியாற்றுகிறது. முதலை பலவிதமான பிராணிகளையும் சாப்பிடக்கூடியது. இதனால் இரையின் எச்சங்கள் அதன் கோரமான பற்களுக்கிடையே சிக்கிக்கொண்டிருக்கும்.

முதலை சாதுவாக வாயைத் திறந்து வைத்துக் கொண்டிருக்க இப்பறவை அதன் வாய்க்குள் சென்று அமர்ந்து ஒவ்வொரு பல்லாகச் சுத்தம் செய்யத் தொடங்கும். பல் இடுக்குகளில் சிக்கிக்கொண்டிருக்கும் இறைச்சியைக் கொத்தி எடுக்கும்.

முதலை அசந்து வாயை மூடினால் பறவையின் உயிர் போய்விடும். ஆனால் முதலை அப்படிச் செய்வதில்லை. தன் பற்கள் சுத்தப்படுவதற்காகப் பொறுமையாகக் காத்திருக்கிறது. அதேநேரத்தில் பறவைக்கும் தாராளமான இரை கிடைத்துவிடுகிறது.

## தெரிந்து கொள்ளுங்கள்...

திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள்:

1. அறம்
2. உலகப் பொதுமறை
3. தமிழ் மறை
4. பொய்யாமொழி
5. முப்பால்
6. வள்ளுவம்
7. தெய்வ நூல்
8. வாயுறை வாழ்த்து
9. உத்தரவேதம்

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 04.11.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1016**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 1014


**தே.சோபிகா, ஊரி, களபூமி,**
**காரைநகர்.**

பரிசுக்குரியவர்: 1014

பாராட்டுக்குரியவர்கள்

01. அ.அருண், புனித சாள்ஸ் ம.வி.
02. ரா.உஷாந்தினி, யா/ ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.
03. க.சமிந்தா, குருநகர், யாழ்ப்பாணம்.
04. து.கவின், பரந்தன், கிளிநொச்சி.
05. சௌ.பார்கவி, பூவரசங்குளம், வவுனியா.
07. ஆ.அந்தியா, மட்டுவில், சாவகச்சேரி.
08. பொ.மதுஷிகா, கோப்பாய் மேற்கு, கோப்பாய்.

## சண்டைகள் பலவிதம்



**கா**ளைகளுக்கு இடையே நடைபெறும் சண்டை தெரியும். சேவல் சண்டை தெரியும். மீன் சண்டை தெரியுமா? வியட்நாம், மலாய், லாவோஸ், கம்போடியா நாடுகளில் இன்றும் மீன் சண்டை நடத்தும் வழக்கம் இருக்கிறது.

கிரிக்கெட் எனப்படும் வண்டுகளைக்கொண்டு சண்டை நடத்தி ரசித்து மகிழ்கிறார்கள் சீனர்கள்.

ஒட்டகச் சண்டை அமெரிக்காவின் டெக்ஸஸிலும் ஆப்கானிஸ்தானிலும் நடக்கின்றது.

## உலோகச் செய்திகள்




- உலோகங்களில் மிகவும் கனமானது அஸ்மியம். மிகவும் லேசானது லித்தியம்.
- கலியம் என்ற உலோகம் கையில் வைத்தாலே உருகிவிடும்.
- உலகில் மிகவும் அதிகமாகப் புதைந்து கிடக்கும் உலோகம் அலுமினியம்.
- இனிப்புச் சுவைகூட்டும் சாக்ரீன் தயாரிக்க மங்கனீசு உலோகம் பயன்படுகிறது.
- டயர்கள் தயாரிக்க டெலூரியம் என்ற உலோகம் பயன்படுகிறது.
- புளூடோனியம் என்ற உலோகம் செயற்கை முறையில் தயாரிக்கப்படுகிறது.

## முள்ளம்பன்றி மீன்

மீன் இனத்தில் முள்ளம்பன்றி மீன் என்றொரு வகை உள்ளது. இதன் உடலில் நீண்ட குச்சி போன்ற முட்கள் இருக்கும். இதனால் இதற்கு இந்தப் பெயர் வந்தது. இந்த முட்கள் பொதுவாக உடலோடு ஒட்டியபடியே இருக்கும். எதிரிகளால் ஏதாவது ஆபத்து என்றால் இந்த முட்கள் சிலிர்த்துக் கொண்டுவிடும். எதிரி அருகில் வரும்போது முள்ளம்பன்றி மீன் அளவுக்கதிகமான நீரைக் குடிக்கும். இதனால் இதன் உடல் இரண்டுமடங்காக உப்பி, முட்கள் சிலிர்த்துக்கொண்டு நிற்கும் ஒரு பந்துபோல காணப்படும். இதனால் எதிரி இந்த மீனைத் தாக்க முடியாமல் தயங்கிபடியே இடத்தைவிட்டு அகன்றுபோய் விடும். தனக்குவந்த ஆபத்து போய்விட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, தான் விழுங்கிய நீரை கொஞ்சம்கொஞ்சமாக வெளியேற்றிப் பழைய நிலைக்குத் திரும்பிவிடுகிறது இந்த ஆச்சரிய மீன்.

## இளமையில் சாதித்தவர்கள்

- அக்பர் 12ஆவது வயதில் முடிசூட்டிக் கொண்டார்.
- அலெக்ஸாண்டர் 18 வயதில் மன்னரானார்.
- மாணிக்கவாசகர் 24 வயதில் திருவாசகம் பாடினார்.
- சந்திரகுப்தர் 25ஆவது வயதில் மொரியப் பேரரசை நிறுவினார்.
- காந்தியடிகள் 25 வயதில் தென்னாபிரிக்காவில் அறப்போராட்டம் நடத்தினார்.
- மார்க்கோனி 27 வயதில் வானொலியை உருவாக்கினார்.
- நெப்போலியன் 27 வயதில் ஆஸ்திரியா நாட்டை வென்றார்.
- கிரஹாம்பெல் 29 வயதில் தொலைபேசியைக் கண்டுபிடித்தார்.

**இதுவரை**

**இடி அமீன் உகண்டா இராணுவத் தளபதியாக ஜனாதிபதி ஒபேடேயால் நியமிக்கப் படுகிறான். உகண்டாவில் இராணுவ சர்வாதிகாரத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறான் இடி அமீன்.**

**இனி...**

**தன்** முன்னால் இடி அமீன் அவ்வாறு உரத்துச் சிரிப்பதை மரியாதைக் குறைவாகவே அவர் நினைத்தார். சூழ்நிலை காரணமாக அதனை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

"ம்... நீ தானே இராணுவத்தளபதி, உகண்டா இராணு வத்தை உகண்டா இராணுவமாக மாற்றும் பொறுப்பு உன்னுடையதுதான்!" என்றார்.

அவனுக்கு முன்னால் நிற்பவர்கள் அஞ்சி நடுங்கத் தொடங்கிவிடுவார்கள்.

உபதளபதியை நீண்டநேரம் நடுங்க வைக்கவில்லை! "என் உத்தரவுகளுக்கு ஒவ்வொரு அர்த்தம் இருக்கும். அதை நீ முதலில் கற்றுக்கொள்ள வேண்டும்!"

"கற்றுக் கொள்கின்றேன்"

"உரிய மரியாதையுடன் அனுப்பிவை! என்றால், பெறவேண்டிய தகவல்களை பெற்றுவிட்டு, கொன்றுவிடு! என்று அர்த்தம்!" என்று அமீன் கூறியபோது, உபதளபதியின் முகத்தில் ஒரு நொடு திகில் பரவி விலகியது.

"நன்றாகக் கவனி! என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? அழுக் குத்துணியை துவைப்பதுபோல துவை, என்று அர்த்தம்!"

இடி அமீன் ஒன்றும் தமா சாகக் கூறவில்லை என்பது அடுத்துவந்த நாட்களில் தெரிந்தது.

"வெள்ளைக்காரர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் வாலை ஆட்டும் நாய்கள் ஒழிக்கப் பட்டனர். இனிமேல்

தேவையானளவு செல்வத்தைத் திரட்டுவதிலேயே ஒபேடே குறியாக இருந்தார். அதனால் நாட்டின் நிர் வாகமும் கெட்டுக் குட்டிச்சுவரானது.

ஒபேடே மேல் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு நாளுக்கு நாள் வளர்ந்தது.

இடி அமீன் அவசரப்படவில்லை. ஜனாதிபதி ஒபேடேயைச் சுற்றி மிக நிதானமாக சிலந்தி வலை பின்னுவதுபோல் இலாவகமாக வலை பின்னிக் கொண்டிருந்தான்.

மூன்று ஆண்டுகள் ஒபேடேயை ஜனாதிபதியாக வைத்துக்கொண்டு அவரைச் சுற்றி வலை பின்னி முடித்தான்.

1969 டிசம்பர் 19ஆம் திகதி உகண்டா மக்கள் காங்கிரசின் பொதுக் கூட்டம் ஒன்று கம்பாலா நகர மண்டபத்தில் நடைபெற்றது.

மண்டபத்தைச் சுற்றி இராணுவம் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தது.

கூட்டம் முடிந்தபோது இரவாகி விட்டது,

ஜனாதிபதி ஒபேடே தனது அந் தரங்கச் செயலாளரான ஹென்றி கியம்பாவுடன் அளவளாவியபடி மண்டப வாயிலில் நிறுத்தப்பட்டி ருந்த தனது காரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

டுமீல்!

திடீரென்று துப்பாக்கி வெடித்த ஓசை எழுந்தது.

சட்டென்று ஜனாதிபதியையும், இழுத்துக்கொண்டு தரையோடு தரையாகப் படுத்துவிட்டார்



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

**உண்மைத் தொடர்...**

**அதிர் இடி (10)**

அதன்பின்னர் இராணுவத்தில் தன் வித்தையைக் காட்டத் தொடங் கினான் இடி அமீன்.

பிரிட்டனிலும், இஸ்ரேலிடமும் பயிற்சிபெற்ற அதிகாரிகள், சிப்பாய்கள் ஆகியோரின் பட்டியல் அமீனின் மேசையில் கிடந்தது.

"அத்தனை பேரையும் படையில் இருந்து தூக்கிவீச வேண்டும். அதிகாரிகளை அவர்களுக்கு உரிய மரியாதையுடன் அனுப்பிவைக்க வேண்டும்!" என்றான் அமீன்.

உபதளபதிக்கு அமீன் கூறியது விசித்திரமாக இருந்தது.

"அப்படி அனுப்பிவைத்தால் அவர்கள் எதிர்காலத்தில் இடையூறாக இருக்கமாட்டார்களா?" என்று பணிவாகக் கேட்டபோது அமீன் பொட்டென்று சிரித்துவிட்டான்.

"நீ எத்தனை வருடமாக இராணு வத்தில் இருக்கிறாய்?

பத்து வருடமாக.

"அதாவது எனக்கு சீனியர்! நான் உனக்கு ஜீனியர்! ஆனால் நான் தளபதி, நீ உபதளபதி" என்று அமீன் சிரித்த சிரிப்பில் உபதளபதி ஆடிப்போனான்.

இடி அமீன் திடீர் திடீர் என்று என்ன செய்வான் என யாரும் ஊகிக்க முடியாது.

அதனால் அமீன் சிரித்தாலே

உகண்டா இராணுவம் உகண்டாவுக்கு மட்டும் உண்மையாகவும், விசுவாசமா கவும் இருக்கும்!" என்று ஒபேடேயிடம் பெருமையுடன் கூறினான் அமீன்.

"எத்தனைபேர் கொல்லப்பட்டனர்?" என்ற கேள்விக்கு "அதிகாரிகள் உட்பட 166பேர்," என்ற அமீனின் பதிலுக்கு ஒபேடே திக்கித்துப்போனார்.

"அதிகக் கொலை," என்று சின்னதாய் ஆட்சேபிக்க,


"அதிகம் ஆனால் அவசியம்!" என்றான் சுருக்கமாக அமீன்.

இராணுவத்தில் காலியான பதவி களுக்கு தனது விசுவாசிகளை நியமித் தான் அமீன்.

ஸயர் கிளர்ச்சியாளர்கள், சூடான் நாட்டில் கிளர்ச்சி செய்துவிட்டு உகண்டா வில் குடியேறிய நுபிய இனத்தவர் ஆகி யோரும் இராணுவத்தில் சேர்க்கப்பட் டனர்.

உகண்டாவில் உளவுப் பிரிவு, பொதுச்சேவைப் பிரிவு ஆகியவற்றிலும் களையெடுப்பு நடத்தி, தனக்குப் பிடித் தமான ஆட்களை நியமித்தான் அமீன்.

ஜனாதிபதி ஒபேடே பற்றிய இரகசி யங்களையும் அமீன் உளவுப்பிரிவு மூலம் பெற்றுக்கொண்டான்.



அந்தரங்கச் செயலாளர்.

தரையில் விழுவதற்கு இடையே துப்பாக்கிக்குண்டு ஒபேடேயின் கீழ்த் தாடையைத் துளைத்துவிட்டது.

கைக்குண்டு ஒன்றும் வீசப்பட்டு உருண்டு வந்தது.

கைக்குண்டு உருண்டு வந்ததைப் பார்த்ததும், பின்னால் வந்த காவலர் களும் பயத்தில் விழுந்து தரையோடு தரையாகப் படுத்துவிட்டார்கள்.

ஜனாதிபதி ஒபேடேவின் கதை முடிந்தது என்று நினைத்தார்கள்.

ஆனால் கைக்குண்டு வெடிக்க வில்லை,

சதித்திட்டம் போட்டவர்களை கைக்குண்டு ஏமாற்றிவிட்டது.

உடனடியாக ஜனாதிபதியை சிகிச்சைக்காகக் கொண்டு சென்றனர். அவரது கீழ் உதடு கிழிந்திருந்தது. இரண்டு பற்களும் அகற்றப்பட்டன.

அதேசயம் இடி அமீனின் இரகசிய அலுவலகத்திலும், இடி அமீன் குத்திய குத்தில் ஒருவனுக்கு முன்வாய்ப் பற்கள் உடைந்து விழுந்தன.

ஜனாதிபதி ஒபேடேயை கொலை செய்யும் முயற்சியில் தோல்வி கண்டவன்தான் இடி அமீனின் குத்து வாங்கிக் குற்றுயிராகிக் கொண்டி ருந்தான்.

"கொடுத்த வேலையை ஒழுங் காக முடிக்கத் தெரியவில்லை, நீயெல்லாம் பூமிக்குப் பாரம் நீ உயிரோடு இருந்தால் எனக்கும் கெட்ட நேரம்"

டுமீல்!

இடி அமீனின் பிஸ்டல் துப்பிய ரவை போட்ட துவாரத்தால் அவன் உயிர் வெளியேறியது.

இடி அமீனின் கட்டளைப்படி உடலை அப்புறப்படுத்திய படையின ருக்கு அதிர்ச்சி ஒன்று காத்தி ருந்தது.

கொல்லப்பட்டவனின் கையில் இரண்டு விரல்கள் காணாமல் போயி ருந்தன.

ஜனாதிபதி ஒபேடேயை பார்க்க ஒடோடிச் சென்றான் இடி அமீன்.

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன்
பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக. (முரசு 1021 - கு.எ. போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில் இருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 1000/= ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 545

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடைன்யக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **04.11.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 545
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 543 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ 1 | சி 2 | ரி 3 | ய 4 | ன் 5 | |
| சு 7 | | தி 9 | க 10 | அ 11 | த் 12 |
| வா 13 | சி 14 | ப் 15 | பு 16 | | தா 18 |
| ச 19 | ம் 20 | | | ய 23 | தா 24 |
| ம் 25 | ய 26 | ணி 27 | ண் 28 | பெ 29 | |
| | ச 32 | ப 33 | ம 34 | ர் 35 | தி 36 |

**இடமிருந்து வலம்**

01. அன்பு வைத்தல்.
07. இராமனும், சீதையும் வனவாசம் இருந்த இந்த ஊரில் இருந்தது தான், இராவணன் கவர்ந்து சென்றான்.
13. சித்திரை மாதம். (குழம்பியுள்ளது)
21. களவு, குற்றங்களில் சம்மந்தப்பட்ட பொருள். (குழம்பியுள்ளது)
25. திருநாள், கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (திரும்பியுள்ளது)
28. செய்தல் ; போன்றி ருப்பது. (திரும்பியுள்ளது)
31. சென்றடையும். (திரும்பியுள்ளது)
35. குறைவு ; சிதைவு.

**மேலிருந்து கீழ்**


01. பிற்காலத்து உதவிக்காக சேமிக்கப்படும் நிதி.
02. தமிழ்நாட்டில் பெரிய கோயில் எனப்படுவது.
03. சீதாதேவியை, இராவணன் சிறைவைத்திருந்த போது, சீதைக்கு நற்றுணையாக இருந்தவள். (குழம்பியுள்ளது)
04. கட்டல் ; நியமித்தல். (குழம்பியுள்ளது)
05. கம்பு.
23. போட்டிகளில் வெற்றிபெற்றால் கொடுக்கப்படுவது ; கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (திரும்பியுள்ளது)
26. அழகு.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 543 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

S.அக்கினேஸ், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.இராஜகோபால், அடைக்கலம்தோட்டம், வட்டுக்கோட்டை.
02. ம.அனிசா, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.
03. த.சர்மிலா, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
04. கே.சுவர்ணியா, கண்டி வீதி, சாவகச்சேரி.
05. ப.கந்தையா, கல்வளை, சண்டிலிப்பாய்.
06. எம்.சஞ்சீகா, உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டி.
07. தெ.சர்மிலன், ஜின்னாநகர், திருகோணமலை.
08. எம்.எம்.அப்துல்காதர், கட்டுக்கெலியாவ, மிகிந்தலை.
09. பி.சைலி, பிரதான வீதி, கண்டி.



இங்க என்ன சொல்லுது?

## ஆண்ட்ரியாவிடம் எனக்குப் பிடித்தது - அனிருத்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் உறவினரான அனிருத் ஐஸ்வர்யா தனுஷின் 3 படம்மூலம் இசையமைப்பாளர் ஆனார்.

முதல் படத்தில் இவர் இசையமைத்த ஒய் திஸ் கொலெவறி பாடல்மூலம் மிகவும் பிரபலம் ஆனார். இந்நிலையில் ஐஸ்வர்யா தனுஷ், நடிகை ஸ்ருதி ஹாசன், நடிகை ஆண்ட்ரியா, இயக்குனர் கிருத்திகா உதயநிதி பற்றி மனம் திறந்துள்ளார்.

3 போன்ற ஒரு படத்தை முதல் படமாக எடுக்க ஐஸ்வர்யா தனுஷ் நிஜமாகவே தில்லானவர் தான் என்று அனிருத் தெரிவித்துள்ளார். மேலும் 3 பட நாயகி ஸ்ருதிஹாசன் பல திறமைகளை தன்னகத்தே கொண்டவர். பல ஸ்டைல்களில் பாடுவதுதான் ஆண்ட்ரியாவிடம் என்னை மிகவும் கவர்ந்த விடயம்.

வணக்கம் சென்னை படத்தில் வரும் எங்கடி பொறந்த பாடலுக்கு நானும், ஆன்ட்ரியாவும் பாடவேண்டும் என்று இயக்குனர் கிருத்திகா உதயநிதி விரும்பினார்.

எங்கடி பொறந்த பாடலை பதிவு செய்யும்போது நான் ஆண்ட்ரியாவை சந்திக்கவே இல்லை. அப்போது நான் மும்பையில் இருந்தேன், ஆண்ட்ரியா ஸ்டுடியோவில் அவர் பகுதியை மட்டும் பாடிவிட்டு சென்றார் என்று கூறியுள்ளார்.

மேலும் கிருத்திகா மிகவும் அன்பாகப் பழகக்கூடியவர் என்று நால்வருக்கும் புகழாரம் சூடியுள்ளார் அனிருத்.

## வேடம் மாறுகி

தமிழ், தெலுங்கில் தயாராகு 'ருத்ரமாதேவி' ராணி வேடத்தில் அனுஷ்காவில்கெட்டப்' நடிகை அனுஷ்கா தமிழ், தெலுகில் தயாராகும் ருத்ரமாதேவி படத்தில் ராணி தேத்தில் வருகிறார் ஆந்திராவில் ஆட்சிசெய்த ருத்ரதேவியின் வாழ்க்கை வரலாற்றை மையமா வைத்து சரித்திர படமாக இது தயாராகி. இப்படத்தில் நடிக்க அனுஷ்கா வாள் சண்ை குதிரையேற்றம் பயிற்சிகளும் செய்தார்.

இதில் ராணா, பிரகாஷ்ராஜ் ான்றோரும் முக்கிய கேரக்டரில் வருகிறார்க இளையராஜா இசையமைக்கிறார். சுமார் ரூ.55காடி செலவில்

## கவர்ச்சி நடிகையால் கலக்கத்தில் டிகர்கள்

கவர்ச்சி நடிகை ஷகிலா த வாழ்க்கையை சுயசரிதையாக எழுதுகிறார். இால் மலையாள நடிகர்கள், இயக்குனர்கள் பலர் லக்கத்தில் இருப்பதாக தகவல் வெளியாகிளது.

ஷகிலா 1980, 90-களில் மயாள பட உலகி முன்னணி கவர்ச்சி நடிகையாக ந்தார். இவர் நடித்த பல படங்கள் வயது வவர்கள் மட்டுமே பார்க்கும் வகையில் 'ஏ' சான்றி பெற்றுவந்தன. தாராள ஆடை குறைப்பு செய்மலையாள ரசிகர்களை கிறங்கடித்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட படங்ல் நடித்தார். ஷகிலா படங்கள் ஓடும் தியேட்ளில் ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது. மம்மு, மோகன்லால் படங்களை வசூலில் ஷகிலா பகள் பின்னுக்கு தள்ளின. இதனால் ஷகிலாவுக்திரான சதிவலைகள் பின்னப்பட்டு மலையாள படங்களில் இருந்து ஓரம் கட்டப்பார்.

தற்போது தமிழில் கவர்ச்சி வேடங்களில் நடித்துவருகிறார். து வாழ்க்கையில் நடந்த மகிழ்ச்சியான சம்பவங்களையும், கசப்பான நிகழ்வுகளை சுயசரிதையில் எழுத இருக்கிறார். சினிமாவின் இருட்டு பக்கங்களையும், புத்தில் உள்ளது உள்ளபடி கொண்டுவருகிறார்.

சுயசரிதை புத்தகத்தை விழா நடத்தி வெளியிட திட்டமிள்ளார். சுயசரிதை எழுதுவதால் புதுப்படங்களில் நடிக்கவந்த வாய்ப்பைதுக்கிவிட்டார்.



நவீன சரஸ்வதி சபதம்

## கவர்ச்சியின் இரகசியம்

நயன்தாரா நடித்த கவர்ச்சி காட்சிகள் இரகசியமாகப் படமானது. பிரபுதேவாவை காதலித்த போது கவர்ச்சி காட்சிகளில் நடிக்கமாட்டேன் என்று கண்டிஷன் போட்டு படங்களை ஒப்புக்கொண்டு நடித்துவந்தார். அவருடனான காதல் முறிந்த பிறகு மீண்டும் நடிக்கவந்தார். முன்பு இல்லாத அளவுக்கு இப்போது கவர்ச்சி காட்சிகளில் நடிக்க ஒப்புக் கொள்கிறார்.

இந்தியில் வித்யாபாலன் நடித்து வெளியான 'கஹானி' படம் தமிழ், தெலுங்கில் ரீமேக் ஆகிறது. ஆரம்பத்தில் இப்படத்தில் நயன்தாராவை நடிக்க கேட்டபோது ஒப்புக் கொள்ளவில்லை. கர்ப்பிணியாகவும், கவர்ச்சி காட்சிகளிலும் நடிக்க வேண்டி இருந்ததால் மறுத்ததாக கூறப்பட்டது.

ஆனால் சம்பள விஷயத்தில் சமரசம் ஏற்படாததாலேயே ஓ.கே சொல்லவில்லை என்று கூறப்பட்டது. பின்னர் கோடிகளில் அவர்கேட்ட சம்பளத்தை தர தயாரிப்பாளர்கள் ஒப்புக்கொண்டபின் நடிக்க சம்மதித்தார்.

துணிச்சலாக நயன்தாரா கவர்ச்சி காட்சிகள் உள்ளிட்ட ஒரு சிலர் இப்படத்தில் கவர்ச்சி காட்சிகளில் நடித்திருக்கிறார். சமீபத்தில் அவர் நடித்த இயக்குனர் சேகர் கம்முலா மற்றும் கேமராமேன் மட்டுமே பங்கேற்க இரகசியமாக நடத்தப்பட்டது.

## த்தம் ...னை...

இசை அமைப்பாள
ராயினுக்கு உதட்
ப்பாடு விதித்தார்.
போன்ற படங்க
சில் என்ற படத்
க்டு செய்கிறார்.
களில் நடிக்க வா
. எனக்கு ஏற்ற
துப்பட்டறையை
பு பயிற்சிபெற்றே
டிப்பதற்கு என் ம
ால் எந்த ஹீரோய
கக்கூடாது, நெருக்
டிஷன் போட்டிருக்
கும்படித்தான் இ
தமாட்டேன். எனக

## நடிகை கல்யாணிக்கு டும் டும் டும்...

நடிகை கல்யாணிக்கு திருமணம் நிச்சயமாகியுள்ளது. இவர் ரமணா, ஜெயம் படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தார். மறந்தேன் மெய்மறந்தேன் படத்தில் கதாநாயகி ஆனார். பிரதி ஞாயிறு 9.30 முதல் 10 மணி வரை, இன்பா படங்களிலும் நாயகியாக நடித்தார்.

கல்யாணிக்கும் மும்பையை சேர்ந்த டாக்டர் ரோகித்துக்கும் திருமணம் செய்துவைக்க பெற்றோர் முடிவுசெய்துள்ளனர். இதுகுறித்து கல்யாணி கூறியதாவது:

எனக்கு திருமணம் நடக்க உள்ளது. இது முழுக்க பெற்றோர் பார்த்து நிச்சயம்செய்த திருமணம். மணமகன் ரோகித்தின் தாய், தந்தை என்னை உறவினர் திருமண நிகழ்ச்சியொன்றில் பார்த்துள்ளனர். அவர்களுக்கு பிடித்துப்போனது. என் பெற்றோரை அணுகி பெண் கேட்டு உள்ளனர். அவர்களுக்கும் மாப்பிள்ளையை பிடித்ததால் திருமணம் நிச்சயமானது. எங்கள் திருமணம், டிசம்பர் 12ஆம் திகதி மகாலிங்கபுரம் கோவிலில் நடைபெறும். திருமண வரவேற்பு நிகழ்ச்சி கிண்டியில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் நடக்கிறது.



## படமாகும் சீ...

மனிதராக அவதரித்ஹானான சீரடி சாய்பாபாவின் வாழ்க்கைமா படமாகிறது. தமிழ், தெலுங்கு, இந்தி ப மூன்று மொழி களில் இப்படத்தை எடுக்னர். இதற்கு சீரடி ஜெய் சாய்ராம் எனப் பெயபட்டு உள்ளது. இதில் சீரடி சாய்பாபாவஹாத்தா ரெட்டி நடிக்கிறார்.

இப்படத்த திரைக்கதை
அமைத்துப்பதிவு செய்து
பாஸ்ாபா இயக்குகிறார்
பற்றி அவர்
கிபாது:- சாய்பாபா
கையில்
ர சம்பவங்கள்

## தெடயழகில் ...

குட்டாவடை அணிந்து
வருகிறாத்ரிஷா. முன்பெல்
பக்கா லேியான உடைகள
கொள்வாஷா. ஆனால் சமீ
குட்டையடைகளை அணி
ில் நடிதவிட நிஜத்தில் அ
ள்? என்று கேட்டா
டிக்க முடியும். எ
ஷ்டத்துக்கு டிரஸ்
நிஜத்தில் அப்படிய
அந்த டிரஸ்களை
கவர்ச்சிகரமான உ
யை தீர்த்துக்கெ

# டம் மாறுகிறார் அனுஷ்கா

லுங்கில் தயாராகு 'ருத்ரமாதேவி'
ல் அனுஷ்காவிஙிகெட்டப்'
ஷ்கா தமிழ், தெலுில் தயாராகும்
டத்தில் ராணி தே்தில் வருகிறார்.
ஆட்சிசெய்த ருத்ர‌தேவியின்
லாற்றை மையமாவைத்து
க இது தயாராகி. இப்படத்தில்
கா வாள் சண்டை குதிரையேற்றம்
செய்தார்.
ா, பிரகாஷ்ராஜ் ானறோரும்
டரில் வருகிறார்க இளையராஜா
றார். சுமார் ரூ.55காடி செலவில்

எடுக்கின்றனர். இந்த படத்தில் சரித்திர கால ஆடைகள் அணிந்து புதுக் வடிவத்தில் வருகிறார் அனுஷ்கா. படப்பிடிப்பில் அடையாளம் காண முடியாத அளவுக்கு ஆளே மாறி இருக்கிறார்.

ஏற்கனவே, அருந்ததி படத்தில் வித்தியாசமான வேடத்தில் நடித்து தமிழ், தெலுங்கு ரசிகர்களை கவர்ந்தார். இப்படம் இரு மாநிலங்களிலும் வெற்றிகரமாக ஓடி வசூலை குவித்தது. அதுபோல் 'ருத்ரமாதேவி'யும் தனக்கு முக்கிய படமாக இருக்கும் என்று நம்புகிறார். இப்படம் மூலம் விருது கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கிறார்.


வின்

# ச்சி நடிகையால் கத்தில் டிகர்கள்

டிகை ஷகிலா த வாழ்க்கையை
எழுதுகிறார். இல் மலையாள
க்குனர்கள் பலர் லக்கத்தில்
வல் வெளியாகிளது.
80, 90-களில் மயாள பட உலகில்
ர்ச்சி நடிகையாக நந்தார். இவர்
ங்கள் வயது வவர்கள் மட்டுமே
கயில் 'ஏ' சான்றி பெற்றுவந்தன.
குறைப்பு செய்துலையாள
றங்கடித்தார்.
மேற்பட்ட படங்ல் நடித்தார்.
ள் ஓடும் தியேட்ளில் ரசிகர்கள்
மோதியது. மம்மு, மோகன்லால்
ூலில் ஷகிலா பகள் பின்னுக்கு
ால் ஷகிலாவுக்எதிரான சதிவலை
ந்து ஓரம் கட்டப்டார்.
நடித்துவருகிறார். ாது வாழ்க்கையில்
ான நிகழ்வுகளை் சுயசரிதையில்
கங்களையும், புத்தில் உள்ளது

வெளியிட திட்டமிள்ளார். சுயசரிதை
கவந்த வாய்ப்பைதுக்கிவிட்டார்.

# ஷாருக்கானின் கூச்ச சுபாவம்

இந்தி நடிகர் ஷாருக்கானின் தைரியம், கவர்ச்சி, நகைச்சுவைப் பேச்சாற்றல் போன்றவை அனைவராலும் அறியப்பட்டது. திரைப்படங்களில் தோன்றும்போதும் அவர் தனது புத்திசாலித்தனம், நேர்த்தி மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்துவார். மற்ற எவரும் அறியாத ஒரு குணம் அவரிடம் உண்டு எனில் அது அவரது கூச்சசுபாவம் என்று அவரே சமீபத்தில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்தார்.

'ஓம் ஷாந்தி ஓம்' படத்தில் வரும் தர்த்-ஈ-டிஸ்கோ பாடல் காட்சியின்போது ஷார்ட்ஸ் அணிந்து நடிக்க வேண்டியிருந்ததால்தான் மிகவும் அவஸ்தையாக உணர்ந்ததாக ஷாருக் தெரிவித்தார். நீச்சல் காட்சி ஒன்றில் காற்சட்டையுடன் அவர் குளத்தில் இறங்கவேண்டியிருந்தது. அப்போது அவரைச் சுற்றிலும் நிறையப் பெண் நடனக்கலைஞர்கள் இருந்ததால் அவர் மிகவும் சங்கோஜமாக உணர்ந்துள்ளார். பின்னர் தயாரிப்புத் தரப்பிடம் கூறி அனைவரையும் வெளியே அனுப்பியபின்னரே ஷாருக்கான் அந்தக் காட்சியில் நடித்துள்ளார்.

அதேபோல் ஒருமுறை பிரிட்டிஷ் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்றில் ஷாருக்கான் பயணம் செய்துகொண்டிருந்தார். அப்போது விமானப் பணிப்பெண் அவரிடம் வந்து சாப்பிட என்னவேண்டும் என்று கேட்டுள்ளார். அவரது உச்சரிப்பு புரியாத ஷாருக்கான் அது குறித்து அவரிடம் கேட்க கூச்சப்பட்டுக்கொண்டு பசியுடனே தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்ததாகப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.


ஜகஜ்ஜால புஜபல
தெனாலிராமன்

# ரியம்

கள் இரகசி
தலித்த
ட்டேன் என்று
காண்டு
றிந்த பிறகு
அளவுக்கு
ப்புக்

ன 'கஹானி'
த்தில்
ப்புக்
ளிலும் நடிக்க

.கே
ட்ட
தார்.
நயன்தாரா
ாட்சிகள்
ஒரு சிலர்

# த்தம் கொடுக்கக் கூடாது; மனைவியின் கண்டிஷன்


இசை அமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் ஹீரோவாக நடிக்கிறார். படத்தில்
ரோயினுக்கு உதட்டில் முத்தம் தரக்கூடாது என்று அவரது மனைவி
ப்பாடு விதித்தார். வெயில், ஆயிரத்தில் ஒருவன், தலைவா, ராஜா
ரி போன்ற படங்களுக்கு இசை அமைத்திருக்கும் ஜி.வி.பிரகாஷ் அடுத்து
சில் என்ற படத்தில் ஹீரோவாக நடிக்க உள்ளார். மணிநாகராஜ்
க்டு செய்கிறார். ஹீரோவாக நடிப்பதுபற்றி பிரகாஷ் கூறியதாவது: பல
களில் நடிக்க வாய்ப்புவந்தது. பென்சில் படம் பள்ளி மாணவனை பற்றிய
து. எனக்கு ஏற்ற விதத்தில் இருந்ததால் நடிக்க ஒப்புக்கொண்டேன்.
துப்பட்டறையை சேர்ந்த பாபு மற்றும் 'ஆடுகளம்' நரேன் ஆகியோரிடம்
ரபு பயிற்சிபெற்றேன். ஹீரோயினாக ஸ்ரீதிவ்யா நடிக்கிறார்.
நடிப்பதற்கு என் மனைவி சைந்தவி தடை எதுவும் சொல்லவில்லை.
ால் எந்த ஹீரோயினுடன் நடித்தாலும் உதட்டில் முத்தம்கொடுத்து
கக்கூடாது, நெருக்கமான காட்சிகளில் நடிக்கக்கூடாது என்று
டிஷன் போட்டிருக்கிறார். என் படம் குடும்பத்தினருடன் அமர்ந்து
க்கும்படித்தான் இருக்கும். நடிக்க வந்ததால் இசை அமைப்பதை
ந்தமாட்டேன். எனக்கு சோறுபோடுவது இசைதான்.

# டமாகும் சீரடி சாய்பாபா கதை

தராக அவதரித்தஹானான சீரடி
ாவின் வாழ்க்கைிமா படமாகிறது.
தலுங்கு, இந்தி ிய மூன்று மொழி
ப்படத்தை எடுக்னர். இதற்கு சீரடி
ராம் எனப் பெயப்பட்டு உள்ளது.
சீரடி சாய்பாபாவாதாத்தா ரெட்டி
டிக்கிறார்.

இப்படத்து திரைக்கதை
அமைத்துிப்பதிவு செய்து
பாஸ்யாபா இயக்குகிறார்.
படபற்றி அவர்
கூபோது:- சாய்பாபாவின்
வ்கையில்
நந சம்பவங்கள்

திரைக்கதையாக்கப்பட்டு உள்ளது. இதுவரை பாபாவின் வாழ்க்கையை பதிவுசெய்தவர்கள் சொல்லாமல்விட்ட சில சம்பவங்கள் இந்த படத்தில் இடம்பெறுகிறது. பாபாவை பற்றி படம் எடுக்கவேண்டும் என்பது என் வாழ்க்கை இலட்சியம். தற்போது நிறைவேறிவிட்டது என்றார். இந்த படத்தில் ராஜ்குமார், சக்திவேல், நளினிகாந்த், விஜயகுட்டி, பாவனா, நாராயணராவ், ரேகா லட்சுமி பாய், லஷ்மா ரெட்டி போன்றோரும் நடிக்கின்றனர். சாகித் ஒளிப்பதிவு செய்துள்ளார். பழனி பாரதி, பிறைசூடன், எம்.உசேன் ஆகியோர் பாடல்கள் எழுதி உள்ளனர். சாய்வெங்கடேஸ் வரம்மா, ஸ்ரீ சாய்கல்பா வி.ராதிகா ஆகியோர் தயாரித்து உள்ளனர்.





# தொடையழகில் கிறங்கடிக்கிறார் த்ரிஷா

குட்டைபாவடை அணிந்து தனது ரசிகர்களை கிறங்கடித்து வருகிறா த்ரிஷா. முன்பெல்லாம் சேலை, ஜீன்ஸ் டீசர்ட் என்று பக்கா ஹோலியான உடைகளுடன் சினிமா விழாக்களில் கலந்து கொள்வார்ஷா. ஆனால் சமீபகாலமாக தொடையழகை காண்பித்தபடி குட்டையாஉடைகளை அணிந்துகொண்டு வருகிறாராம். சினிமாவில் நடிப்தவிட நிஜத்தில் அதிக கிளாமராக உடையணிவது ன்? என்று கேட்டால், சினிமாவில் கதைக்கேற்பதான் நடிக்க முடியும். எனக்கு பிடிக்கும் என்பதற்காக இஷ்டத்துக்கு டிரஸ் அணியமுடியாது. ஆனால் நிஜத்தில் அப்படியல்ல, எனக்கு என்ன பிடிக்குமே? அந்த டிரஸ்களை அணியலாம். அதனால்தான் கவர்ச்சிகரமான உடைகளை அணிந்து என் ஆசையை தீர்த்துக்கொள்கிறேன் என்கிறாராம் த்ரிஷா.

# தேன் கிண்ணம்



## நானும் காதலிக்கிறேன்...

அவள் பெண்ணல்ல
என்றான் என் நண்பன்
பிசாசா? என்றேன் நான்
இல்லை,
தேவதை என்றான்.
நக்கலாய் சிரித்தேன் - அப்போது
இப்போது உணர்ந்து கொண்டேன்
அது எவ்வளவு உண்மையென்று
ஏனென்றால்
நானும் காதலிக்கிறேன்.

தாரணி, கோப்பாய்

## சனியன் பிடிப்பான்...



தரித்திரம் பிடித்த ஒருவனுக்கு
உதவி செய்து அவனின்
சரித்திரத்தையே
மாற்றிக் காட்டுகின்றேன் பாரும்!
என்று - இவன் போனான்
பொருள் உதவியுஞ் செய்தான்
ஆனாலவனைப் பிடித்திருந்ததோ
அட்டமத்துச் சனி - அது
அவனை விட்டுக் கழண்டு
இவனைப் பற்றிக்
கொண்டது - தரித்திரம்...

ஞாயிறை நமஸ்காரஞ் செய்து
அருள்வேண்டி நின்றான்
ஞாயிறு திங்களைக்
கொடுத்தது - அதுவுந்
தேய் பிறையாக...

செய்வதறியாது சிந்தித்தவன்
செவ்வனே செவ்வாயிடம்
முறையிட்டான்.... செவ்வா(ய்)...
"புதனின் புத்திகேள்" என்றுவிட்டு
போனது.
புதன்... "வியாழனே இராசகுரு,
வேண்டியதைக் கேள்
தருவார்..." என்றுவிட்டுப் போனது.

வியாழ குரு வெள்ளியைக்
கொடுத்து... நீ இழந்தவை
எல்லாம் இதனில் உண்டு
வேண்டிய அளவில் அள்ளிக் கொள்,
என்றுவிட்டுப் போனது...

வெள்ளியை அள்ளித்
துள்ளிக் குதித்தான்
"தம்பி! அதிகந் துள்ளாதே!
அடுத்த படி எனது பிடி!"
என்று எச்சரித்தது
அவனைப் பிடித்த சனியன்!

பாண்டியூர் - பொன்.நவநீதன்.

## என்னிலும் மாற்றங்கள்



நினைவுகளில் இன்னும்
நீ நீண்டு கொண்டுதான் இருக்கின்றாய்
புரிய மறுக்கின்றாய்
புரிந்தும் பிரிய மறுக்கிறேன்
இனியாவது கொஞ்சம்
புரிந்துகொள்ளேன்...

இதுவரை நினைத்திருக்கவில்லை
இத்தனை மாற்றங்கள்
என்னிலும் வந்து போகும்
என்பதனை.
எட்டவாய்த்தான் இருந்தேன்
எப்படியோ
கிட்டவாய் வந்துவிட்டு
தூரவாகிறாய் நீ
ஏற்றுக்கொள்ளாமலேயே
தொடர்கிறேன் நான்
வெறுக்கின்றாயோ
விரும்புகின்றாயோ
எதுவுமே தெரியவில்லை
உன் நினைவின்றி
என்னால்
வாழவும் முடியவில்லை
எனினும்
ஏற்றுக்கொள்வாயெனும்
சிறு நம்பிக்கையில்தான்
இப்போதும்
வாழ்ந்துகொண்டிருக்கின்றேன்
நான்...

ஆஷா, யாழ்ப்பாணம்.

## கண்கள்

ஒருமுறை அலல பலமுறை
உன்னை எனக்கு அறிமுகப்படுத்தியது
என் கண்களே.
ஆனால்,
இன்று உன்னை எங்கு தேடியும்
காணமுடியவில்லை
எங்கே சென்றாய்? என்று
நான் ஏங்கும் போது எனக்கு
ஆறுதலளிக்க எனக்காக
அழுகின்றன என் கண்கள் - காரணம்
என் ஏக்கம் புரிந்தல்ல
ஏக்கத்தின் காரணம் என்பதனால்...

எம்.ரவி, பெரியபோரதீவு.

## அடைமழையும் கண்ணீரும்



பெரும் மழையில்
கரைந்து ஓடுகிறது - என்
களிமண் குடிசை!
வெப்பம் மேனி தொட விடாமல்
குளிர் என் போர்வையாகிறது!
நனைந்த குருவி போல்
ஒண்டிப் போய்
உட்கார்ந்து கிடக்கிறேன்
சூரியன்
ஒளி விடும் வரை.

மீண்டும்
இரைந்து கொண்டு
விரைந்து வருகிறது மழை!
வானத்தில் பெரும்
ஓட்டை விழுந்தது போல்!!

பரவாயில்லை...!
உன் காலம் அல்லவா?
நீ வேலையை செய்!
ஆனால்
இந்த ஏழையின் கண்ணீரோடு
போட்டி போடாதே!

நனையாமல் இருப்பவர்களுக்கு
விலங்கு போட்டாய்
வீட்டுக்குள் நடமாடும் உரிமையோடு!
எனக்கும் என் குடும்பத்திற்கும்
உடலை ஒடுக்கி
ஆணி அடித்துவிட்டாய்...
ஏன்?
ஏழை என்பதால் தானே!

சட்டத்தின்
சர்வாதிகாரம் போல்
சர்வாதிகாரியாகவே நீயும் இருக்கிறாய்
அனைத்து வேதனைகளையும்
நினைத்து அழுது புலம்புகிறேன்
உன்னோடு என் கண்ணீரும்
கலந்து ஓடுகிறது.

இரண்டையும்
இனம் பிரித்தும் பாருங்கள்
என் கண்ணீரிடம்
அடை மழையும்
தோற்றும் போய் இருக்கும்.

A.பாரிஸ், மிகிந்தலை.



கனுஜா, வள்ளிபுனம்,
முல்லை.

## ஒரு உயிரின் உலக வெறுப்பு

பிறவிப் பெருங்கடல்
நீந்தப் பிறந்தேன் என்பதை
பிறப்பின் கருவில்
அறிந்தவன் போல் நான் - மழலை
நான் அழுத கண்ணீரோ - அது
கண்ணீர்க்கடல்
வறுமையில் அம்மா - தன்
முலையில் எனக்கான பால்
சுரக்கவில்லை என அழுத கண்ணீரோ
அது பெருங்கடல் கண்ணீரப் பெருங்கடல்
ஒரு ஓடமும் ஒரு துடுப்பும் தேடுகின்றேன்
அலை கூடக் கரைசேராத
கண்ணீர்க் கடலில் நின்று - கண்ணீர்
வாழ்க்கை கடல் பல ஆழம்
வாழ்வின் பசி ஆழத்தில் தப்பினால்
உடல் உயிர் வளரும் ஆழத்தில் மூழ்கும் நிலை
உடல் உயிர் வளரும் ஆழத்தில் தப்பினால்
இன மத ஜாதி நிற பேதத்தின் ஆழத்தில் மூழ்கும் நிலை
இன மத ஜாதி நிற பேதத்தின் ஆழத்தில் தப்பினால்
பெருமை, பொறாமை, ஆசை, கொலை, பணம்
இவையோ நான் இன்னும் இன்னும் ஆழத்தில்
மூழ்கும் நிலை - எனவே
பிறவிப் பெருங்கடல் இன்னும் எப்படி எப்படி ஆழமோ
வள்ளுவனும் இப்படிச் சொல்லவில்லையப்பா
எனவே கருவினிலே - நான் ஒன்றில்
அழிந்தால் - அல்லது
கருவினிலே இவையை அறுத்தால்...

## ஈழத்துக் கவிஞர்கள்

### குந்தவை (சடாட்சரதேவி)

குந்தவை என்ற புனைபெயருடன் எழுதும் சடாட்சரதேவி யாழ்ப்பாண மாவட்டத்தில் தொண்டைமானாறைச் சேர்ந்த ஈழத்து எழுத்தாளர். 1963 இல் ஆனந்தவிகடனில் வெளிவந்த "சிறுமைகண்டு பொங்குவாய்" என்ற முத்திரைக்கதையுடன் எழுத்துலகத்திற்கு அறிமுகமானவர்.

ஆரம்பக்கல்வியை தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலத்திலும், இடைநிலைக்கல்வியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமானிப் பட்டம்பெற்றார்.

புத்தளத்திலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இறுதியாக யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் பணியாற்றி 1990ஆம் ஆண்டு விசேட சுயவிருப்பு ஓய்வுத் திட்டத்தின்கீழ் ஓய்வுபெற்றார்.

இவரின் சிறுகதைகள் கணையாழி, அலை, கனவு, சரிநிகர், சக்தி, மூன்றாவது மனிதன் போன்ற பல இதழ்களில் பிரசுரமாகியிருக்கின்றன.

இவர் அறுபதுகளிலே எழுதத் தொடங்கி விட்டார். 1963இல் ஆனந்தவிகடன் இதழில் வெளிவந்த "சிறுமை கண்டு பொங்குவாய்" என்ற சிறுகதையின்மூலம் இலக்கிய உலகில் பரவலாக அறியப்பட்டவர். ஆனாலும் 2002இல் தான் இவரது முதல் சிறுகதைத் தொகுப்பான, "யோகம் இருக்கிறது" வெளியானது.

குந்தவையின் 'பெயர்வு' என்ற சிறுகதை ஏ.ஜே.கனகரட்னாவினால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தது.

இவரது எழுத்துப்பணிக்காக வடமாகாண ஆளுநர் விருது 2008 இல் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இவரது நூல்கள்
யோகம் இருக்கிறது - சிறுகதைத் தொகுப்பு
(மித்ர பதிப்பகம், சென்னை: 2002)



# அன்புள்ள அம்மா

பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**

## நடு 3 மாதங்கள்

நீங்கள் 3ஆவது மாதத்தை தாண்டி விட்டால் அது ஒரு முக்கிய மைக்கல். ஏனெனில் இனி 95 சதவீதம் குழந்தைக்கு பிரச்சினை ஏதும் வருவதில்லை. நீங்கள் கர்ப்பமான செய்தியை மற்றவர்களுக்கு பகிரத்தொடங்கலாம். இது உங்களுக்கு மன உற்சாகத்தையும் சிலவிசேட சலுகைகளையும் பெற்றுத்தரும்.

இக்காலத்தில் உங்களுக்கு மறதித்தன்மை அதிகரிப்பதோடு கவனத்தன்மை (Concentration) குறையக்கூடும். உங்கள் உடலில் குருதியோட்டம் அதிகரிப்பதால் உடலில் பிரகாசமும், முடியில் வளர்ச்சியும் காணப்படும். உடலில் ஏற்படும் வரிகள் விரிவடைவதுடன் நடுவயிற்றில் கோடு ஒன்றும் ஏற்படும். இவை பெரும்பாலும் பிரசவத்தின் பின்னர் மறைந்துவிடும்.

4ஆம் மாதமளவில் ஏற்புவலித்தடுப்பூசிகள் 6 கிழமை இடைவெளியில் போடப்படும். கிட்டத்தட்ட 17ஆம், 18ஆம் கிழமைகளில் ஸ்கான் பரிசோதனைக்கு வருமாறு வைத்தியர் உங்களை அழைக்கக்கூடும். சில வைத்திய சாலைகளில் குழந்தையில் உள்ள குறைபாடுகள் சிலவற்றைக் கண்டுபிடிக்க இரத்தப் பரிசோதனை (Serum Screening) ஒன்றும், Amnio centesis எனப்படும் குழந்தையைச் சுற்றியுள்ள நீரைப்பரிசோதித்தலும் நடைபெறும்.

**உங்கள் கிளினிக்கில் பின்வரும் இரத்த சோதனைகளை செய்வார்கள்**

01. குருதிவகை (Blood Grouping):


02. இரத்த வீதம் (Hb): இப்பரிசோதனை உங்கள் உடலில் உள்ள இரத்த நிலையை காட்டும். மேற்கொண்டு இரும்புச்சத்து குளிகை அல்லது இரத்தமேற்றும் தேவையை தீர்மானிக்கும்.

03. VDRL - உடலில் பாலியல் நோய்களை கண்டறியும் சோதனை.

04. குருதியில் குளுக்கோசின் அளவு: உங்களுக்கு சலரோகத் தன்மை உள்ளதா என அறியும் சோதனை. (GTT)

05. றுபெல்லா (Rubella) பரிசோதனை:- உங்களுக்கு றுபெல்லா முன்பு ஏற்பட்டுள்ளதா என அறியும் சோதனை.

பிரசவ காலத்தில் எல்லா உடலுறுப்புகளும் சற்று வீக்கமடையும். உங்கள் மோதிரம், காப்பு என்பன இறுக்கத் தொடங்குவதை அவதானிப்பீர்கள். சிலர் கைகள் விறைப்படைவதை அவதானிப்பீர்கள். வயிறு பெருப்பதால் உணவு உட்கொள்வது சற்று அசௌகரிகமாக இருக்கும். இரைப்பையிலிருந்து அமிலக்கசிவு ஏற்படுவதால் நெஞ்செரிவு சிலருக்கு ஏற்படும். அடிக்கடி சிறிய அளவுகளில் ஏதேனும் உண்பதன் மூலம் இதை குறைக்கலாம். நெஞ்செரிவு அதிகமானால் மருந்துகள் உட்கொள்ள வேண்டும்.



(தொடரும்)



# கோப்பி குடித்தால் புற்றுநோயைத் தடுக்கலாம்

தினமும் மூன்று கப் கோப்பி அருந்துவதன்மூலம் கல்லீரல் புற்றுநோயை 50 சதவிகிதம் குறைக்க முடியும் என்று ஒரு புதிய ஆய்வின் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் இது ஈரல் செல்லியல் புற்றுநோய் ஆபத்தை 40 சதவிகிதம் வரை குறைக்கக்கூடும் என்றும் இரைப்பை மற்றும் குடலியல் மருத்துவ அமைப்பின் சார்பில் வெளிவரும் அமெரிக்க மருத்துவ இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் தோன்றும் பொதுவான புற்றுநோய்களில் கல்லீரல் புற்றுநோய் ஆறாவது இடத்தைப் பிடிக்கின்றது. மற்றும் இறப்பிற்கான புற்றுநோய் காரணங்களில் இது மூன்றாவது இடத்தைப் பிடிக்கின்றது. இதிலும் ஈரல் செல்லியல் புற்றுநோய் என்பது உலகம் முழுவதிலும் காணப்படும் புற்றுநோயில் 90 சதவிகிதம் காணப்படுவதாகும்.

தங்களுடைய கடந்தகால ஆய்வுகள் கோப்பி உடலுக்கு நல்லது, அதிலும் குறிப்பாக கல்லீரலுக்கு கோப்பி நன்மையே செய்கின்றது என்று உறுதிசெய்வதை ஆய்வாளரான கார்லோ லா வெக்கியா தெரிவிக்கின்றார். நீரிழிவு நோய் கல்லீரல் புற்றுநோய்க்கு ஒரு காரணியாக விளங்கக்கூடும் என்றநிலையில், கோப்பி குடிப்பது நீரிழிவு நோயைக் குறைக்கும் என்பது நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மையாக உள்ளது.

இதுமட்டுமின்றி, ஈரல் நோய் மற்றும் கல்லீரல் என்சைம்களிடையே இதனுடைய நன்மைதரும் விளைவுகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்று கூறும் வெக்கியா, இத்தாலியின் மிலன் நகரில் உள்ள மரியோ நெகரி ஆராய்ச்சி நிறுவனத்தின் மருத்துவ அறிவியல் மற்றும் சுகாதாரத்துறையைச் சேர்ந்த நோய் தொற்று அறிவியல் பிரிவில் ஆய்வில் ஈடுபட்டுள்ளார்.

இதுபோன்ற முடிவுகளை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும் இதற்கான நேரடித் தொடர்புகளை நிரூபிப்பது கடினமான ஒன்றாகும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

# மூலநோயின் அறிகுறிகள் யாவை?

**மூலநோய் என்றால் என்ன? மூலநோய்க்கு காரணம் என்ன? அதற்கான சிகிச்சை முறைகள் என்ன?**

மூலநோய் என்பது மலக்குடலிலுள்ள இரத்தநாளங்களில் ஏற்படும் வீக்கமாகும். மூலநோய் ஏற்படுவதற்கு ஆசனவாயில் நரம்புகளில் ஏற்படக்கூடிய அழுத்தம், குழந்தை பிறப்பு, நாட்பட்ட மலச்சிக்கல், அதிகப்படியான உடல் பருமன், வயிற்றுப்போக்கு, மிக கனமான பாரத்தை தூக்குதல், நீண்டநேரம் நிற்கும் அல்லது அமரும் சூழ்நிலை, குடும்ப வரலாறு மற்றும் துரித உணவு போன்றவை காரணங்களாகும். மூலநோயை அறுவைச் சிகிச்சை, மற்றும் ஸ்டப்ளர் சிகிச்சை போன்ற சிகிச்சைகளால் சரிசெய்யலாம்.

**எந்தமாதிரியான உணவு உட்கொண்டால் மூலநோயைத் தவிர்க்கலாம்?**

நார்ச்சத்து மிகுந்த உணவை உட்கொள்வதால் எந்த பிரச்சினையும் இல்லாமல் எளிதாக மலம் வெளியேறும். துரித உணவு மற்றும் தண்ணீர் சரியாக அருந்தாமலிருக்கும்போது மலம் இறுகி வெளிவருவதற்கு சிரமம் ஏற்படும். எனவே, கடினமாக முயற்சிசெய்து மலத்தை வெளியேற்றும்போது மூலம் வெளியேவர நேரிடும்.

**மூலநோயின் அறிகுறிகள் யாவை?**

ஆசனவாயில் அரிப்பு, அசௌகரியம், இரத்தப்போக்கு ஆகியவை ஆகும். சிலசமயங்களில் மலம், சளி போன்று காணப்படும்.



# புற்றுநோயாளிகளின் முடியை பாதுகாப்பது எப்படி?

புற்றுநோயாளிக்கு கீமோதெரப்பி சிகிச்சை அளிக்கும்போது, முடி கொட்டுதல் என்பது தவிர்க்க முடியாதது. ஒருவருக்கு புற்றுநோய் இருப்பதைக் கண்டறியும்போது, அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி... அவர்கள் முதலில் கவலைக்குள்ளாவது முடிகொட்டுதல் என்ற பக்கவிளைவை நினைத்துத்தான். இப்போது, புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுபவர்களுக்கும் பெற்றவர்களுக்கும் முடிகொட்டுவதால் ஏற்படும் கவலையைப் போக்க நவீன தொழில்நுட்பம் வந்துள்ளது.

வேகமாக வளரக்கூடிய புற்றுநோய்த் திசுக்களை அழித்துக் கட்டுப்படுத்தக்கூடியது கீமோதெரப்பி சிகிச்சை. இதற்கு அளிக்கப்படும் மருந்தானது உடல்முழுவதும் பயணிக்கிறது. அப்படிச் செல்லும் மருந்து, வேகமாக வளரக்கூடிய முடி செல்களையும் தாக்குகிறது. இதுவே முடிகொட்ட முக்கிய காரணம். சிலருக்கு புருவம், இமை உட்பட உடல்முழுவதும் உள்ள முடிகொட்டிவிடும். இது தற்காலிகமானதுதான். சிகிச்சைக்குப் பிறகு முடிவளர ஆரம்பிக்கும். ஆனால், எப்போது வளரும், முன்போலவே இருக்குமா என்றெல்லாம் கணிக்க முடியாது. சிலருக்கு முடி முளைக்கத் தாமதமாகலாம். சிலருக்கு முடியின் அடர்த்தி குறைந்து மெலிந்து போகக்கூடும். சிலருக்கு முடி மீண்டும் வளர்வது மிகச்சிரமமாக இருக்கும்.

ஹோர்மோன் பிரச்னை காரணமாக மார்பகப் புற்றுநோய் ஏற்பட்ட பெண்களுக்கு முடி மீண்டும் முளைப்பது தாமதமாக இருக்கும். இப்படி, தலைமுடி கொட்டுவதால் தன்னம்பிக்கை இழந்தவர்கள் பலர். இவர்களுக்காகவே, அட்வான்ஸ்டு லேசர் தெரப்பி, ஸ்டாண்ட் பை ஸ்டாண்ட் அல்டர்நேட் மற்றும் ஸ்டாண்ட் பை ஸ்டாண்ட் காஸ்மெட்டிக், ஃப்ளஷ் பொய்ண்ட் என்ற நான்கு வகையான சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. இதில் இரண்டு மருத்துவரீதியானது. மற்ற இரண்டு காஸ்மெட்டிக் தொடர்புடையது.

**லேசர்**

லேசர் சிகிச்சையில் முடி வேர்க்கால்களுக்குப் போதிய இரத்த ஓட்டம் கிடைப்பதை உறுதிப்படுத்தி, மீண்டும் ஆரோக்கியமாக முடி வளரச்செய்கிறோம். இதனால், முன்பிருந்ததுபோலவே முடி நன்கு அடர்த்தியாக இருக்கும். முடிகொட்டுவது தடுக்கப்படுகிறது. முடியின் நிறத்தை மேம்படுத்துகிறது.

**ஸ்டாண்ட் பை ஸ்டாண்ட்**

காஸ்மெட்டிக் முறையில், இயற்கையான முடி இருப்பது போன்ற நிலையை உருவாக்கப்படுகிறது. இது 'விக்' அல்ல. தலையில் ஒருவகையான பசையைத் தடவி இதைப் பொருத்திவிடுகிறார்கள். அதுவும், 'பேட்ச்' டெஸ்ட் செய்தே இது பொருத்தப்படுவதால், சருமத்தில் வேறு பிரச்சினைகள் வராது.

அதைவிட, முடி ஆரோக்கியமாக வளர மருந்துகள் மற்றும் வெளிப்புற க்ரீம்களைத் தவிர்த்து ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களையும் பரிந்துரைக்கப்படுகிறது. இது புற்றுநோயால் முடி இழந்தவர்களுக்கு மட்டுமல்ல முடி மற்றும் சருமம் என்றும் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்று நினைக்கும் ஒவ்வொருவரும் இதைப் பின்பற்றலாம்.




# பெண்கள் விடுதிகளால் ஏற்படும் மனக்குழப்பங்கள்!



## மாநிறத் தோற்றம் வர என்ன செய்யவேண்டும்?



நிறம் பற்றிய கவலை வேண்டவே வேண்டாம். கறுப்பும் அழகுதான் கண்மணி! பார்லரில் க்ரீம் ப்ளீச் சிகிச்சையை மாதம் ஒரு முறை செய்தாலேபோதும். நிறம்மாறும். இப்போது 'பயோ வேக்ஸ்' என்ற சிகிச்சையும் உள்ளது. சருமத்தை வேக்ஸிங் மூலம் சரிசெய்து நல்ல நிறத்தைப் பெறலாம்.

திருமணத்துக்கு ஒரு மாதம் முன்பு 'ஸ்கின் லைட்னிங் ∴பேஷியல்' செய்தால் பலன்கிடைக்கும். ப்ளீச் செய்தபிறகு வெயிலில் செல்வதைத் தவிர்க்கவேண்டும். சிலருக்கு ப்ளீச் செய்தால் தோல் வறண்டுபோகும். அவர்கள் இரவு தூங்கப்போவதற்கு முன்பு 'மாய்ஸ்சரைஸர் க்ரீம்' தடவிக்கொள்வது நல்லது. வீட்டிலேயே சில சிகிச்சைகளையும் செய்யலாம். ஒரு கரண்டி தேனில், சில துளிகள் எலுமிச்சைச்சாறு விட்டு நன்றாகக் கலந்து, அதை முகம், கழுத்து உள்ளிட்ட இடங்களில் தடவி, 10 நிமிடங்கள் கழித்து கழுவிவிடவேண்டும். ஒருநாள் விட்டு ஒருநாள் தொடர்ந்துசெய்தால் நல்ல மாற்றம் கிடைக்கும்.

இந்த சமூகத்தில் பெண்கள் சிலரிடம் சில குறைபாடுகள் அன்றும் இருந்தன. இன்றும் இருந்து கொண்டிருக்கின்றன. குறைகளற்ற சமூகம் ஒருபோதும் அமையாது. இந்த சமூகத்தைப் பற்றி சரிவர தெரிந்துகொள்ளாமல், பெண்கள் விடுதிக்குள் நுழைந்து தனிப்பட்ட வாழ்க்கையை தொடங்கும்போது அங்கிருக்கும் குறைகள் பெண்களுக்கு பூதாகரமாகத் தெரிகின்றன.

வேலைபார்க்கும் இடத்தில் எல்லோரிடமும் சகஜமாகப் பழகினால், அங்கே இருக்கும் குறைகளும் பெண்களுக்கு தெரியும். பொதுவாக பெண்கள் விடுதி என்பது வீட்டைப் போன்றது. அங்கு பெண்களின் அந்தரங்கங்களும், பலவீனங்களும், பிரச்சினைகளும் தெரியவருவதும், அலசப்படுவதும் இயல்பானது.

"தன்னைப் போலவே அனைவரும் இருப்பார்கள்" என்ற கற்பனையுடன் வாழ்பவர்கள், யதார்த்த பெண்கள் உலகத்தை பார்த்ததும், அவர்களுக்கு மத்தியில் வாழ முடியாமல் அதில் இருந்துவிலகி, அவர்களை குறை சொல்கிறார்கள். அவர் சரியில்லை. இவர் சரியில்லை என்று குறை சொல்வது நமது பலவீனம். விரைவில் உங்களுக்கு திருமணமாகும்.

உன் கணவரைப் பற்றி நிறைய கற்பனைக் கோட்டைகளை உருவாக்கி வைத்திருப்பாய். மாமியார், மாமனார், மாச்சாள்மார், அவரது உறவினர்கள் பற்றி எல்லாம் நிறைய கற்பனைகளை வைத்துக்கொண்டு இல் வாழ்க்கைக்குள் அடியெடுத்து வைத்தால், இங்கே நீ பார்த்த குறைபாடுகள் போன்றோ, வேறுவிதமான குறைபாடுகளோ அங்கே அவர்களிடமும் இருக்கும். அவர்களும் சரியில்லை என்று நீ குறைசொல்லத் தொடங்கினால், இல்வாழ்க்கையே உனக்கு இல்லாத வாழ்க்கையாகிவிடும். இப்போது நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண்கள் விடுதி வாழ்க்கைதான் உண்மையான உலகம்.

குறைசொல்லாமல், குறையில்லாமல் வாழ முடியுமா என்று பாருங்கள். நாம் நல்லவராக இருப்பது என்பது நம்மால் முடிகிற விஷயம். ஆனால் நம்மைச் சுற்றி இருக்கிற அனைவரும் அதை பாராட்டவேண்டும், அவர்களும் நல்லவர்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது முடியாத விஷயம்.

# அழகான கன்னம் வேண்டுமா?



உடல் எடையை குறைக்க முயலும்போது, தொப்பை, தொடை, இடுப்பு போன்றவற்றில் உள்ள கொழுப்புக்களை மட்டும்தான் கரைக்க முயலுகிறோம். ஆனால் பெரிய கன்னங்கள் மற்றும் இரட்டை தாடைகள் போன்றவற்றை குறைப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

கன்னங்களை அழகாக வைத்துக் கொள்வதற்கு ஒரு சில உடற்பயிற்சிகள் உள்ளன. அதனைப் பின்பற்றி வந்தால், நிச்சயம் கன்னங்களில் உள்ள அதிகப்படியான கொழுப்புக்களை கரைக்கலாம். அதுமட்டுமின்றி, இந்த பயிற்சிகளில் சில ஒட்டியுள்ள கன்னங்களை சரியான அளவில் வைத்துக்கொள்ளவும் உதவும்.

* கன்னங்களை அழகாக வைத்துக்கொள்ள செய்யவேண்டிய பயிற்சிகளில் முதன்மையானதுதான் வாயை குவித்தல். உதடுகளை இறுக்கமாக மூடி, 1 நிமிடம் குவித்து, பின் சாதாரண நிலைக்கு திரும்பவேண்டும். இந்த மாதிரி ஒரு நாளைக்கு குறைந்தது 3 வேளை, 10 நிமிடம் செய்யவேண்டும்.

*முகத்தில் உள்ள தசைகளுக்கான சிறந்த பயிற்சிதான் சிரிப்பு. இவ்வாறு வாய்விட்டு நன்கு சிரிக்கும்போது, முகத்தில் உள்ள தசைகள் நீட்சியடைவதால், அது கன்னங்கள் அழகாக வைத்துக்கொள்ள உதவும். எனவே தினமும் 15 நிமிடம் சிரிப்பு பயிற்சிசெய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

* பொதுவாக சூயிங்கம் போட்டால், வாய் புத்துணர்ச்சியுடன் இருக்கும். ஆனால் இந்த சூயிங்கம் மெல்லுவது என்பது முகத்திற்கான ஒரு சூப்பரான பயிற்சியாகும். இதனால் இரட்டை தாடைகளை தவிர்க்கலாம்.

* நன்கு பெரியதாக இருக்கும் கன்னங்களை குறைக்க இருக்கும் சிறந்த வழிகளுள் கன்னங்களை தூக்குதலும் ஒன்று. அதற்கு முடிந்த அளவில் கன்னங்களை தூக்குங்கள். அதற்காக கையை கொண்டு தூக்காதீர்கள். சிரிப்பதன்மூலம் கன்னங்களை நன்கு தூக்குங்கள்.

* மீன் போன்று உதடுகளை குவித்து, 20 நொடிகள் வைத்து, பின் சாதாரண நிலைக்கு திரும்ப வேண்டும். இவ்வாறு ஒருநாளைக்கும் 10-20 முறை செய்து வந்தால், கன்னங்களை குறைக்கலாம்.

* வாயில் காற்றினை நிரப்பி 2 நிமிடம் கழித்து, பழைய நிலைக்கு திரும்பவேண்டும். இவ்வாறு அடிக்கடி செய்துவந்தால், கன்னங்களை குறைப்பதோடு, கன்னங்கள் இல்லாதவர்களுக்கு கன்னங்கள் சரியான அளவில் இருக்கும்.

# சமையல் குறிப்பு

## மிளகு பன்னீர்



**தேவையான பொருட்கள்:**

பன்னீர் - 400 கிராம் (துண்டுகளாக் கப்பட்டது), வெஜிடேபிள் ஓயில் - 5 மேசைக்கரண்டி, வெங்காயம் - 1 1/2 கப் (பொடியாக நறுக்கியது), இஞ்சி பூண்டு பேஸ்ட்-1 கரண்டி, நெய் - 1 மேசைக்கரண்டி, பட்டை-1 இன்ச், கறுப்பு ஏலக்காய் -2, மிளகு -4-5, கிராம்பு-3-4, பிரியாணி இலை-2, தயிர்-1 கப், மிளகாய் தூள்-1 கரண்டி, மல்லி தூள்-2 கரண்டி, சீரகப்பொடி -1 கரண்டி, கரம் மசாலா-1 கரண்டி, மிளகு தூள் -3 கரண்டி, பிரஷ் க்ரீம்-1∴4 கப், கொத்தமல்லி-3 மேசைக்கரண்டி, உப்பு-தேவையான அளவு

**செய்முறை:-** முதலில் ஒரு வாணலியை அடுப்பில்வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், வெங்காயத்தை சேர்த்து பொன்னிறமாக வதக்கி, இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து 2 நிமிடம் வதக்கி, பின் இறக்கி குளிரவைத்து, மிக்ஸியில் போட்டு அரைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு அகன்ற வாணலியை அடுப்பில் வைத்து, அதில் நெய் ஊற்றி காய்ந்ததும், பட்டை, மிளகு, கிராம்பு மற்றும் பிரியாணி இலை சேர்த்து தாளிக்கவேண்டும். பின்பு அரைத்து வைத்துள்ள வெங்காய பேஸ்ட் சேர்த்து வதக்கவேண்டும். அடுத்து அந்த வாணலியை அடுப்பில் இருந்து இறக்கி, அதில் தயிரை நன்கு அடித்து ஊற்றி கிளறிவிடவேண்டும்.

பிறகு மீண்டும் அந்த வாணலியை அடுப்பில் வைத்து, அதில் மிளகாய் தூள், மல்லி தூள், கரம் மசாலா மற்றும் சீரகப் பொடி சேர்த்து 3-4 நிமிடம் கிளறிவிடவேண்டும். பின்னர் பன்னீர், உப்பு மற்றும் 1 கப் தண்ணீர் ஊற்றி பிரட்டி, வாணலியை மூடி 10 நிமிடம் குறைவான தீயிலேயே கொதிக்க விடவேண்டும். பின் மிளகு தூள் மற்றும் பிரஷ் க்ரீம் சேர்த்து, 1 நிமிடம் கிளறிவிடவேண்டும்.

1 நிமிடம் கலவையானது கொதித்ததும், அதனை இறக்கி, அதில் கொத்தமல்லியை தூவி அலங்கரித்து, சாதம் அல்லது சப்பாத்தியுடன் சாப்பிட்டால், சுவையாக இருக்கும்.

# 250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-392**

**கேள்வி:** கன்னங்களை அழகாக வைத்துக்கொள்ள, முக்கியமாக செய்யவேண்டிய பயிற்சி எது?

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 04.11.2013**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 392
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 390 இற்கான விடை:- மாதவிலக்கு சுழற்சி.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- க.அருந்துவராஜா, கொக்குவில் தெற்கு, கொக்குவில்.

392

பெயர் :
முகவரி :
தே.அ. அட்டை இல :
விடை :
கையொப்பம் :

# தொப்புளில் வளையம் போடும் பெண்களுக்கு ஓர் எச்சரிக்கை

நம் சமூகத்தில் உடம்பில் துளையிடுதல் (பொடி பியர்சிங்) என்பது ஒரு முக்கிய நாகரிகமாகவும், பண்பாடாகவும் மாறிவருகிறது. எந்த ஒரு காரணத்திற்காக இருந்தாலும், உடம்பில் துளையிடுவது என்பது பெரிய முடிவாகும்.

தொற்று என்பது உடம்பில் துளையிடுவதால் ஏற்படும் பொதுவான பிரச்சினை. இதில் கவனம் செலுத்தவில்லை என்றாலோ அல்லது உரிய சிகிச்சையை சரியான காலத்தில் எடுக்கவில்லை என்றாலோ, தழும்பு ஏற்படுவதுடன் இரத்தம் நஞ்சாகிவிடும். அதிலும் சரிவர கவனம் செலுத்தாவிட்டால் அசிங்கமான தழும்பை உண்டாக்கிவிடும்.

குறிப்பாக தொற்றுக்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்களாக ஒழுங்கில்லாமல் துளையிடுதல், துளையிட்டபின் சரியாக பராமரிக்காமல் போவது மற்றும் துளையிட்ட இடத்தில் பயன்படுத்தும் நகைகள் போன்றவை ஆகும்.

அதிலும் தவறான இடத்தில் துளையிட்டால், அங்குள்ள நரம்பையும் சேர்த்து துளையிட வாய்ப்புகள் அதிகம். அதுமட்டுமல்லாது துளையிட்ட இடத்தைச் சுற்றியுள்ள இடங்களும் நிரந்தரமாக செத்துப்போகும். குறிப்பாக நாக்கில் துளையிடும்போது, நரம்புகள் பாதிப்புக்கு உள்ளாவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

முக்கியமாக துளையிடுபவர் வல்லுனராக இல்லாதபோதுதான், இத்தகைய பிரச்சினை ஏற்படும். துளையிடுவதில் வல்லுநர் இல்லாதவர் சுகாதாரமற்ற இடத்தில் துளையிட்டால் இரத்த சம்பந்த நோய்களான எச்.ஐ.வி. கிருமி, ஈரல் அழற்சி மற்றும் இதர நோய்களை ஏற்படுத்தும்.

தீர்க்கவே இந்த ஒப்பந்தத்தை நிர்ப்பந்தித்தது என்றார். அத்துடன் அவர் நிற்கவில்லை. இலங்கைக்கு இந்தியாவிற்குமிடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இலங்கை இந்தியாவின் 37வது மாநிலமாகும் என்பதால் இவ்வொப்பந்தத்தை கைச்சாத்திட வேண்டாம் என்கிறார். இந்தியாவுடன் செய்யப்பட்டுள்ள சீபா எனப்படும் பொருளாதாரத்தை விரிவாக்கும் நோக்கிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது இலங்கை தனக்குத் தானே தூக்கிட்டுக் கொள்வதற்கு சமம் என்று சிங்களத் தீவிரவாத அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்தது.

## தமிழர்கள் முதுகில் இந்தியாவின் சவாரி

1987இல் இலங்கையில் அமெரிக்கா தனது பிடியை இறுக்கியபோது தமிழர்களின் முதுகில் சவாரி செய்து இந்தியா அதைத் தடுத்து நிறுத்தியது. இப்போதும் இலங்கையில் இந்தியா தனது பொருளாதார நலன்களை விருத்தி செய்ய தமிழர்களின் பிரச்சினையை வைத்தே இலங்கையை தன் எண்ணப்படி நடக்கவைக்க முயல்கிறது. சீபா ஒப்பந்தம் கைச்சாத்திடும்படி இலங்கையை வற்புறுத்தும் ஒரு வாய்ப்பாக இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை இந்தியா திரைமறைவில் பயன்படுத்துகின்றதா என்ற ஐயம் நியாயமானதே. இதற்காக இலங்கைமீது அழுத்தம் கொடுப்பதற்கான ஒரு உத்தியே என தமிழ்நாட்டுச் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பார்க்க முடியும். இதற்கான தூண்டுதல் ஜெயலலிதாவிற்குத் தெரியாமலே இந்திய உளவுத்துறையிடமிருந்து வந்திருக்கலாம். சீபா ஒப்பந்தத்தை இலங்கையை ஒப்பமிடச் செய்ய இந்தியாவிற்குக் கிடைத்த கடைசிச் சந்தர்ப்பம் பொதுநலவாய மாநாடுதான். ஏற்கனவே இதைச் சாட்டாக வைத்து சம்பூரில் தமிழர் வாழ்ந்த இடங்களை இந்தியா அபகரித்துக் கொண்டது. இந்திய தலைமை அமைச்சர் இலங்கையில் நடக்கும் மாநாட்டுக்கு போகமாட்டார் என்ற ஒரு செய்தி திட்டமிட்டு 14-10-2013-ம் திகதி திட்டமிட்டு வெளிவிடப்பட்டது. இச்செய்தி சென்னை விகடன் முதல் பிரித்தானியக் கார்டியன் வரை வெளிவிட்டது. ஆனால் இலங்கை சீபாவைப் பொறுத்தவரை எதற்கும் மசிந்துகொடுப்பதாகத் தெரியவில்லை.

## மாநாட்டுக்கு வராவிட்டால் இந்தியா தனிமைப்படுத்தப்படுமா?

இந்தியத் தலைமை அமைச்சர் இதுவரை இலங்கை மாநாட்டுக்குச் செல்வதாக எந்த முடிவும் எடுக்காதநிலையில் புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசகம், மன்மோகன் சிங் இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டுக்கு வராவிட்டால் இந்தியா தனிமைப்படுத்தப்படும் என்றார். இது அப்பட்டமான மிரட்டல். இது தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை இதை எழுதும்வரை எந்தப் பதிலும் கொடுக்கவில்லை. சில தமிழ் அரசியல்வாதிகள் மட்டும் கருத்துத் தெரிவித்துள்ளனர். வட இந்திய அரசியல்வாதிகள் இதுபற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இலங்கைக்கு போவதா, இல்லையா என்பது தொடர்பாக இந்தியா ஒரு தீர்க்கமான முடிவை எடுக்காமல் இருப்பது பொதுநலவாய நாடுகளில் சிலவற்றை விசனப்படுத்தத் தொடங்கியுள்ளது. இந்தியாவின் தயக்கம் இலங்கைக்கு இந்தியா தேவையில்லாமல் அச்சப்படுகிறது என்பதை உறுதிசெய்கிறது.

## சீனாவுடன் இலங்கையின் FTA ஒப்பந்தம்

இந்தியாவுடன் சீபா ஒப்பந்தம் செய்யத் தேவையில்லை என பசில் ராஜபக்ச 2013 ஜுலை மாதம் அடித்துச் சொல்லிவிட்டார். ஆனால் இலங்கை சீனாவுடன் சீபாவை ஒத்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது.

## சல்மான் குர்சித் தலைமையில் ஒரு தூதுக்குழு வந்து கலந்துகொள்ளும்

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் தலைமையில் ஒரு தூதுக்குழு வந்து கலந்துகொள்ளும் என்று 28.10.2013 திங்கள் காலை வரை வெளியான செய்திகள் கூறுகின்றன. தனது பங்குபற்றலை சல்மான் குர்சித் இந்து பத்திரிகைக்கு 27.10.2013 இல் அளித்த பேட்டியில் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் மன்மோகன் சிங், உப ஜனாதிபதி ஹமீட் அன்சாரி ஆகிய முக்கியஸ்தர்களின் பெயர்கள் இன்னமும் ஊடகங்களால் ஊகிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதாவது பிரதமர் மன்மோகன் சிங் வந்து பங்கு பற்றுவார் எனும் மெல்லிய ஊகம் இந்து நாளிதழிடம் உள்ளதுபோல் தெரிகிறது. இந்துவின் செய்தி தரப்படுகிறது.

Khurshid will attend CHOGM

Updated: October 27, 2013 11:27 IST

Question mark still over Manmohan's participation

External Affairs Minister Salman Khurshid will represent India at the Commonwealth Heads of Government (CHOGM) summit, though the Tamil Nadu Assembly unanimously passed a resolution urging boycott of the meeting because of human rights abuses in Sri Lanka.

In a television interview, Mr. Khurshid confirmed his participation in next month's meeting; but there is still a question mark over who among the three VVIPs will attend the summit: President Pranab Mukherjee; Prime Minister Manmohan Singh; or Vice-President Hamid Ansari. Or whether Mr. Khurshid himself will lead the Indian delegation.

இந்திய மத்திய அரசாங்கம் தமிழகத்தை புறக்கணித்து எவ்வளவோ முடிவுகளை எடுத்துள்ளது.

அடுத்த மாதம் 15, 16, 17 ஆகிய தினங்களில் கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்திய பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் கலந்து கொள்ளமாட்டார் போல்தான் தெரிகிறது. கடந்த 15ஆம் திகதி அவர் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.கருணாநிதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தின்மூலம் அவ்வாறுதான் ஊகிக்க முடிகிறது.

மாநாட்டை பகிஷ்கரிக்குமாறு கோரி கருணாநிதி அனுப்பியிருந்த கடிதமொன்றுக்கு பதிலளித்து பிரதமர் அனுப்பியிருந்த கடிதத்தில், தமிழக மக்களினதும் தி.மு.க.வினதும் உணர்வுகள் உட்பட சம்பந்தப்பட்ட சகல காரணிகளையும் கருத்தில்கொண்டே மாநாட்டில் கலந்து கொள்வதா, இல்லையா என்பது தீர்மானிக்கப்படும் எனக் குறிப்பிட்டு இருந்தார்.

பொதுவாக சம்பந்தப்பட்ட சகல காரணிகளையும் கருத்தில்கொள்வதாக கூறாமல் தமிழக மக்களினதும் தி.மு.க.வினதும் உணர்வுகளை துல்லியமாக ஏன் இங்கு குறிப்பிடவேண்டும்? பிரதமர் தமிழக மக்களினதும் தி.மு.க.வினதும் உணர்வுகளை பொருட்படுத்தாமல் முடிவு எடுக்க நினைத்து இருந்தால் தாமாக முன்வந்து அதனை தமது கடிதத்தில் குறிப்பிடத் தேவையில்லை.

இவ்விடயம் தொடர்பான தமிழக மக்களினதும் தி.மு.க.வினதும் உணர்வுகள் சகலரும் அறிந்தவையே. அவர்கள் இந்தியா இம்முறை மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும் என்றே கூறுகின்றனர். அதனை அறிந்திருந்தும் தாமாக முன்வந்து அதனை குறிப்பிட்டு அதனை கருத்தில்கொள்வதாகவும் கூறுவதாயின் சிங், தமிழக மக்களின் உணர்வுகளின் பிரகாரம் நடந்துகொள்ளப் போகிறார் என்றே தெரிகிறது.

53 பொதுநலவாய நாடுகளில் இப்போதைக்கு கனேடியப் பிரதமர் ஸ்டீவன் ஹாப்பர் மட்டுமே தாம் இலங்கையில் நடைபெறும் மாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்து இருக்கிறார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகக் கூறி அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே கனடா மாநாட்டை பகிஷ்கரிக்கிறது.

இந்தியா இதுவரை தமது முடிவை தெரிவிக்காவிட்டாலும், இந்திய பிரதமர் மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் குறைவாக இருப்பதாகவும் அவருக்குப் பதிலாக இந்திய உபஜனாதிபதி ஹமீத் அன்சாரி கலந்துகொள்ளக் கூடும் என்றும் இந்திய ஊடகங்கள் ஏற்கனவே செய்திகள் வெளியிட்டு இருந்தன.

இந்தியா மாநாட்டை பகிஷ்கரித்தாலும் அல்லது பிரதமருக்குப் பதிலாக மற்றொருவரை அனுப்பினாலும் அதற்குக் காரணமாக இலங்கையின் மனித உரிமை நிலைமையை இந்தியா முன்வைக்கும் என்று கூறமுடியாது. ஏனெனில் அந்த அடிப்படையில் பிரதமர் மாநாட்டில் கலந்து கொள்ளாவிட்டால் உப ஜனாதிபதிக்கும் அதே காரணம் தடையாக அமையும். இலங்கையின் மனித உரிமை நிலைமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே தமிழக மக்களும் தி.மு.க.வும் மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கூறியபோதிலும் இந்திய மத்திய அரசாங்கம் நேரடியாக அதனை கூறுமா என்பது சந்தேகமே. எனவே பிரதமர் வராவிட்டாலும் இந்தியா மாநாட்டை பகிஷ்கரிக்கும் சாத்தியக்கூறுகள் குறைவாகவே தென்படுகின்றன.

1987இல் இலங்கையில் அமெரிக்கா தனது பிடியை இறுக்கிய போது தமிழர்களின் முதுகில் சவாரிசெய்து இந்தியா அதைத் தடுத்து நிறுத்தியது. இப்போதும் இலங்கையில் இந்தியா தனது பொருளாதார நலன்களை விருத்தி செய்ய தமிழர்களின் பிரச்சினையை வைத்தே இலங்கையை தன் எண்ணப்படி நடக்கவைக்க முயல்கிறது. சீபா ஒப்பந்தம் கைச்சாத்திடும்படி இலங்கையை வற்புறுத்தும் ஒரு வாய்ப்பாக இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை இந்தியா திரைமறைவில் பயன்படுத்துகின்றதா என்ற ஐயம் நியாயமானதே. இதற்காக இலங்கைமீது அழுத்தம் கொடுப்பதற்கான ஒரு உத்தியே என தமிழ்நாட்டுச் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பார்க்கமுடியும். இதற்கான தூண்டுதல் ஜெயலலிதாவிற்குத் தெரியாமலே இந்திய உளவுத்துறையிடமிருந்து வந்திருக்கலாம். சீபா ஒப்பந்தத்தை இலங்கையை ஒப்பமிடச் செய்ய இந்தியாவிற்குக் கிடைத்த கடைசிச் சந்தர்ப்பம் பொதுநலவாய மாநாடுதான்.

பொதுநலவாய அமைப்பானது சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம் என ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் முன்னாள் காலனித்துவ நாடுகளை ஒன்றுசேர்த்து பிரிட்டனே முன்வந்து அமைத்த அமைப்பாகும். அதாவது இந்த அமைப்பானது பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் சின்னமாகும். அதன் உச்சி மாநாடானது பிரிட்டன் தமது முன்னாள் அடிமை நாடுகளுடன் சேர்ந்து தமது பழைய சாம்ராஜ்ஜியத்தின் புகழை கொண்டாடுவதற்குச் சமமாகும். அதேபோல் அது காலனித்துவ நாடுகள் தமது பழைய அடிமைத்தனத்தை கொண்டாடுவதற்கும் சமமமாகும்.

அந்த அர்த்தத்தில் பார்த்தால் இந்த மாநாட்டுக்கு ஹாப்பர் வந்தாலென்ன வராவிட்டாலென்ன, மன்மோகன் சிங் வந்தாலென்ன வராவிட்டாலென்ன என்றும் கேட்கலாம்.

ஆனால் அதேவேளை இந்த மாநாடு நாடுகளுக்கிடையே உறவுகளை பலப்படுத்திக் கொள்ளவும் வர்த்தக உறவுகளை புதிதாக ஆரம்பிக்கவும் ஏற்கனவே இருக்கும் உறுவுகளை பலப்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது என்பது உண்மை. எனினும் இம்முறை மாநாடுதான் பொதுநலவாய அமைப்பின் முதலாவது உச்சி மாநாடல்ல. இதற்கு முன்னர் நடைபெற்ற மாநாடுகளில் கலந்து கொண்ட இலங்கை எந்த புதிய உறவை ஏற்படுத்திக் கொண்டது அல்லது எந்த உறவை பலப்படுத்திக் கொண்டது என்று கேட்பதும் நியாயமான கேள்வியே.

தமிழ் நாட்டில் நிலவும் நிலைமையை காட்டியே இந்தியா இம்முறை மாநாடு தொடர்பான தமது முடிவை எடுக்கக்கூடும் என்பதை ஏற்கனவே கூறினோம். கடந்த வருடமும் இவ்வருடமும் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டங்களின்போது இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த இந்தியா அப்போதும் அதற்குக் காரணமாக தமிழக நெருக்குவாரத்தையே சூசகமாக எடுத்துக்காட்டியது.

இந்திய மத்திய அரசாங்கத்தின் முடிவுகள்மீது தமிழகத்தின் தாக்கத்தை இலங்கையின் முன்னாள் இந்திய தூதுவராகவும் அதன்பின்னர் இந்திய வெளியுறவுத்துறை செயலாளருமாக இருந்த நிருபமா ராவ் ஒருமுறை மிகத் தெளிவாக எடுத்துக்கூறினார். 2011ஆம் ஆண்டு இலங்கையிலிருந்தும் மாலைதீவிலிருந்தும் இந்தியாவுக்குச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் சிலரை வெளியுறவுத்துறை செயலாளர் என்ற முறையில் சந்தித்த அவர், தமிழகம் என்பது இந்தியாவிலிருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதியென்றும் தமிழக மக்களின் உணர்வுகளை புறக்கணித்து இந்திய மத்திய அரசாங்கம் செயற்பட முடியாது என்றும் கூறியிருந்தார்.

ஆனால் இது எப்போதும் உண்மையல்ல. தமக்குவேண்டிய நேரங்களில் இந்திய மத்திய அரசாங்கம் தமிழகத்தை புறக்கணித்து எவ்வளவோ முடிவுகளை எடுத்துள்ளது. குறிப்பாக தமிழகத்தில் மிகவும் உணர்வுபூர்வமான விடயமான இலங்கை விடயத்திலும் இந்தியா - தமிழக உணர்வுகளை பெரிதாக மதியாது நடவடிக்கை எடுத்துள்ளது.


1987ஆம் ஆண்டு பிரசித்திபெற்ற வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது இலங்கையின் வடக்கில் இருந்த நிலைமைபோல் நூறு மடங்குக்கு மேல் மோசமான நிலைமையே 2008 மற்றும் 2009ஆம் ஆண்டு அங்கு நிலவியது. 1987ஆம் ஆண்டு இலட்சக்கணக்கான மக்கள் உயிராபத்தை எதிர்நோக்கி இருக்கவில்லை. அப்போது வடக்கில் பிரதானமாக உணவுத் தட்டுப்பாடுதான் நிலவியது.

ஆனால், இந்தியா 1987ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமது கடற்படையை அனுப்பி இலங்கையின் கடற்பரப்பை மீறியும் விமானப் படையை அனுப்பி இலங்கையின் வான் பரப்பை மீறியும் போரை நிறுத்துமாறு இலங்கைமீது நெருக்குவாரத்தை ஏற்படுத்தியது. இந்தியா அப்போது அவ்வாறு செய்து போரை நிறுத்தியது மட்டுமல்லாது தமக்குவேண்டிய விதத்திலான இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு இலங்கை அரசாங்கத்தையும் புலிகளையும் சம்மதிக்கவும் செய்தது.

அதைவிட பல மடங்கு பயங்கரமான நிலைமை வடக்கில் இருந்த போரின் இறுதிக் கட்டத்தின்போது இந்தியா போருக்காக இலங்கை அரசாங்கத்திற்கு பல வழிகளில் உதவியது. புலிகளின் கப்பல்கள் அழிக்கப்பட்டு அவர்கள் போர் தளபாட தட்டுப்பாட்டை எதிர்நோக்கியமையே அவர்கள் தோல்வியடைவதற்கு முக்கிய காரணமாக இருந்தது. இந்திய புலனாய்வு உதவிகளை பாவித்தே அந்த கப்பல்கள் அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

புலிகளின் விமானங்கள் வவுனியாவில் இருந்த இராணுவ ராடர் நிலையத்தை தாக்கியபோது அங்கிருந்த இரு இந்தியர்கள் காயமடைந்த போதே இங்கு இந்தியர்கள் இருந்த தகவல் வெளி வந்தது.

எனவே மன்மோகன் சிங் பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளா விட்டால் அதற்கு தமிழக உணர்வுகள் தான் ஒரே காரணமல்ல. இலங்கையில் சீன தலையீடும் சம்பூர் மின்சார நிலையம் போன்ற இந்தியாவின் பொருளாதார இலக்குகளும் அதற்கு காரணங்களாகும் என ஊகிக்கலாம்.



2014இல் பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான இறுதி அணித்தெரிவுகள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. இந்தவகையில் போட்டிகளை நடாத்தும் நாடு என்றவகையில் பிரேசில் இயல்பாகவே தெரிவாக, மேலும் இருபது நாடுகள் போட்டிகளின்மூலம் தெரிவாகியுள்ளன.

அந்த இருபது நாடுகளும் ஐரோப்பிய, தென், அமெரிக்க, வட அமெரிக்க, ஆசிய பிராந்தியங்கள் எனும் வகையின் கீழ் போராடி இடம்பிடித்துள்ளன.

**அவையாவன:**

**ஐரோப்பா:-** பெல்ஜியம், பொஸ்னியா - ஹேர்ஸகோவினா, இங்கிலாந்து, ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ரஷ்யா, ஸ்பானியா, சுவிர்சர்லாந்து.

**தென் அமெரிக்கா:-** ஆர்ஜென்ரினா, சிலி, கொலம்பியா, ஈக்குவடோர்.

**வட அமெரிக்கா:-** கோஸ்ராரிக்கா, ஹொண்டுராஸ், ஐக்கிய அமெரிக்கா.

**ஆசியா:-** அவுஸ்திரேலியா, ஈரான், ஜப்பான், தென்கொரியா. மேற்படி உலகக்கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றுள்ள இருபத்தொரு நாடுகள் தவிர இன்னும் பதினொரு நாடு-

# வருகிறது— உலகக் கிண்ணம்

களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிகள் நவம்பர் 13 முதல் 19 வரையான காலப்பகுதியில் நடைபெறவுள்ளன. அதன்படி ஐரோப்பிய வட்டகையில் மொத்தம் எட்டு நாடுகளில் இருந்து நான்கு நாடுகள் தெரிவாகும். அந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள உள்ள நாடுகள் பின்வருமாறு:

குரோஷியா, ஐஸ்லாந்து, சுவீடன், பிரான்ஸ், போர்த்துக்கல், உக்ரெய்ன், கிறீஸ், ரோமானியா.

ஆபிரிக்க வட்டகையில் இரண்டாவது சந்திப்பில் கலந்து கொள்ள உள்ள நாடுகள்:

நைஜீரியா 2-1 எத்தியோப்பியா, செனகல் 1-3 ஐவரி கோஸ்ட், கமரூன் 0-0 ரியூனிசியா, எகிப்து 1-6 கானா, அல்ஜீரியா 2-3 போர்க்கினோபாசோ.

Inter Confederation பிரிவு:

ஜோர்தான் - உருகுவே, மெக்சிக்கோ - நியூசிலாந்து, இவர்களில் யார் யார் பிரேசில் நோக்கிப் போகப்போகிறார்கள் என்பது மிக ஆர்வத்துக்குரிய எதிர்பார்ப்பு. எல்லாவற்றையும் எதிர்வுகூற முடியாவிட்டாலும் ஒரு சில நாடுகளைச் சாதகமாகச் சுட்டிக்காட்டலாம் என்கிறார்கள் உதைபந்தாட்ட விமர்சகர்கள். அவற்றுள் போர்த்துக்கல், ஐவரிக்கோஸ்ட், நைஜீரியா, உருகுவே, மெக்சிக்கோ என்பன அடக்கம். எதையும் பொறுத்திருந்து பார்ப்பதே சரியானது.



# ஏன் இல்லை





ஜோசெப் கிருஷ்ணா



**விஸ்டன்** நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி, என்றைக்குமான டெஸ்ட் அணியொன்றை அறிவித்துள்ளது. இந்த கனவு அணியின் தலைவராக அவுஸ்திரேலிய வீரர் (1940களில் விளையாடியவர்) டொன் பிரட்மன் குறிப்பிடப்படுகிறார். இவரது துடுப்பாட்டச் சராசரி 99.94. இவரது தெரிவுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆட்சேபிப்பதற்கும் எதுவும் இல்லை. இவரையடுத்து இங்கிலாந்தின் துடுப்பாட்ட வீரர் ஜக்ஹொப்ஸ் (1900களில் விளையாடியவர்) மற்றும் 1890களில் விளையாடி W.G.கிரேஸ், தொடர்ந்து இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், மேற்கிந்தியத்தீவுகளில் இருந்து பொருத்தமாகவே விவியன் றிச்சட்ஸ், கெரிசோபர்ஸ், இங்கிலாந்தின் அலன்நொட்(விக்கெட் காப்பாளர்) பாகிஸ்தானின் வசீம் அக்ரம், அவுஸ்திரேலியாவின் ஷேன்வோர்ண், மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் மெல்கம் மார்ஷல், இங்கிலாந்தின் 1910களில் விளையாடிய சிட்னி பார்ண்ஸ் ஆகியோர் அணியை நிறைவுசெய்கின்றனர்.

ஆனால் இந்தக் கனவு அணியில் உலகின் சுழல்பந்து வீச்சில் சாதனை (800 இலக்குகள்) புரிந்த முத்தையா முரளிதரன் ஏன் இல்லை என்பதை சிந்தித்துக்கொள்ள இயலவில்லை. அதிலும் சமகாலத்தில் விளையாடிய ஷேன்வோண் அணியில் சேர்க்கப்பட்டிருக்க முரளிதரன் நீக்கப்பட்டுள்ளமையே பல வினாக்களுக்குக் களமாக அமைந்துள்ளது. சிலவேளைகளில் சுழல் பந்துவீச்சுக்குச் சாதகமான மைதானங்களைக் கொண்ட நாட்டின் வீரரைவிட வேகமான, எகிறுதன்மை கொண்ட மைதானங் களைக் கொண்ட, நாட்டின் வீரர் சுழல் பந்துவீச்சை லாவகமாக்கிக் கொண்டது என்ற எடுகோள் ஒரு காரணமாக அமைந்திருக்குமோ தெரியவில்லை. இது ஒரு ஊகம் மட்டுமே.

# தொடரட்டும் திறமை



**எ**திர்வரும் டிசெம்பர், ஜனவரியில் இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தான் அணியை மூன்று டெஸ்ட் போட்டித்தொடர் ஒன்றில் சந்திக்க இருக்கிறது. டில்ஷான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ள நிலையில், இவருக்கான பதிலீடு யார் என்பது முக்கியமான தொரு கேள்வியாக எழுந்தது. அந்தவகையில் இவ்வருடத்தில் துடுப் பாட்டத்தில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் துடுப் பாட்ட மற்றும் விக்கெட் காப்பாளரான கௌஷால் சில்வா அந்த இடத்தைப் பெற்றுக்கொள்வார் என்று தெரியவருகிறது. முன் வரிசைத் துடுப்பாட்ட வீரரான இவர் தற்போது ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக முதல்தரப் போட்டிகளில் களம் இறங்கி நான்கு சதங்களை அடித்து அசத்தியுள்ளார். இதில் இலங்கை 'A' அணி சார்பாக மட்டும் மூன்று சதங்களை அடித்துள்ளார்.

டில்ஷான் ஓய்வுபெறுமுன், இளைஞர்களின் வருகைக்காக இடம் விட்டு ஒதுங்குகிறேன் என்று கூறியிருந்தார். இந்த நிலையில் மூன்று திறமைவாய்ந்த இளைஞர்கள் டில்ஷானின் இடத்தை நிரப்ப எதிர்பார்க்கப் பட்டார்கள். அவர்கள் உதார ஜயசுந்தர, குஷால்பெரோ, மற்றும் கௌஷால் சில்வா. இந்த மூன்றுபேருமே சிறந்த வீரர்களாயினும், அண்மைக்காலப் பெறுபேறுகளின்படி கௌஷால் சில்வா இலங்கை அணி யில் இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளார். இவருடன் இணைந்து திமுத் கருணாரட்ண இலங்கை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களம் இறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் சிறந்த பல்வகை பந்துவீச்சாளர்களைக் கொண்ட அணி. சுழல் பந்துவீச்சாளர் சயீட் அஜ்மல் ஒரு மந்திரக்காரர். எல்லோரும் பார்த்துப் பயப்படும் ஒரு வீரர் அவர். அதோடு ஜுனைட்சான், மொஹமட் இர்பான் இருவரும் மிகத் துல்லியமாகப் பந்துவீசுபவர்கள் என்று சுட்டிக் காட்டப்படுகிறார்கள். எனவே இலகுவானதென்று சொல்லிவிட முடியாத, சவாலான பாகிஸ்தான் அணியைத்தான் இவர்கள் சந்திக்கப்போகிறார்கள். கௌஷால் சில்வா நீண்டகாலம் இலங்கை அணியில் விளையாட வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்.

# சுவையான துளிகள்



**இனி** சச்சினை எவ்வகை கிரிக்கெட்டிலும் ஒரு வீரராக மைதானத்தில் காணமுடியாது. ஒரு நாள் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றபின் இருபதுக்கு இருபது ஆட்டங்களில் ஆடினார். மும்பை அணிக்காகவும், அதன் ரசிகர்களுக்காகவும் தொடர்ந்து மும்பாய் அணிசார்ந்து விளையாடி னார். மும்பை இந்தியன்ஸ் ஐ.பி.எல் மற்றும் சம்பியன்ஸ் லீக் வென்றபின் முழுமனதுடன் ஓய்வு பெற்றிருக்கிறார். இந்தியா உலகக்கோப்பை வென்றபோது சச்சின் இந்திய அணியில் இருந்தார். ஐ.பி.எல், சம்பியன் லீக் ஆட்டங்களில் கிண்ணம் வென்றுகொடுத்துள்ளார். இப்படி சுமூகமான ஓட்டமாக ஆரம்பத்தில் சச்சினின் கிரிக்கெட் வாழ்க்கை இருக்கவில்லை. சச்சின் ஆடிய முதல் இரு ஒருநாள் போட்டிகளிலும் ஒரு ரண் கூட எடுக்கவில்லை. இரண்டு ஆட்டங்களிலும் இந்திய அணி தோற்றது. சச்சின் முதல் சதம்போட 78 ஆட்டங்கள் தேவைப்பட்டது. தொடர்ந்துவந்த மூன்று ஆட்டங்களில் பூஜ்ஜியம். 99 சதங்கள் போட்டவர். 100வது சதம்போட ஒரு வருட காலம் தவித்தார். ஐ.பி.எல் ஆட்டங்களில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக இருந்தபோது அவ்வணி பல தோல்விகளைச் சந்தித்தது. ஆனால் ரோகித் ஷர்மா தலைமையில் ஒரே வருடத்தில் ஐ.பி.எல் சம்பியன் கிண்ணம் மற்றும் சம்பியன்ஸ் லீக் வெற்றிக்கிண்ணம். எனினும் சச்சின் இறுதியாக வெற்றிநாயகனாகவே விடைபெறுகிறார்.

இவரது கிரிக்கெட் வாழ்க்கையும் T20 ஆட்டத்தில் ஆரம்பித்ததுதான். பாகிஸ்தானுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் விளையாடும் அணியில் சச்சின் இல்லை. ஆனால் அந்த ஆட்டத்தை மழைகுழப்பவே, ஒருநாள் ஆட்டம் ரத்துச் செய்யப்பட்டு கண்காட்சி இருபது ஓவர் ஆட்டமாக மாற்றப்பட்டது. அதில் சச்சின் இருந்தார். அந்த ஆட்டத்தில் சுழல் பந்துவீச்சாளர் அப்துல் காதிரின் ஒரு ஓவரில் 6-0-4-6-6-6 என்று சாத்தினார். சச்சின் இருபதுக்கு இருபது ஆட்டங்களில் பெரிய சாதனைகள் ஏற்படுத்த முடியவில்லை. இருந்தாலும் முடியுமோ,. முடியாதோ மும்பை அணிகேட்டு விளையாடாமல் விட்டதில்லை. சச்சினின் சிறப்பே சச்சின் ஆடுகிறார் என்ற ஒரு காரணத்துக்காகவே ரசிகர்கள் பெரும் எடுப்பில் மைதானத்தில் குவிவார்கள். ஜாம்பவான் டிராவிட் உடன் தொடர்புபடுத்தி ஒரு செய்தியும் உண்டு. இந்திய அணி வீரர்கள் அவுட் ஆகினால் ரசிகர்கள் அமைதியடைந்துவிடுவார்கள்.

ஆனால் டிராவிட் அவுட் ஆகினால் ரசிகர்கள் ஆரவாரம் செய்வார்களாம். காரணம் அடுத்து களம் இறங்குபவர்(பல சந்தர்ப்பங்களில்) சச்சின் என்பதே. மேற்படி சுவையான விடயங்கள் கல்கி வாராந்தரியில் பிரசுரமாகி இருந்தன. வாசிப்பதற்குச் சந்தோஷமாக இருக்கிறதல்லவா.




— மணி —

# — தமிழ் கல்வியமைச்சு —

# இருந்ததையும் இழந்தது தலைமைவெறி





**வ**டக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அடுத்தபடியாக தமிழர் வாழ்கின்ற பகுதியாக மலையகத்தினைக் குறிப்பிடலாம்.

தேயிலைத்தோட்டங்களில் வேலைசெய்வதற்காக தென்னிந்திய மாட்டங்களில் இருந்து 1800 களின் ஆரம்பத்தில் அழைத்து வரப்பட்ட மலையக மக்களின் வாழ்க்கையோ போராட்டம்மிக்க ஒன்றாக இருக்கின்றது. அரசியல் உரிமைக்கான போராட்டம், சம்பளத்திற்கான போராட்டம், வாழ்விற்கான போராட்டம் என்று தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இவ்வாறு இருக்கையில் இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தின் பிரகாரம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டபோது அன்றைய அரசாங்கத்துடன் மலையக மக்களின் சார்பில் பேரம்பேசி மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் கல்வி அமைச்சினை அமரர் சௌமிய மூர்த்தி தொண்ட மானினால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

முதலாவது மாகாணசபையில் மலையகத் தமிழர் ஒருவருக்கு கல்வியமைச்சு வழங்கப்பட்டிருந்தது. அதாவது மத்திய மாகாணத்தின் கல்வியமைச்சராக இராமநாதன் (ஆறுமுகம் தொண்டமானின் தந்தை) அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். ஆனால் அடுத்த மாகாண சபையில் மீண்டும் மலையகத் தமிழர் ஒருவருக்கு வழங்குவதற்கு அப்போதைய அரசாங்கம் விரும்பவில்லை.

ஆனால், கல்வியமைச்சு தவிர்ந்த வேறு அமைச்சுக்களைப் பொறுப்பேற்பதில்லை என்பதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுதியாக இருந்தது.

இவ்வாறான நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை அப்போதைய தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் உறுதியான நிலைப்பாடு காரணமாக கல்வியமைச்சு, தமிழ் கல்வியமைச்சு என்று தனியாகப் பிரிக்கப்பட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரசிடம் கொடுக்கப்பட்டது.

மலையகப் பிரதேசத்தில் தமிழ் கல்வியமைச்சு உருவான கதை இதுதான். அன்று மட்டும் அமரர் தொண்டமான் தனது நிலைப்பாட்டில் தளம்பியிருப்பாராக இருந்தால் தமிழ் கல்வி அமைச்சானது அன்றே மறைந்து போயிருக்கும்.

இவ்விதமாக ஊவா மற்றும் மத்திய மாகாணங்களின் தமிழ் கல்வியமைச்சினை மலையக மக்களின் பிரதிநிதிகள் பெற்றுவந்தனர். அந்தக் கல்வியமைச்சின் ஊடாக மலையகக் கல்வித்துறைக்கு பாரிய சேவைசெய்ய முடிந்தது என்பதை மறந்துவிட முடியாது. இந்த அமைச்சு கிடைக்கப் பெற்றதன் பின்னர்தான் மலையகக்கல்வி படிப்படியாக வளரத்தொடங்கியது.

மலையகத் தமிழ் பாடசாலைகளுக்கான பல்வேறுபட்ட அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டதற்கு இந்த அமைச்சு ஒரு முக்கிய காரணம் எனலாம். கட்டடங்களை நிர்மாணித்தது முதல் ஆசிரிய நியமனங்கள், சிற்றூழியர் நியமனங்கள் போன்றவற்றில் செல்வாக்குச் செலுத்தமுடிந்தது.

கடந்த காலங்களில் மலையகத்தில் ஒரு சில தமிழ் கல்வியமைச்சர்கள் தமது பொறுப்புக்களை திறம்பட செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளபோதிலும் பெரும்பாலும் தமிழ் கல்வியமைச்சினை பொறுப்பேற்றுக் கொண்டவர்கள் தம்மாலான சிறந்த சேவையினை செய்தார்கள் என்று கூறவேண்டும்.

இவ்வாறு ஊவாவிலும் மத்திய மாகாணத்திலும் தமிழ் மக்கள் அனுபவித்துவந்த தமிழ் கல்வியமைச்சு தற்போது முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் கல்வித்துறை ஓரளவு முன்னேற்றம் கண்டுவருகின்ற போதிலும் ஏனைய சமூகங்களோடு ஒப்பிடுகின்றபோதிலும் அது போதுமானதாக இல்லை.

இந்நிலையில் இருந்த தமிழ் கல்வியமைச்சு நீக்கப்பட்டிருப்பது மலையகக் கல்வியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்ற அச்சம் புத்திஜீவிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த மத்திய மாகாணசபை தேர்தல் காலத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியவற்றின் பிரசாரமேடைகளில் தோற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, "பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தனிவீடுகள் கட்டித்தரப்படும், காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் போது மலையக மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்" என்றெல்லாம் வாக்குறுதிகளை வாரி வழங்கியிருந்தார்.

ஆனால், இன்று இருந்த தமிழ் கல்வியமைச்சினையே இல்லாமல் செய்திருப்பது மலையக மக்களுக்கு பாரிய ஏமாற்றத்தை அளித்திருக்கின்றது.

தேர்தலின்போது தற்போதைய அரசாங்கத்தின்மீது நம்பிக்கை வைத்து மலையகத் தலைமைகளின் நம்பிக்கை ஊட்டல்களுக்கு செவிசாய்த்து தமது ஆதரவினை பெரும்பாலான மக்கள் ஆளும் தரப்பிற்கு வழங்கியிருந்தனர். அவ்வாறானவர்கள், குறித்த செயற்பாட்டால் ஏமாற்றம் அடைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. கடந்த மாகாணசபை தேர்தலில் மலையக மக்கள் தெளிவாக சிந்தித்திருக்கின்ற போதும் மலையக தலைமைகள் தங்களுக்கு யார் பெரியவர் என்ற தலைமைத்துவப் போட்டியில் பிரிந்துநிற்பதால் மக்களின் வாக்குப் பலத்தை சரியான திசையில் பயன்படுத்த முடியாதவர்களாக சிதறுண்டு இருப்பதோடு இருந்ததையும் இழக்கும் என்ற நிலைமையைப் பார்த்துக்கொண்டு மௌனம் காக்க வேண்டியநிலையில் இருக்கின்றார்கள் என்பது வேதனைக்குரியது.

எனவே மலையகத் தலைமைகள் தமக்கு மக்கள் வழங்கியிருக்கின்ற ஆணையை பேரம் பேசும் சக்தியாக பயன்படுத்தி மக்களின் உரிமைகள் விடயத்தில் உறுதியுடனும் தெளிந்த சிந்தனையுடனும் செயற்பட வேண்டும். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் தற்துணிச்சலை முன்னுதாரணமாகக் கொண்டு தற்போதைய தலைமைகள் மக்கள் நலம்சார்ந்து சிந்திக்கவேண்டும் என்பதே மலையக மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

# சிறுத்தையிடம் சிக்கினார் அபலைப் பெண்

ஹட்டன் வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குயில்வத்தை கீழ் பிரிவு தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த கனகேஸ்வரி என்ற பெண் தொழிலாளி சிறுத்தையின் தாக்குதலுக்கு உள்ளானார். இவர் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



இதுதவிர இரவு நேரங்களில் இப்பிரதேச தோட்டப் பகுதிகளுக்குள் செல்லும் சிறுத்தை அங்குள்ள நாய்களை பிடித்துச் செல்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# சத்தமின்றி நடக்கிறது இன அழிப்பு?

**ம**லையகப் பகுதிகளிலும் கட்டாய கருத்தடைமூலம் இந்த இன அழிப்பு மேற்கொள்ளப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் வெளியாகியுள்ளன. இந்தக் கட்டாய கருக்கலைப்பு குறித்து மலைய சிவில் அமைப்புக்கள் பல தடவைகள் வலியுறுத்தி வருகின்றபோதும் அதனை அரசியல் தலைவர்கள் கண்டுகொள்வதாக இல்லை.

குறிப்பாக, கல்வி அறிவு குறைந்த தோட்டப்புறங்களில் இந்த கட்டாய கருத்தடை அதிவேகமாக இடம்பெற்றுவருகிறது. இரண்டு பிள்ளைகள்பெற்ற பெண் ஏதோ ஒரு காரணத்தை காட்டி கருத்தடைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கிறார்.

இந்த கட்டாய கருக்கலைப்பை உறுதிசெய்யும் வகையிலான சம்பவமொன்று அண்மையில் நுவரெலியா மாவட்டத்தின் கந்தப்பளை - கோட்லொட்ஜ் தோட்டத்தில் பதிவாகியுள்ளது.

கந்தப்பளை கோட்லோட்ஜ் தோட்டத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி தோட்ட நலன்புரி உத்தியோகத்தரால் அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. அதாவது ஒக்டோபர் 1ஆம் திகதி நுவரெலியாவில் இருந்து டெங்கு பரிசோதனைக்கு உடல்நல வைத்திய அதிகாரிவருகிறார். அதனால் அனைவரும் தவறாது சமூகமளிக்கவேண்டும். குறிப்பாக 18 வயதிற்கும் மேற்பட்ட பெண்கள் கட்டாயம் சமூகமளிக்கவேண்டும் என்பதே அந்த அறிவிப்பாகும்.

அதன்படி, ஒக்டோபர் முதலாம் திகதி கோட்லொட்ஜ் தோட்ட சுகாதார நிலையத்திற்கு நுவரெலியாவில் இருந்து உடல்நல வைத்திய அதிகாரி, தோட்ட நலன்புரி உத்தியோகத்தர், குடும்ப நல மருத்துவ மாது ஆகியோர் சென்றுள்ளனர்.

காலையில் இருந்து நடைபெற்ற இந்த மருத்துவ சிகிச்சையில் பலருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கந்தப்பளை கோட்லோஜ் தோட்டத்தைச் சேர்ந்த கோட்டை புஸ்பராணி என்ற இரண்டு பிள்ளைகளின் தாயும் சிகிச்சைக்கு சென்றிருந்தார்.

அங்கு குறித்த பெண்ணுக்கு கட்டாய கருத்தடை செய்யப்பட்டுள்ளது. குறித்த பெண் மாதவிடாய் காலத்தில் இருந்துள்ளபோதும் அதனையும் கருத்திற்கொள்ளாது கருத்தடை செய்யப்பட்டுள்ளது.

அதன்பின் வீடு திரும்பிய புஸ்பராணிக்கு விடாது இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால் புஸ்பராணி தனது கணவர் மற்றும் உறவினர்களால் அன்றையதினம் மாலை நுவரெலியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்வழியில் அவர் நினைவிழந்து மயக்கமடைந்துள்ளார். நுவரெலியா வைத்தியசாலையில் அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டபின் அவர் கண் விழித்துள்ளார். தற்போது, குறித்த பெண் வீடு திரும்பியுள்ளார்.

இந்த சம்பவத்தை அடுத்து கொதிப்படைந்த குறித்த பெண்ணின் கணவர் முதலில் அஞ்சியபோதும் பின்னர் கந்தப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இவ்வாறு மலையகத்தில் வெளிச்சத்திற்கு வராமல் பல கருத்தடைச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன. கடந்த முறை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பில் மலையக மக்களின் சனத்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு இந்த கட்டாயக் கருத்தடையும் ஒரு மறைமுக காரணம் என்பது தற்போது வெளிச்சத்திற்கு வந்தவண்ணமுள்ளது.

எனவே, இந்த விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க மலையக பிரதான கட்சிகள் எவையும் இதுவரை முன்வரவில்லை. குறிப்பாக மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை தலைவர், பாராளுமன்ற உறுப்பினருமான வி.இராதாகிருஸ்ணனின் பிறந்த ஊர் கந்தப்பளை - கோட்லோட்ஜ் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், புதிய தொழிலாளர் முன்னணியின் தலைவர் முரளி ரகுநாதனினால் மனித உரிமை ஆணைக்குழுவில் இதுதொடர்பில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

மலையகப் பகுதிகளில் பல வருட காலங்களாக திட்டமிட்டு கருக்கலைப்பை செயற்படுத்திவரும் அமைப்புக்களுக்கு எதிராக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த கட்டாய கருத்தடையின் பின்னணியில் உள்ளவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும் எனவும், முரளி ரகுநாதன் தெரிவித்துள்ளார்.

ஆசை வார்த்தைகளைக் கூறி அற்பசொற்ப சலுகைகளை வழங்கி மலையகப் பெண்களை கட்டாய கருத்தடைக்கு உள்ளாக்கி வரும் செயல் ஒரு மனித உரிமை மீறலாகும். அதிகமானோர் கருத்தடை செய்துகொள்வார்களானால் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு சன்மானமும் வழங்கப்படுவதாக செய்திகள் அடிபடுகின்றன. சொந்த நலன்களுக்காக ஒரு சமூகத்தை காட்டிக்கொடுக்கும் அல்லது சமூகத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் இத்தகைய செயல்கள் வன்மையாக கண்டிக்கத்தக்கவையாகும்.

ஜன்னல் வழியினூடு ஒரு தென்றல் அனுமதிபெறாமல் உள்ளே புகுகிறது. மென்மை, என் வன்மை உடலில் சங்கமிக்கிறது. இரண்டும் ஒன்றரக் கலந்தே மென்மையாகிறது. மனதுக்குள் இளம் அமைதி. தென்றலுடன் சுவாசித்தல் தொடர்கிறது. இன்பமயமானதோர் பூங்காவனம் உள்ளே உருவெடுத்தலில் ஈடுபடுகிறது.

"பூங்காற்றிலே உன் சுவாசத்தை தனியாகத் தேடிப் பார்த்தேன்" என்ற உயிரின் பாடல்வரிகள் இன்னும் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அதேவேளை, "நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா" கண்ணதாசனின் பாடல் வரிகளும் அவ்வப்போது நினைவில் நிழலாடத்தான் செய்கின்றன.

மனித வாழ்க்கையினையே ஆட்டம் காணவைக்கும் பருவத்திலிருந்து யாரும் தப்பிக்க முடியாதுதான். நான் சிறுவனாக இருக்கும்போது, அவ்வாறான இளைஞர்கள் எத்தனையோ பேரைக் கண்டிருக்கிறேன். அப்போது என்னால் சொல்லக்கூடிய வார்த்தை "சே" என்பது தான். ஆனால் இன்று நான் இளைஞன். அதே வேலையைச் செய்கின்ற என்னை, இன்றைய சிறுவர்கள் பார்த்து அதே வார்த்தையைச் சொல்கிறார்கள். கற்றவனைவிட பட்டவனுக்குத்தானே அதிகம் அனுபவமிருக்கும். அதனால்தான் சொன்னேன், ஆட்டம்காட்டும் வாலிபப் பருவத்தைப் பற்றி.

வாழ்க்கையில் சில கட்டங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளலும், இன்னும் சில கட்டங்களை மறத்தலுமே நல்லது. ஆனால், என் வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சியில் இவ்விரண்டுமே சங்கமிக்கிறது. எதைச்செய்ய என்பது இன்னும் எனக்குப் புரியவில்லை. மூன்று வருடத்துக்கு முன்னோக்கியதான பயணித்தலை என் பேனா மைதொட்டு வரைகிறது.

மாலைநேர வகுப்பிற்குச் செல்ல சில நிமிடங்கள் தாமதமாகையால், சைக்கிளை வேகமாக ஓட்டிக்கொண்டிருந்தேன். செல்லும் வழியில், என்னை அறியாமல், என் கைகள் சைக்கிள் பிரேக்கை அழுத்தியது, ஒரு சைக்கிள் நின்றுகொண்டிருந்தது. அதற்காக நிற்கவில்லை. அருகில் ஒரு அழகான பெண் நின்றுகொண்டிருந்தார். என்னோடு, என் வகுப்பில் படிக்கின்ற அதே அழகான பெண்தான். ஆரம்ப காலத்திலிருந்தே, எங்கள் உதடுகள் பேசிக் கொள்ளாவிடினும், உணர்வுகள் பேசிக் கொண்டிருக்கும்.

சிறிய தயக்கத்துடன் அவளருகில் சென்றேன். "வட்ஸ் த ப்ரப்ளம்" என்று கேட்டதற்கு அவள் கை சைக்கிள் செயினைக் காட்டியது. அது, அதனது இடத்திலிருந்து அகன்றிருந்தது. அதாவது கழன்றிருந்தது. இதற்குமுன், என் சைக்கிளில்கூட இப்படியான கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதைவிட, டயர் கிழிகிறது, பெச் போறது, ப்ரேக் அறுகிறது.

# அவள் பெயர் கீதா



றபீஸ், கிண்ணியா

இப்படியானதெல்லாம் நடக்கும். இதற்காக நான், என் கையை ஈடுபடுத்துவதில்லை. அப்படியே வீட்டுக்குக்கொண்டு வந்து முற்றத்தில் வைத்துவிடுவேன். அப்பதான், அதனையெல்லாம் செய்துதருவார்.

ஆனால் இன்று என் கைகள் புத்தம் புதியதோர் வேலையைச் செய்வதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தது. அதுவரை இதையெல்லாம் நான் தொட்டதுமில்லை. அவை என் கையில் பட்டதுமில்லை. இப்போது நான் செய்யப்போகும் இந்தச் சின்னப் பிரச்சினை என் மானப் பிரச்சினை. சைக்கிளை ஒருமுறை சுற்றிப் பார்த்துக்கொண்டேன். அனுபவமற்ற கருமத்தில் முதன்முதலாய்க் கையைப் புகுத்தினேன். கொஞ்சம் கிறீஸ் படத்தான் செய்தது. இதையெல்லாம் அசுத்தம் என்று சொல்லும் என் மனம் பரவாயில்லை என்றது ஒரு பெண்ணுக்காக.

அதனை நுணுக்கமாக ஆராய்ந்த என் கண்கள், ஐந்து நிமிடத்தில் வெற்றிகரமாக முடித்தது. அவள் என்னுடன் பேசிய "நன்றி" எனும் முதல் வார்த்தையுடன் முன்னோக்கி சென்றுகொண்டிருந்தாள், மெல்லிய புன்னகை பூத்தபடி. ஏதோ ஒரு பெரிய விடயத்தை சாதித்துவிட்டேன் என்ற ஆனந்தத்துடன், மனதில் இன்னுமொரு விடயத்துக்கான அஸ்திவாரமும் போடப்பட்டுக் கொண்டிருந்தது.

ஆரம்பத்தில் பார்க்காத பார்வைகள் கூட, அன்றிலிருந்து பார்க்கத் தொடங்கின. மனதில் இனம்புரியாத தடுமாற்றமும் எழத்தான் செய்தது. ஓரிரு வார்த்தைகளே உரையாடலுக்கு ஊக்கமளித்தது. வரும்போது ஒரு ஹாய், போகும்போது ஒரு பாய். இவைதான் அவளுடன் பேச அடித்தளம் அமைத்துத்தந்தது.

வீட்டிலிருந்து, கட்டிலில் அமர்ந்துகொண்டு, அவள் பற்றி யோசிக்கையில், அம்மாவின் கட்டாய அழைப்பின் பேரில்தான் கோயிலுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அம்மாவை மட்டும் கோயிலுக்குள் போகச் சொன்ன நான். கோயில் வாசலில் அமர்ந்துகொண்டேன். எதிர்பாராதவிதமாய், அவளும் வந்திருந்தாள். கோயிலுக்கு வந்திருந்தாள். அவள் பெயரைக்கூட நான் இன்னும் உங்களுக்குச் சொல்லவில்லையோ? "அவள் பெயர் கீதா". எனக்கொரு புன்னகை தந்தே உள்நுழைந்தாள். அவள் இன்றைக்கு தனியாய் வந்திருந்தது, பேசுவதற்கு நல்ல சந்தர்ப்பம் என்று என் மனம் சொன்னது.

அவளைப் பின் தொடர்ந்தேன். கோயிலுக்குள் போனேன். சற்றுநேரத்தில், சாமி கும்பிட்டுவிட்டு, அருகிலுள்ள நீர்த் தடாகப்படியில் அமர்ந்துகொண்டாள். நானும், ஒரு சிறு தயக்கத்துடன் வணக்கம் சொல்லி அமர்ந்துகொண்டேன். பதிலுக்கு அவளும் வணக்கம் கூறினாள். அரை மணித்தியாலச் சந்திப்பில் எவ்வளவோ கதைத்துவிட்டோம். இறுதியில், போன் நம்பரைக் கொடுக்கவும் மறக்கவில்லை.

இன்று பாடசாலையில் எங்களுக்கான பிரியாவிடையால் பிரிக்கப்பட்டாலும், தொலைபேசியால் தொடர்பிலிருக்கிறோம். எவ்வளவுநேரம் என்று தெரியாது. மணிக்கணக்கில் பேசுவோம். உயர்தரப் பரீட்சை நாளும் நெருங்கியது. நன்றாகப் படித்து நல்ல முறையில் பரீட்சை எழுதினோம். இதன்பின், அவளை நேரில் சந்திக்க அவ்வளவு முடியவில்லை.

அந்திசாயும் வேளையில், கடற்கரையில் நண்பர்களோடு பள்ளிக்காலத்தை மீட்டிப்பார்த்ததில் மிகப்பெரும் மனநிம்மதி. நேரம் செல்ல வீட்டுக்குச் செல்லத் தயாரானேன். ஆனால் சென்றவுடன் என் பெற்றோர்கள் எனக்கு மிகப்பெரும் அதிர்ச்சிதருவார்கள் என்று சற்றும் நினைத்துப் பார்த்ததில்லை. என்னை வெளிநாட்டில் ஒரு வேலைக்கு அனுப்பப் போகிறார்கள். மாதாமாதம் நல்ல சம்பளமாம், குடியிருக்க வீடு தருவாங்களாம், கம்பனிக்குப் போய்வர வாகனமாம், இன்னும் பல சலுகையாம்.

ஏன் எனக்கு இவ்வளவு தருவார்கள் என்று தெரியுமா? எங்க ராமசாமி மாமா அதே கம்பனியிலதான் சீப் செக்ரட்டியா இருக்கிறார். அவர் செய்த வேலைதான் இது. என்றாலும், நான்விடவில்லை. எனக்குப் போகமுடியாது என்று ஒன்றைக் காலில் நின்றேன். பின், இதைப்பற்றி கீதாவிடம் சொன்னேன். அவளும், என் அம்மா, அப்பா போல் "போ" என்று சொல்லிவிட்டாள். உன்னைவிட்டு என்னால் போகமுடியாது என்று கூறியதற்கு, நீ ஒரு நல்ல வேலையில் இருந்தால் தானே, என் பெற்றோரிடம் பொண்ணு கேட்கமுடியும் என்றுகூறிய அவளின் வார்த்தையில் ஏதோ ஒரு உண்மை இருக்கத்தான் செய்தது. சில நிமிடம் யோசித்த நான், பின் ஓ.கே சொன்னேன்.

என் குடும்பத்தையும், கீதாவையும் விட்டுப் பிரிந்ததில் எனக்கு எவ்வித உடன்பாடும் கிடையாது. இப்போது, லண்டனில் இருக்கிறேன், "எத்தனை வருடமானாலும் உனக்காகக் காத்திருப்பேன்" என்றுகூறிய அவளின் வார்த்தைகள்தான் என்னை ஆறுதலடையச் செய்தது.

இப்போது, நாங்கள் தொலைபேசியிலும் தொடர்பில்லை. அவளின் அப்பாவின் ஏதோ ஒரு வற்புறுத்தலின் காரணமாகத்தான் அவள் தொலைபேசி பாவிக்கவில்லை போலும். கம்பனியில் வேலைகள் அதிகமிருந்ததால், பொழுதுகள் போவது அவ்வளவு பெரிதாகக் காட்டவில்லை. சனி, ஞாயிறுகளில் நானும், ராமசாமி மாமாவும்தான் வெளியே சுற்றுவோம். ஒரு இடம் மிச்சம்வைக்காமல் லண்டன் பூராகவும் காட்டுவார். நாட்களும் கரைந்து கொண்டிருந்தது.

இங்குவந்து மூன்று வருடம் முடிகிறது. முடிந்ததில் அவ்வளவாகத் தெரியவில்லை. ஆயினும், முதல்முறையாக வீட்டுக்குப் போகும் சந்தோஷத்தில் முழுமனமும் இலங்கையில்தான் இருந்தது. எப்போது விமானம், கொழும்பு சென்றடையும் என்ற ஆனந்தத்தில் என்னையே மறந்து போனேன். விமானம் தரையிறங்க, வெளியே வந்த அப்பாவும், அம்மாவும் கட்டிப்பிடிக்க ஆனந்தக்கண்ணீர் மூவர் முகங்களிலும் வழிந்தது. ஆனால் எனக்கு, அவை நீண்ட நேரம் நிலைத்திருக்கவில்லை.

வீட்டுக்கு வந்து குளித்துவிட்டு காலை உணவைச் சாப்பிட்டேன். பின் அவளைப் பார்க்கவேண்டுமென்ற ஆனந்தத்தில் அவளுக்குப்பிடித்த நீல நிறத்தில் சேர்ட் அணிந்துகொண்டு, அவளுக்காக வாங்கிய கிப்ட் பார்சலையும் எடுத்துக்கொண்டு தைரியமான மனதுடன் அவள் வீட்டுக்குப் போனேன். சற்றுநேரத்தில் கீதாவைக் கண்ட நான் அதிர்ச்சியடைந்ததும், கண்ணீர்க் கடலில் மூழ்கியமையும் என் வாழ்வில் மறக்க முடியாதது.

ஓடோடி வந்தேன் உன் வீட்டுக்கு. உன்னைக் கண்டதுதான் தாமதம், என் உடல் மயக்கம் கண்டுவிட்டது. உன் கழுத்திலிருந்த மூன்று முடிச்சைக் கண்டு என் ஓரிரு கவிதைவரிகளும் உதிக்கத்தான் செய்தது. இருந்தும் பயனற்றுப் போனவன் நான். நீ திருமணம் செய்துகொள்ளாவிடின், தாங்கள் தற்கொலை செய்துகொள்வோம் என்ற உன் பெற்றோரின் வற்புறுத்தல் தான் காரணம் என்று உன் நண்பி சொன்னதுடன், கடைசிநேரத்தில் என்னைத்தான் திருமணம் செய்வேன் என்பதற்கு, உன் பெற்றோருக்கு, என் பெற்றோர் மீதுள்ள பழைய கோபம் தான் காரணம் என்பதையும் உன் நண்பி என்னிடம் சொல்லத் தவறவில்லை. மாப்பிள்ளை எஞ்சினியர் என்பதும் உன் திருமண அவசரத்திற்குப் பிரதான காரணமாக இருக்கலாம்.

காதல் தோல்வியில், தற்கொலை செய்யக் கடலை நோக்கிச் சென்றேன், அங்கே, ஒரு முதியவர் என்னை அழைத்துக் கேட்டார். முழுவதையும் கண்ணீர் வழியச் சொன்னேன். அவர் சொன்னார். காதல் தோல்விக்குத் தற்கொலைதான் முடிவு என்றால், உலகத்தில் அரைவாசிப் பேரைக் காணமுடியாது. தொடர்ந்து இரண்டு மணிநேரம் ஆறுதலாய் என்னோடு பேசினார் என்பது இன்னும் எனக்கு ஞாபகமிருக்கிறது.

நானும் ஒரு கணம் யோசித்துப் பார்த்தேன். காதல் தோல்விக்குத் தற்கொலை ஒரு முடிவல்ல என்பது, அப்போது எனக்குப் புரிந்தது. ஆயினும், நான் திருமணம் செய்துகொள்ளவில்லை. அவளுடைய பழைய அனுபவங்களுடனேயே என் வாழ்க்கையும் கழிந்தது.

நாட்களும் வாரங்களாக, மாதங்களாக, வருடங்களாக உருண்டோடிக் கொண்டு தானிருந்தது. ஆனால் திருமண விடயத்தில் என் அம்மாவின் வற்புறுத்தல் அதிகமிருந்தது. வயசும் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருக்கிறதாம்.


நான் திருமணம் செய்துகொள்ளும் வரைக்கும் தான் சாப்பிடப் போவதில்லை என்று அம்மா சாப்பிடாமலேயே இருந்துவிட்டார். நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். கடைசியில் கல்யாணம் பண்ணிக்கிறன் என்ற பிறகுதான் ஒரு ஒரேஞ் ஜூஸ் தொண்டைக்குள் போனது.

சமூகத்திலுள்ள ஒரு விதவைப் பெண்ணுக்கே நான் வாழ்வளிக்கவேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தேன். அதன்படி, என் பெற்றோர் ஒரு பெண்ணைப் பார்த்தார்கள். இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் கோயிலில் எளிமையாக நடந்தது. என்றாலும், இவளுடன் பேச ஏதோ ஒன்று என்னைத் தடுப்பது போலிருந்தது.

இவளைப்பற்றி நான் சொல்ல.... இவள் அவளது முதல் கணவனுடன் ஆறு மாதகாலமே வாழ்க்கை நடாத்தியிருக்கிறாள். கணவன் மிகப்பெரும் சந்தேகப் புத்திக்காரனாம். ஒவ்வொரு நாளும், குடித்துவிட்டு அவளை அடிப்பானாம். மாமியார் வீட்டில், ஒரு வேலைக்காரியை விடவும் கீழ்த்தரமாக உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். இறுதியில் விவாகரத்தில் முடிந்திருக்கிறது. ஒரே ஒரு விடயத்தை இங்கு கட்டாயம் சொல்லவேண்டும். அவளது அம்மாவும், அப்பாவும் அவளை வற்புறுத்தியே திருமணத்திற்கு ஒத்துக்கொள்ள வைத்திருக்கிறார்கள், மாப்பிள்ளை ஒரு எஞ்சினியர் என்பதற்காக தங்களாலேயே தங்கள் மகளின் வாழ்க்கை இப்படி இடிந்துபோனதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

ஆனால், அவளை நான் சந்தேகப்பட மாட்டேன், அவளுக்கு, எந்தக் கஷ்டம் வந்தாலும் அவளோடு பக்கபலமாக இருப்பேன் என்றும் என் மனதுக்கு உறுதியளித்தேன். அவள் பெயரை நான் இன்னும் உங்களுக்குச் சொல்லவில்லையோ...? "அவள் பெயர் கீதா".

ஊரோடி




# அழகிய கூடு(வீடு)

# குலைத்தது கள்ளத்தொடர்பு

கொட்டாவை, கட்டுகுருந்து வீதி, பன்னிப்பிட்டிய என்ற முகவரியைச் சேர்ந்த 65 வயதுடைய ரோகினி பெரேரா என்ற நான்குபிள்ளைகளின் தாய். தனது மகளான தினூஷாவின் வீட்டிலேயே வசித்துவந்தார். மகள் மருமகன் மற்றும் இரு பேரப்பிள்ளைகளுடன் சந்தோஷமாக இறுதிக்காலத்தை கழித்துக் கொண்டிருந்த ரோகினி பெரேராவின் மீது மருமகன் மற்றும் பேரப்பிள்ளைகள் மிகுந்த அன்பு வைத்திருந்தனர்.

மருமகனான தயாரத்ன நல்ல குணம் படைத்த ஒருவராக இருந்ததுடன் தனது குடும்பத்தின் மீது மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டு செயற்பட்டுவந்துள்ளார்.

தனது மனைவி பிள்ளைகளை சந்தோஷமாக எவ்வித குறையுமின்றி வைத்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அயராது பாடுபட்டு வந்துள்ளார்.

தனது குடும்பத்துக்காக அழகான வீடொன்றை கட்டி அவர்களை எக்குறையுமின்றி சந்தோசமாக வைத்திருக்கவேண்டும் என்ற கனவுகளோடு 2011ஆம் ஆண்டு தினூஷாவின் கணவரான தயாரத்ன சவூதி அரேபியா நோக்கி பயணமானார்.

இவ்விதமாக தனது குடும்பத்தின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு வெளிநாடு சென்ற தயாரத்ன அங்கு தான் உழைத்த பணத்தை தனது மனைவிக்கு அனுப்ப ஒருபோதும் மறந்ததில்லை. அதாவது வீட்டை கட்டிமுடித்து விரைவாக நாடு திரும்பி மனைவி பிள்ளைகளுடன் நிம்மதியாக வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் உழைத்த பணத்தை வீண்விரயம் செய்யாமல் அனுப்பிவைத்தார்.

இவ்வாறு கணவர் வெளிநாட்டிலிருந்து அனுப்பிய பணத்தில் வீட்டை கட்டுவதற்காக நல்ல மேசன் பாஸ் ஒருவரை தேடிக்கொண்டாள் மனைவி தினூஷா. இவ்வாறு வீட்டை கட்டுவதற்காக வந்த மேசன் பாஸ், அழகான வீடு கட்டிவந்தார்.

வீடுகட்டுவதற்காக வந்த மேசன் பாஸான இந்திக்கவுக்கும் இரு பிள்ளைகளின் தாயான தினூஷாவிற்கும் இடையில் நாளடைவில் காதல் மலர்ந்து வளர்ந்தது. இந்த உறவு தினூஷாவின் தாயாருக்கு தெரியவரவே அவர் அதற்கு கடுமையான எதிர்ப்பினை தெரிவித்து சண்டை பிடிக்கத் தொடங்கினார்.

நல்ல கணவர் ஒருவர் இருக்கும்போது ஒரு பாஸுடன் மகள் கள்ளத் தொடர்பினை வைத்திருப்பதை தாயான ரோகினியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதனால் மகளின் கள்ளக் காதலனான மேசன் பாஸையும் திட்டித் தீர்த்தார் ரோகினி.

இருந்தும் அவர்களது கள்ளத் தொடர்பினை நிறுத்த முடியவில்லை. இதனால் மகளான தினூஷா தினம் தினம் தாயுடன் சண்டையிட்டாள்.

மகளின் தகாத செயற்பாட்டினால் ரோகினி மிகவும் மனமுடைந்து போனார். இவ்வாறு நாட்கள் சென்று கொண்டிருக்கையில் 2011ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தினூஷாவின் தாய் காணாமல் போயுள்ளார். அத்தோடு மகளான தினூஷாவும் அவளது கள்ளக் காதலனும் கூட அங்கிருந்து வேறு இடத்துக்கு சென்றுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் ரோகினியின் மகனான பிரியந்த குமார இது தொடர்பாக கொட்டாவை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதாவது தனது சகோதரியின் வீட்டிலிருந்த போது தாய் காணாமல்போனதாக அவர் முறைப்பாடு செய்திருந்தார். அத்தோடு தாய் ஏற்கனவே ஓரளவு மனநலம் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

காணாமல்போன ரோகினியை தேடி கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை கொட்டாவை பொலிஸார் ஆரம்பித்தபோதும் அது சாத்தியப்படவில்லை. இருந்தபோதும் காணாமல்போன தாயை தேடும் பணியை மகன் பிரியந்த குமார கைவிடவில்லை. அதாவது எங்காவது இனந்தெரியாத சடலம் மீட்கப்பட்டால் உடனடியாக அங்கு சென்று அது தாயான ரோகினியுடைய சடலமா என்பதை பார்ப்பது வழக்கம். இருந்தபோதும் அவரால் தாயின் சடலத்தைக்கூட பார்க்க முடியவில்லை.

தினூஷாவின் கள்ளத்தொடர்பு மற்றும் மாமி ரோகினி காணாமல்போன விடயம் பற்றிய தகவல்கள் சவூதி அரேபியாவில் இருந்த தயாரத்னவுக்கு தெரியவந்தது. எனவே இவர் தனது ஒப்பந்த காலம் நிறைவடைந்ததும் கடந்த வருடம் ஜூன் மாதம் இலங்கைக்கு வந்தார். இங்கு வந்து பார்த்தபோது தான் மனைவி தொடர்பாக கேள்விப்பட்ட விடயங்கள் அனைத்தும் நூற்றுக்கு நூறு வீதம் உண்மையாக இருந்தன. எனவே மீண்டும் சவூதி அரேபியாவுக்கே செல்ல முடிவெடுத்தார் தயாரத்ன.

அதாவது தயாரத்ன இலங்கைக்குவந்த போது மனைவியான தினூஷா தனது கள்ளக் காதலனான இந்திக்கவுடன் குடும்பமாக இருந்துள்ளார். அத்தோடு பிள்ளைகளும் அவளுடனே இருந்துள்ளார்கள். எனவே வேதனையும் ஆத்திரமும்கொண்ட தயாரத்ன அப்படியே மனைவியின் தம்பியினுடைய (மச்சான்) வீட்டிற்கு சென்று சம்பவம் பற்றி பேசியுள்ளார். இவ்வாறு சுமார் இரண்டு வாரங்களை தனது மச்சானின் வீட்டில் கழித்தார் தயாரத்ன.

கணவர் நாடு வந்து சகோதரனின் வீட்டில் தங்கியிருந்ததால் மனைவியான தினூஷா இரண்டு வாரங்களில் தனது கள்ளக்காதலனான இந்திக்கவுடன் வீட்டிலிருந்து வெளியேறி வேறு இடத்திற்குச் சென்றாள். அதன்பின்னர் தனது வீட்டிற்கு வந்தார் தயாரத்ன.

இவ்வாறு வீடு வந்து தனிமையில் இருந்த தயாரத்னவிற்கு மனைவி மீது பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது மனைவியும் அவளது கள்ளக்காதலனும் இணைந்து தனது மாமியான ரோகினிக்கு ஏதாவது செய்திருக்கலாம் என்று எண்ணியவர், மாமி காணாமல்போன விடயத்தில் மனைவி மீதும் அவளது கள்ளக்காதலன் மீதும் சந்தேகம் உள்ளதாக மிரிஹான பொலிஸிற்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

தயாரத்ன மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோதும் அதற்குரிய விசாரணைகள் நடத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தயாரத்னவுக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது. அதாவது மாமியான ரோகினியை கொலை செய்து வீட்டு வளாகத்துக்குள் எங்கேயாவது புதைக்கப்பட்டிருக்கலாம்.' பெரும்பாலும் மலசலகூடக் குழிக்குள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற தகவலே அது.

இவ்வாறு தனக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தவேண்டும் எனகோரி தயாரத்ன உரிய அதிகாரிகளுக்கு கடிதம்மூலம் அறிவுறுத்தியுள்ளார். எனவே அவ்வதிகாரிகள் இந்த சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகளை நடத்துமாறு கொட்டாவை பொலிஸாருக்கு பணிப்புரைவிடுத்துள்ளனர். இந்த பணிப்புரை பாதுகாப்பு அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றதால் கொட்டாவை பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சினூடாக கிடைக்கப்பெற்ற விசேட பணிப்புரைக்கமைய தயாரத்னவிடம் பொலிஸார் வாக்குமூலங்களை பெற்றுக்கொண்டனர். மலசலக்கூடக் குழியில் மாமியாரான ரோகினி புதைக்கப்பட்டிருக்கலாம் என தயாரத்ன சந்தேகம் தெரிவித்தவுடனேயே பொலிஸார் அந்த குழியை திறந்து பார்க்க முற்படவில்லை.

அதாவது சந்தேக நபர்களான ரோகினியின் மகள் தினூஷா மற்றும் அவரது இரண்டாவது கணவர் ஆகியோரை பிடித்து அவர்களுக்கு முன்னால் இந்த மலசலக்குழியை திறந்து பார்க்கவேண்டும் என்பதற்காகவே உடனடியாக அதனை செய்யாமல் சந்தேக நபர்களை பொலிஸார் தேடியுள்ளனர். இருந்தபோதிலும் சந்தேக நபர்களை தேடிப்பிடிக்க முடியாமல் போயுள்ளது.

இரண்டு மாதங்களாக தேடியும் அவர்களை கண்டுபிடிக்க முடியாமல் போனமையினால் அவர்களது கையடக்கத் தொலைபேசி இலக்கத்தின் பதிவை வைத்து விலாசத்தை தேட பொலிஸார் முயன்றுள்ளனர். இருந்தபோதும் அவர்கள் இருவரும் தமது பெயரில் பதிவு செய்யப்பட்ட சிம்கார்ட்களை பயன்படுத்தவில்லை என்பது தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களை இரண்டு மாதங்களாக தேடியும் கண்டுபிடிக்க முடியாமையால் குறித்த மலசலகூடக் குழியில் ரோகினி புதைக்கப்பட்டுள்ளாரா? என்பதை பார்ப்பதற்கு பொலிஸார் தீர்மானித்தனர். அதற்கமைய கடந்த 16 ஆம் திகதி தயாரத்னவின் வீட்டு மலசலக்கூடக் குழியை பொலிஸார் திறந்தனர்.

ஹோமாகம நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆர்.பி.தெலும்தெனிய களுபோவில வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி நிசாந்த உட்பட முக்கிய அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் குறித்த மலசலகூடக் குழி திறந்து பார்க்கப்பட்டது.

ஆம், அந்த மலசலக்கூடக் குழியின் கொங்கிரீட் கல் அகற்றப்பட்டதும் உள்ளே படுக்கை விரிப்பு மற்றும் சாறியால் சுற்றப்பட்ட நிலையில் மனித சடலம் போன்ற பொதியொன்று காணப்பட்டுள்ளது. அதனை வெளியில் எடுத்து பார்த்தபோது அதற்குள் மனித எலும்புக்கூடு காணப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட எலும்புக்கூடானது காணாமல் போன ரோகினியுடையதா என்பதை உறுதி செய்வதற்கான பரிசோதனை, கடந்த மாதம் 17ஆம் திகதி களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் இடம்பெற்றுள்ளது. அதனடிப்படையில் ரோகினியின் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளினால் அந்த எலும்புக்கூடு ரோகினியினுடையதுதான் என அடையாளம் காணப்பட்டது.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுடன் இருந்த சாறி மற்றும் தங்கத்தோடு போன்றவற்றின் உதவியுடனேயே அந்த எலும்புக்கூடு ரோகினியுடையது என அடையாளம் காணப்பட்டதுடன், தயாரத்னவின் பிள்ளைகளிடம் மீண்டும் பொலிஸார் வாக்குமூலங்களை பெற்றுக்கொண்டுள்ளனர்.

பேரப்பிள்ளைகளின் வாக்குமூலங்களின் பிரகாரம் அம்மாவும் சித்தப்பாவும் தினமும் பாட்டியான ரோகினியுடன் சண்டையிட்டு வந்துள்ளனர். இவ்வாறு ஒரு நாள் அரைவாசி கட்டப்பட்ட நிலையில் இருந்த குளியலறைக்குள் பாட்டியின் சடலம் துணிகளால் சுற்றப்பட்ட நிலையில் இருந்ததை அப்பிள்ளைகள் இருவரும் கண்டுள்ளனர்.

பாட்டி காணாமல்போன போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது ஏன் அதனை கூறவில்லை என்பதற்கு அவர்கள் இவ்வாறு பதில் கூறியுள்ளனர். அதாவது இந்த சம்பவத்தை வெளியில் கூறினால் தம்மை கொன்றுவிடுவதாக சிறிய தந்தையான இந்திக்க அச்சுறுத்தியுள்ளதாக வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் கொட்டாவை பொலிஸார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கின்றனர்.

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(மன்னார்)

மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த கமலாம்பிகை குமாரசாமி மன்னார் மேல்நீதிமன்ற ஆணையாளர் ஜனாப் மொகமட் மக்கி முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை களுத்துறை சென்மேரிஸ் கல்லூரி, மன்னார் புனித சவேரியார் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கற்றதோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகமாணி பட்டதாரியும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையின் முதுமாணி (M.A) பட்டம் பெற்றவருமாவார்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர், வடமாகாணத்தின் பல மாவட்டங்களிலும் கடமைபுரிந்ததுடன், கொழும்பு கூட்டுறவு அமைச்சின் திணைக்களத்தில் வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டம், சிங்கள மொழிபெயர்ப்பு ஆகியவற்றையும் தனது கடமைகளாகக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






# வீரமும் காதலும்

மணமான பின்னர் வந்த
முதல் புத்தாண்டு!

அவளுக்கும் இனித்தது.
அவனுக்கும் இனித்தது!

'நம்மை நாமே
ஆண்டு கொண்டதும் புதிது!
நம்மை நாடி வரும்
இந்த ஆண்டும் புதிது!'
என்றவன் இயம்பினான்.

'நான் எங்கே
உம்மை ஆண்டேன்?
ஆண்டதும் நீர்தான்
ஆட்டுவித்ததும் நீர்தான்!'
என்றவள் உரைத்தாள்.

'செங்கோல் ஆட்சி
என்னதாய் இருக்கலாம்
கொடுங்கோல் ஆட்சி
உன்னதுதானே!'
என்றவன் சீண்டினான்.

'கொடுங்கோலாட்சியா?
கூறுங்கள் விளக்கமாக?'
வியப்புடன் வினா விழுந்தது.

எத்தனை இரவுகள்
வாட வைத்தாய்?
எத்தனை பகல்கள்
இரங்க வைத்தாய்?

இதழ் முத்திரைகூட
இல்லாமல்
நித்திரை இன்றி
தவிக்க வைத்தாய்!
என்றவன் நடித்தான் மெய்போலே

'அப்பப்பா
எத்தனை அபாண்டம்!
இப்போதே
இத்தனை பொய் சொன்னால்
போகப் போக
பொய் மழை பொழியாதோ?'
வாய்பொத்தி மலைத்தாள்.

'இந்த புத்தாண்டை
முத்தாண்டாய் மாற்றிவிடு
சித்தம் இனிக்க
திரட்டிக் கொடு!
மெய் எல்லாம் சிலிர்க்க
பொய் மறப்பேன்'
நிபந்தனை போட்டான்.
'முத்தாண்டாய் எப்படி
மாற்றுவதாம்?

முத்து குவியல்
கொட்டிக் கிடக்கிறதோ?
தெரியாதது போல வினா.

'முத்திலும் இனியது
உன் முத்தம்!
மொத்தமாய் கொடு
முழு நாளும்!'
என்று போட்டான்
இன்பமான விண்ணப்பம்.

'முத்தும் இல்லை
சொத்தும் இல்லை
பித்துத்தான் உண்டு
உமக்கு!' என்றாள்.

'பத்திரை மாற்று
சித்திரை நிலவே
வார்த்தைகளாலே
குத்துகிறாயே!'

கன்னம் வருடி
காதினை வருடி
கிண்ணம் போன்ற
எழிலினைப் பருகி
பின்னிக் கொண்டான்
மின்னல் கொடியை!

கொடியும் இசைந்தது
தழுவிக் கிடந்தது!
கொட்டிக் கொடுத்தது
கோதி எடுத்தது!

இதுதான் மாயமா?
தினமும் மாயமா?
தேகம் முழுவதும்
தெப்பம் ஆகுமா?
இன்பக் கடலினில்
மிதந்து போகுமா?

'இத்தனை ஆசையா
இன்று நமக்கென்ன
புதிதாக?'
என்றாள் வெட்கமாய்.

'ஆண்டு புதிதுதான்
அனைத்தும் புதிதுதான்
ஆசை புதிதுதான்
ஆர்வம் புதிதுதான்
என்றான் இன்பமாய்.

'என்றும் புதிதுதானோ?'
என்றாள்.

'நேற்றும் புதிதுதான்
இன்றும் புதிதுதான்
நாளையும் புதிதுதான்
ஆயுள் முழுவதும்
காதல் வாழ்க்கையில்
என்றும் புதிதுதான்!'
என்றவன் இயம்பினான்.

அவன் உரைத்தது
அவளுக்கு இனித்தது!
அவள் கால் எழுந்தது!
அவனை வளைத்தது!
காலும் காலும் கட்டிக்கொள்ள
இதழ்கள் மெல்ல
ஒட்டிக்கொண்டன!

அப்போதுதான் கேட்டது
போர் முரசம்!

பூவில் கிடந்த வண்டு
புரண்டது எழுந்தது!

மதம் கொண்ட
யானையால் முறிக்கப்பட்டு
உண்ணப்படாத
கரும்பாய் கிடந்தாள்
கட்டழகி!

காதலில்
பித்தாகிக் கிடந்தவன்
வீரத்தில்
சத்தேறி நின்றான்!

கண்ணிமைக்கும் நேரத்தில்
கவச உடை தரித்து.
உடைவாள் அணிந்து
போர்ப் புயலானான்!

விரகத்தை
அவள் புதைத்தாள்!
தாபத்தை
அவள் புதைத்தாள்!
அழைப்பது தாயகம்
அவனை
எப்படித் தடுப்பது?

பகைவந்து
வாசலில் நிற்கையில்
படுக்கையில் இன்பம்
எப்படித் துய்ப்பது?

அவசரம் இல்லையென்றால்
முரசம் ஒலிக்காது!
'புறப்படுங்கள்'!
என்றாள்!

அவனுக்கு
மகிழ்ச்சி ஓர் புறம்!
அவளை எண்ணி
வியப்பு மறு புறம்!

எட்டி வந்து
கட்டி அணைத்தாள்!
நெற்றி உரச
முகத்தோடு முகம்
பதித்தாள்!

நெற்றிகள் உரசியதில்
அவள் குங்குமத் திலகம்
அவன் நெற்றியில் சிரித்தது!

'வெற்றித் திலகம்
இட்டேன் பாரும்!
வாகை சூடி
வாரும் இங்கே!'

முத்தம் கொடுத்தவள்
மந்திரம் சொன்னாள்!
களத்தில் நிற்கையில்
அவள் சொன்னதே
காதினில் ஒலித்தது!

'வெற்றி. வெற்றி. வெற்றி'
புயலாய் பொருதினான்.

களத்து மேட்டில்
ஓய்வாய் இருந்த பொழுதில்
நண்பன் கேட்டான்
'முத்தம் இல்லா
யுத்தம் இனிக்குமா
உனக்கு?'

'போடா முட்டாள்!
காதலுக்கு
முத்தம் வாங்காத
நாள் மோசம்!
வீரனுக்கு
விழுப்புண் படாத
நாள் விரயம்'

'நீ வீரனா காதலனா?'
அவன் கேட்டான்.

முதலில் வீரன்
பின்னர்தான் காதலன்!
தவிர!
என்று நிறுத்தினான்.

'என்ன தவிர?
என்றான் நண்பன்!

வீரர்களைத்தான்
எங்கள் பெண்களும்
காதலிக்கிறார்கள்!
நான் வீரனாயிருப்பதால்தான்
காதலனாயிருக்கிறேன்!'
என்றான் பெருமையாக!

விழுப்புண்படாத நாளை
விரயமாக எண்ணும் வீரனை
திருவள்ளுவரும் காட்டுகிறார் பாரீர்.

"விழுப்புண் படாதநாள் எல்லாம்
-வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து"

அதிகாரம்: 78 குறள்: 776

---




**சிந்தியா! நாட்டின் அபிவிருத்தியில் அக்கறையுள்ள அரசாங்கம், விலையேற்ற அதிகரிப்பில் அக்கறை கொள்ளாதது ஏன்?**

**த.மயில்வாகனம், மாத்தறை.**

அக்கறை கொள்வதால்தான் காலக் கிரமத்தில் விலை அதிகரிப்பும் நடந்தேறுகின்றது என்று கூறப்படுகின்றதே. போருக்குப்பின்னர் இன்னும் பெருமளவான இராணுவத்தை வைத்துக் கொண்டிருப்பதும், வரவு செலவுத்திட்டத்தில் பெருமளவு நிதியை இராணுவத்துக்கு ஒதுக்குவதும் ஏனென்ற கேள்விகளும் எழத்தான் செய்கின்றன. அதில் தேவையான மாற்றங்களைச் செய்து அந்த நிதியை பொருளாதார மேம்பாட்டுக்கு செலவு செய்தால் இப்பிரச்சினைக்கு முன்னேற்றமான தீர்வொன்றைக் காணலாம் என்றும் கூறுகின்றார்கள். நாம் கூறினால் யார்? கேட்பார்கள் என்றும் சிலர் நம்மைப்போல் ஒதுங்கியும் இருக்கின்றார்கள்.

**சிந்தியா! பொதுநலவாய நாட்டில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் பங்கேற்கிறாராமே..? அப்போ மன்மோகன் சிங்...?**

**எம்.பிரியந்தி, கம்பஹா.**

அவர் லேட்டா எடுத்தாலும், லேட்டஸ்டா முடிவை எடுப்பார். பொறுத்திருங்கள்.

**சிந்தியா! சோமாலியக் கடற்கொள்ளையர்கள் தங்களது அடிப்படை தேவையை பூர்த்தி செய்யவே கடற்கொள்ளையில் ஈடுபடுகின்றார்களாமே..?**

**கே.ரமணன், கொக்குவில்.**

எல்லாக் கொள்ளையர்களுமே தங்களுடைய தேவையை பூர்த்தி செய்யத்தான் எல்லாவற்றையும் செய்கின்றார்கள். இது கலிகாலம். கொள்ளைக்கும், கொலைக்கும் சம்மந்தப்பட்டவர்கள் நியாயம் கூறுகின்றார்களே.

**சிந்தியா! ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தால் மாகாண சபையின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக முதல்வர் விக்கினேஸ்வரன் தெரிவிக்கின்றாரே...?**

**கு.வதனன், மீசாலை.**

ஐயா சட்டம் படித்தவர் என்பதால் அவர் சொன்னால் அது சரியாகத்தான் இருக்கும் என்று கூறுகின்றார்களே. ஆளுநர்கள் மாகாண சபையின் செம்மையான செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். மாறாக அழுத்தம் கொடுப்பவர்களாகவும், தடைகளை போடுகின்றவர்களாகவும், தேவையற்ற தலையீடுகளைச் செய்கின்றவர்களாகவும் இருக்கக்கூடாது என்று முன்னர் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது சந்திரகாந்தன் (பிள்ளையான்) கூறியிருந்தார். கிழக்கிலும்,வடக்கிலும் படையிலிருந்த அதிகாரிகளை அரசு, ஆளுநர்களாக நியமித்திருப்பதே நெருடலானதுதான் என்பதுதான் தமிழ் மக்களின் அதிருப்தியாக இருக்கின்றது.

**எனது நண்பி எப்போதுமே கவலையில் இருக்கிறார். அவரை தேற்ற எனக்கு ஒரு ஆலோசனை சொல்லுங்கள் சிந்தியா?**

**எஸ்.பவித்திரன், வவுனியா.**

அவரை நல்ல திறமையான மனநல வைத்தியர் ஒருவரிடம் கூட்டிச் செல்லுங்கள். அதற்கு முதல் யார்? என்ன? கவலையுடன் இருக்கின்றார்கள் என்பதை தெரிந்து கொள்ளாமல் இப்படி மொட்டையாக கேள்வி அனுப்பும் நீங்களும் வைத்தியரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்வது நல்லது.

**சிந்தியா! அண்மையில் நீங்கள் பார்த்து வியந்த சம்பவம் ஒன்று சொல்லுங்களேன்...?**

**ரி.பானு, புத்தளம்.**

கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் நடந்து சென்றவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் வியப்பாக இருந்தது. அதாவது அதிவேக நெடுஞ்சாலையில் நடந்து செல்வது தவறு என்பதுதான். நமக்கு புதிதல்லவா. அவர் மது அருந்தி இருந்தாராம்.

**அதிர்ஷ்ட எண் என்றால் எதைச் சொல்லுவீர்கள் சிந்தியா?**

**எஸ்.நரேன், மன்னார்.**

மன்னிக்கவும். எண் சோதிடம் பற்றி இன்னும் அறிந்துகொள்ளவில்லை. எண்களால் அதிர்ஷ்டம் உண்டாகும் என்ற நம்பிக்கையும் இன்னும் வரவில்லை.

**சிந்தியா! இலங்கையின் கிரிக்கெட்டில் முத்தையா முரளிதரன் விலகியபின்னர் ஒரு தமிழன்கூட வரவில்லையே...?**

**அ.அஜியந்தன், கைதடி மேற்கு.**

வருவார்கள் காத்திருப்போம்.

தற்போது நடைபெற்றுவருகின்ற உள்ளூர் தொடர் ஒன்றில் இலங்கை கிரிக்கெட் சபை 11 பேர் அணியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரியலக்ஷன் என்பவர் இடம்பிடித்துள்ளார். யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவனான இவர், இலங்கை ஏ அணியில் விரைவில் இடம்பிடிப்பார் என்று நம்பிக்கையுடன் காத்திருக்கின்றார் பிரியலக்ஷனின் பாடசாலை பயிற்றுவிப்பாளர் குகன்.

எனவே நாமும் நம்பிக்கையுடன் காத்திருப்போம்.




ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

# காதிலை பூ




கந்தசாமி

வணக்கமுங்கோ! போனவாரம் பாட்டைப் பார்த்துப்போட்டு நம்முடைய யாழ்ப்பாண வடிவேலு பூரிச்சுப் போயிட்டாராமுங்கோ. நேரங்காலம் பார்க்காமல் போனைப் போட்டு புகழுறாருங்கோ.

உங்களுக்குத்தான் தெரியுமே எனக்கு புகழ்ச்சி எண்டால் புடிக்காதுங்கோ. என்னங்கோ புகழ்ச்சி. இண்டைக்கு புகழ்ந்து பேசிற வாய், நாளைக்கே இகழ்ந்து பேசுமுங்கோ. அதுமட்டுமில்லையுங்கோ. எனக்கு புகழ்ச்சியைக் கேட்டு பொய்யாக வெட்கப்படத் தெரியாதுங்கோ.

பொலிரிக்ஷில இருக்கிறவை தங்களைப் புகழும்போது எப்புடித்தான் அதை புன்னகையோடு கேட்டுக் கொண்டு போஸ் கொடுக்கினமோ தெரியல்லையுங்கோ. அண்மையில ஒரு பரிசளிப்பு விழாவுக்குப் போயிருந்தேனுங்கோ. பரிசு வாங்கிறவர் மேடைக்கு வந்திட்டார். பரிசு கொடுக்கிற வரும் மேடைக்கு வந்திட்டார். அவரிடம் பரிசை கையில் கொடுத்து வழங்கி வைப்பார் எண்டும் அறிவிச்சுப் போட்டினமுங்கோ.

போட்டோ எடுக்கிற தம்பி கெமரா ஏதோ மக்கர் பண்ணிப் போட்டுதெண்டு அதைப்போட்டு பிரட்டிக்கொண்டு இருந்தாருங்கோ. பரிசு வேண்டிறவரும் மேடையில கையை நீட்டிக்கொண்டு நிக்கிறார். பரிசு கொடுக்கவந்த பாராளுமன்ற பெருந்தலைவர் பரிசை வழங்குமாப்போலை நீட்டிக்கொண்டே கெமராக் காரரையும், மண்டபத்தில இருந்தவையளையும் பார்த்து சிரிச்சுக்கொண்டே நிண்டாருங்கோ.

போட்டோ எடுக்கும்வரை பரிசை கொடுக்கமாட்டேன் எண்ட கணக்கில நம்முடைய பிரபல விரும்பி நிண்டார் பாருங்கோ. அதுக்கிடையில பரிசு வாங்க வேண்டிய அடுத்த பேரையும் அறிவிப்புச் செய்தவர் அழைச்சுப் போட்டாருங்கோ.

ரெண்டு நிமிசத்துக்குப்பிறகு போட்டோ எடுக்கவும்தானுங்கோ நமது பிரபலம் பரிசை கொடுத்தவருங்கோ. இதுக்கிடையில் கையை நீட்டிக்கொண்டு நின்றவரும் களைச்சுப் போனார். கை தட்டின சனமும் களைச்சுப் போயிட்டின முங்கோ. நானும் வீட்டுக்கு வந்து நம்முடைய பிரபலம் விரும்பி எப்புடி ரெண்டு நிமிசத்துக்கு சிரிச்சுக்கொண்டு நிண்டவர் எண்டதை ட்ரை பண்ணிப் பார்த்தேனுங்கோ முடியல்லையுங்கோ.

அதுக்கெல்லாம் தனியான பயிற்சியும், துணிச்சலும் வேணுமுங்கோ. அதாலை தானுங்கோ அவராலை பொலிரிக்ஸில சைன் பண்ண முடிஞ்சிருக்குதுங்கோ.

பொலிரிக்ஸ் பண்ணுறது அவ்வளவு இலேசுப்பட்ட விசயமில்லையுங்கோ. ஏன் தெரியுமோ? பல்கலைக்கழகத்தில எந்தப் பிரிவு போராட்டம் நடத்தினாலும் அழைப்பு இல்லாமலே ஆஜராகவும், வாக்குறுதி கொடுக்கவும், படித்த பாடசாலையின்ர நிர்வாகத்துக்கு குறுக்குவழியிலையாவது தலைவராகிவிட வேணுமெண்டு திட்டம் தீட்டிப் போனபோது அங்கே அதே பழைய மாணவர்கள் சதியை முறியடித்து ஆப்பை அடித்தாலும் முக்கி முணகிக்கொண்டு சிரித்துக்கொண்டே வரவும், பத்திரிகையில் கண்டபடி கடித்தும், நேரில கட்டிப்பிடித்துக் கொஞ்சியும் பொலிரிக்ஸ் பண்ணுறது சாதாரணமாக முடியாதுங்கோ.

அதுமட்டுமில்லையுங்கோ, எல்லாத்தையும் வீரவசனம் பேசி எதிர்க்கவும், பிறகு கூட்டு, பணம் எண்டவுடன அப்புடியே அந்தர் பல்டி அடிச்சு அப்புடியெல்லாம் ஒண்டுமில்லையெண்டும், கூட்டின் ஏகோபித்த முடிவுதான் எண்டு தலைவர் சொல்லேக்க வாயையும், அதையும் மூடிக்கொண்டு ஒண்டுமே நடக்காத மாதிரியும், வடிவேலு மாதிரி எவ்வளவு வலிச்சாலும் வலிக்காத மாதிரியே மெயிண்டெயின் பண்ணுறதுக்கும் ஒரு கட்ஸ் பொலிரிக்ஸ்ஸில இருக்கவேணுமுங்கோ.

அதுமட்டுமில்லையுங்கோ, அங்கவீனமானவருக்கு பொறுப்பாக இருந்து கோழிக்கூடு ஒன்று அமைத்துக்கொடுங்கோ எண்டு புலம்பெயர்ந்த நாடுகளில இருந்து நம்பி அனுப்பிய பணத்தை அப்புடியே ஆட்டையைப் போட்டுவிட்டு, அங்கவீனமான தமிழனுக்கு பட்டையைப் போட்டுவிட்டு, மாகாண சபையில தம்பிக்கு அமைச்சர் போஸ்ட் தாங்கோ எண்டு கேட்பதற்கு பென்னாம் பெரிய தலைவேணுமுங்கோ.

ஐயோ! சாமிகளா அப்புடியான தகுதிகள் எனக்கு இல்லையுங்கோ. இப்படி எவ்வளவு சொன்னாலும் நம்ம வடிவேலு கேக்கிறாரில்லையுங்கோ. புகழ்ச்சியை ஏன் வெறுக்கிறியள் எண்டு கோபிக்கிறாருங்கோ.

ஐயோ! வாத்தி கைத்தடியில போய் புகமுங்கோ ஏதும் தேறும். தமிழீழத்தின் தலைநகராக இனி கைதடிதான் இருக்கப் போகுது போலை இருக்குதெண்டு சொல்லவும் தான் வடிவேலு ஒரு பகிடியைச் சொன்னாருங்கோ.

அதாவது நம்முடைய முதலமைச்சர் நல்லவர்தானுங்கோ, அவரைச் சுற்றி இருக்கிறவையையும், அவருடைய கோடினேட்டர்களையும் விடவாவுங்கோ நான் புகழ்ந்திடப் போறன்.

துதிபாடியே ஒருவரை நந்திக்கடலில பலிகொடுத்துப் போட்டாங்கள். இப்ப நீதியரசரை புகழ்ந்து எங்க கொண்டுபோய் விடப்போகினமோ தெரியல்லையோ எண்டு வடிவேலு நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிறாருங்கோ.

இப்ப தெரியுதோ? புகழ்ச்சியைக் கண்டால் எனக்கு ஏன் எனக்கு அலர்ஜி எண்டு? வடிவேலுவை எதிர்காலத்திலயும் சந்திப்போமுங்கோ.

# இலக்கிய இராட்சசன்



ஆனால், தான் மணமாகாதவர் - பிரம்மசாரி என்றும் இவர் அடிக்கடி சாதாடுவார்! இப்படி இவர் அடிக்கடி சொல்லி வருவதை பொறுக்காத ஒரு அழகி, இவரைப் பொய்யன் என்று ஏசினாள். அதுமட்டுமல்ல, இவர் கொட்டத்தை அடக்க, இவர் கொடுக்கவேண்டிய கடனை எல்லாம் ஏலத்தில் எடுத்தாள். அந்தக் காலத்தில் ஒருவருடைய கடன் பத்திரங்களை ஏலத்தில் எடுப்பது வழக்கம். சிற்றின்பப் பிரியரான டூமாஸுக்கு அவள் நிபந்தனை விதித்தாள். "சிறையா அல்லது திருமணமா? இரண்டில் எதை விரும்புகிறீர்கள்?" என்று கேட்டனுப்பினாள் அந்த அழகி. டூமாஸ் என்ன மூளை இல்லாதவரா? அவளையே மணந்து கொண்டுவிட்டார்!

டூமாஸின் உருவம் பார்க்க விசித்திரமாக இருக்கும். அவர் உடலில் ஓடும் ரத்தத்திலே நாலில் மூன்று பாகம் வெள்ளையர்களின் ரத்தம். மீதி ஒரு பாகம் நீக்ரோவின் ரத்தம்! எப்படி என்று திகைக்கிறீர்களா? இவருடைய பாட்டி மேற்கு இந்தியத் தீவுகளின் கரும்புத் தோட்டத்தில் கூலி வேலை செய்த ஒரு நீக்ரோ அடிமையாக இருந்ததுதான் இதற்கு காரணம்! அவள் பெயர் பேரி டூமாஸ்.

வறுமையிலே உழன்று பரிதாபகரமான வாழ்க்கை நடத்தி மாண்ட இவள் - படிப்பு வாசனையற்ற இவள் - தன்னுடைய பேரன் மகாராஜாக்களாலும் மத்தியமைச்சர்களாலும், கவிகளாலும், கனவான்களாலும், அறிவாளிகளாலும் புகழப்படும் ஒரு சிறந்த கலைஞனாக வரப் போகிறான் என்பதைக் கனவாவது கண்டிருப்பாளா? டூமாஸ் என்ற தன் பெயரை உலக முழுதும் பரவச் செய்யும் உயர்ந்தவனாக விளங்கப் போகிறான் என்றுதான் நினைத்திருப்பாளா? அலெக்ஸாண்டர் டூமாஸ் கிட்டத்தட்ட தன்னுடைய நீக்ரோ பாட்டியைப் போலவேதான் இருப்பார். பருத்த உடல், வெளுத்த நிறமானாலும் கனத்த உதடுகள், அகன்று விரிந்த மூக்கு, தலைமயிர் மஞ்சள் பழுப்புநிறமாக இருந்தாலும் நீக்ரோக்களுடையதைப் போல சுருண்டு கெட்டியாக அடர்ந்து காணப்பட்டது. வானத்தைப் போன்ற நீல நிறக்கண்கள்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(31.10.2013 தொடக்கம் 06.11.2013 வரை)

## மேடம்

முன்கோபத்தை தவிர்த்து அண்டை அயலவருடன் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லது. மற்றவர்களுக்காக ஜாமீன் போடுவதை தவிர்க்கவும். குலதெய்வ வழிபாடு செய்துவருவதனால் கிரகதோஷங்கள் நீங்க வாய்ப்பு உள்ளது. சம்பந்தம் இல்லாத அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு மனக்கவலை அடையாதீர்கள். குலதெய்வ ஆலயங்களைத் திருத்தி கட்டப்போட்ட திட்டங்களில் சிறிய தடைகளின் பேரில் வெற்றியடைவீர்கள். வெளிநாடு சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களால் சில ஆதாயங்கள் வந்துசேருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. உறவினர்கள் மற்றும் சொந்தபந்தங்களால் ஆதரவுகள் இல்லை. காதல் சம்பந்தமான விசயங்களில் நற்செய்திகள் கிடைக்கும்.

## இடபம்

நீண்டகாலமாக புதிய கட்டிடம் கட்டப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. உத்தியோகத் துறையினருக்கு பணி இடமாற்றமும் பதவி உயர்வுகளும் வரக்கூடும். குலதெய்வ ஆலயங்களைப் புதுப்பிதலுக்கான முயற்சிகளில் நற்பெயர் பெறுவீர்கள். நாட்பட்ட பழைய கடன்கள் மீண்டும் தொல்லைதர வாய்ப்பு உள்ளது. பெண்கள் சம்பந்தமான காதல் விசயத்தில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். குலதெய்வ வழிபாட்டிற்காக தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள நேரும். மூத்த சகோதரர்களால் பொருட்செலவுகள் மற்றும் மனநிம்மதி குறைவுகள் ஏற்படலாம்.

## மிதுனம்

உறவினர்களின் வரவால் பொருள்வரவும் மனச்சந்தோசமும் உண்டாகும். உடல் நிலையில் இருந்துவந்த நாட்பட்ட நோய்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும். நண்பர்களால் ஆதாயம் இல்லை. நீண்டநாட்களாக தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்களில் வெற்றி அடைவீர்கள். ஒரு சிலருக்கு புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். விவசாயம் செய்வோர்களுக்கு நல்ல விளைச்சலும், இலாபமும் கிடைக்கும். உத்தியோகத் துறையினர்களுக்கு பதவியுயர்வுகள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவுகள் நிரம்ப உண்டாகும். திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும்.

## கடகம்

பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டாலும் மிகுந்த பிரயாசையின் பேரில் சமாளித்துக் கொள்வீர்கள். உடம்பில் தோல் மற்றும் இரத்த சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகும். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரவாய்ப்பு உள்ளதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நெடுநாட்களாகப் பிரச்சினையில் இருந்த குடும்பச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரக்கூடிய காலமாகும். வேலை இல்லாதவர்களுக்கு வெகு நாட்களாக எதிர்பார்த்து இருந்த புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும் காலமாகும். கண்களில் கவனமுடன் இருப்பது நல்லது. பெண்கள் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நன்று.

## சிங்கம்

பொருளாதாரத்தில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். உறவினர்களால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். உடல்நிலையில் வாயு மற்றும் வாதம் ஆகிய தொல்லைகள் வந்துபோகும். பிள்ளைகளுக்கு எதிர் பார்த்துவந்த வேலைவாய்ப்புகள் கிடைக்கும். கணவன் - மனைவி உறவில் விரிசல்களும் வீண் மனக்குழப்பங்களும் வந்துபோகும். அநாதைகளுக்கு உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். திருமண விசயங்களுக்காக முயற்சிசெய்யலாம். நீண்டநாட்களாக வராத பணம் திரும்பக் கைவந்து சேரக்கூடிய காலமாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

கணவன் - மனைவி உறவுகளில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்த சுமூகமான உறவுகள் ஏற்படும். உடம்பில் மூளை நரம்பு எலும்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். வீடுகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக பணச் செலவுகள் வந்துசேரும். புதிய கூட்டுத்தொழில் முயற்சிகளை சற்றுக்கால தாமதமாக தொடங்குவது நல்லது. எதிர்பாராமல் வடதிசையில் இருந்து பொருள்வரவும், நல்ல செய்திகளும் வந்துசேரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் நல்லது. நண்பர்களால் வீண் விவாதங்களும் தொல்லைகளும் வந்துபோகும்.

## துலாம்

வீடு, நிலம் வாங்குவது போன்ற முயற்சிகளில் அரசு சம்பந்தமாக எதிர் பார்த்து வந்த உதவித்தொகைகள் கிடைக்கும். உற்றார், உறவினர்களின் வருகையால் பொருட் செலவுகள் உண்டாகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் செய்யாத குற்றங்களுக்காக காரணமற்ற வீண் பிரச்சினைகள் வந்துசேரும் என்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். விவசாயம் செய்வோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள். சம்பந்தம் இல்லாத நபர்களால் எதிர்பாராத தன-வரவுகள் உண்டாகும். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் நீங்கி சுமூகமான சூழல் உருவாகும். காதல் விசயத்தில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது.

## விருச்சிகம்

எதிர்பார்த்த பண உதவிகள் உறவினர்களால் கிடைக்கும். நீண்டகாலமாகக் காணாமற் போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேரும் காலமாகும். திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்சிகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். தாயின் உடல் நிலையில் பாதிப்புகள் உண்டாகுவதோடு மருத்துவச் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைய வாய்ப்பு உள்ளது. தீராத நாட்பட்ட நோய்களுக்கு விடைகாணுவீர்கள். பண விசயங்களுக்கான நீண்டதூரப் பயணங்களைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

தந்தை - மகன் உறவில் சிறிய கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உடம்பில் வாயு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. உடம்பில் உஷ்ணம், காய் போன்ற உபாதைகள் வந்துபோகும். வங்கிகளால் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். கொடுக்கவேண்டிய பழைய கடன்களைக் கொடுத்து புதிய கடன்களை வாங்கத் திட்டம் போடுவீர்கள். குடும்பச் சொத்துக்கள் போன்ற விசயத்தில் நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மகரம்

தேவையற்ற நண்பர்களின் தொடர்புகளால் பிரச்சினைகள் வர இருப்பதால் கவனமுடன் பழகுதல் நல்லதாகும். வெளிநாடு செல்லுதல் போன்ற புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். விபரீதமான எண்ணங்களை விட்டொழித்து காரியத்தில் கவனமாய் இருங்கள். சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயத்தில் சாதகமான நல்ல முடிவு-களை எதிர்பார்க்கலாம். உற்றார் மற்றும் உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் எதிர் பாராத சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். கூட்டுத்தொழில் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். பொருளாதார நெருக்கடிகள் மாறித் தேவையான பொருளாதாரம் வந்துசேரும்.

## கும்பம்

குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சுப-காரிய நிகழ்ச்சிகள் நடக்கும். உடல் நிலையில் கண் காதுகளில் மிகவும் கவன-முடன் இருத்தல் நல்லதாகும். விட்டுப்போன கணவன் - மனைவி உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. காதல் சம்பந்தமான விசயங்களில் பெண்களால் அவப்பெயர்கள் வரக்கூடும் என்பதால் எச்சரிக்கையுடன் பழகுதல் நல்லது. புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்காக வங்கிகள் மூலம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த கடன் தொகைகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. தந்தை - மகன் உறவுகளில் இருந்துவந்த மனக் கசப்புகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். நண்பர்களால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்றுக்கால தாமதம் ஆகலாம்.

## மீனம்

விளையாட்டுத் துறைகளைச் சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுகள் கிடைக்கும் புதிய பெரிய மனிதர்களையும் அரசியல்வாதிகளையும் சந்திக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கும். பொருளாதாரத்தில் இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காணப்படும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் காரணமற்ற பிரச்சினைகள்வர இருப்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும். எதிர்பாராத நீண்டதூரப் பயணங்களின் மூலம் மன நிறைவடைய வாய்ப்பு உள்ளது. வராத கடன் கொடுத்துள்ள பணம் எதிர்பாராமல் திரும்பக் கிடைக்கும். திடீர் அதிர்ஷ்டம் மூலம் எதிர்பாராத தனவரவு உண்டாகும். வெகுதூரப் பயணங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் சென்றுவருவது நல்லது.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)






இளவரசர் வில்லியம்- கேத் மிடில்டனின் தம்பதிகளின் புதல்வரான குட்டி இளவரசருக்கு பெயர் சூட்டு விழா நடைபெற்றது. ஜோர்ஜ் எனப் பெயரிடப்பட்ட அந்த குட்டி இளவரசரின் பெயர் சூட்டு விழா அதிகாரபூர்வமான விழாவாகக் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி அழகிய நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நாணயத்தின் வடிவமைப்பு, அளவுகள், பொருட்கள் போன்றவை குழந்தையின் பெற்றோர் மற்றும் பாட்டி இரண்டாம் எலிசபெத் ஆகியோரால் முடிவு செய்யப்பட்டது.

மேலும் இக்குழந்தை அரச பரம்பரையின் 7ம் வாரிசு என்பதால் கிங் ஜோர்ஜ் செவன் என்றும் அழைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே தனது பேரனின் பெயர் சூட்டுவிழாவின்போது பூரித்து வாழ்த்து தெரிவிப்பதற்கு பதிலாக, குட்டி இளவரசர் ஜோர்ஜுக்கு ரோமானிய நாட்டின் டிரான்சில்வேனியா குன்று பகுதியில் உள்ள பெரிய பூந்தோட்டம் ஒன்றையே பரிசாக வழங்க டயானாவின் கணவரும், இளவரசர் வில்லியமின் தந்தையுமான இளவரசர் சார்லஸ் முடிவுசெய்துள்ளார்.

இளவரசர் ஜோர்ஜ் பற்றிய செய்திகள் மிகவும் பரபரப்பாக உலகெங்கும் அடிபட்டுக் கொண்டிருக்கின்றது. அவர் எப்படி இருக்கின்றார்? அவரை எப்படியல்லாம் பெற்றோர்கள் கவனித்துக் கொள்கிறார்கள் என்பது பற்றி அறிந்து கொள்வதிலும் அரச குடும்பத்தின் அபிமானிகள் ஆர்வமாக இருக்கின்றனர். இதனை அறிந்த அலிஸன் ஜக்ஸன் என்பவர் இளவரசர் வில்லியம்ஸ் மனைவி கேத் மிடில்டன், இளவரசர் சால்ஸ், எலிசபெத் மகாராணி ஆகியோரின் உருவத்தை ஒத்திருந்தவர்களை அழைத்து இவர்களைப் போன்றே குழந்தை ஜோர்ச்சுடன் பொழுதைச் செலவழிப்பது போன்று புகைப்படங்களை எடுத்து ஜமாய்த்திருக்கின்றார். அந்தப் புகைப்படத் தொகுப்பில் ஒன்றைத்தான் நீங்கள் இங்கே கீழே பார்த்துக்கொண்டிக்கிறீர்கள். இது நிஜமல்ல நிழல்.







பிரபல உள்ளாடைத் தயாரிப்பு நிறுவனமான விக்டோரியா சீக்ரெட்ஸ் நிறுவனம் நடத்தும் வருடாந்த கண்காட்சியில் ஒரு கோடி அமெரிக்க டொலர்(சுமார் 131 கோடி, இலங்கை ரூபா) பெறுமதியான பிராவை அணிந்து காட்சிப்படுத்துவதற்கு மொடல் அழகி கென்டிஸ் ஸ்வான்போல் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த பிராவை அணிந்து நடக்கும் வாய்ப்பை பெறுவதற்கு உலகின் முன்னிலை மொடல் அழகிகள் காத்திருப்பர். உள்ளாடை மொடலிங் துறைக்கான பெரும் கௌரவமாகவும் இது கருதப்படுகிறது. இம்முறை தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கென்டிஸ் ஸ்வான் இந்த வாய்ப்பை பெற்றுள்ளார்.

18 கரட் தங்கத்தால் உருவாக்கப்பட்ட இந்த பிராவிலும் அதற்குப்பொருத்தமான இடைப்பட்டியிலும் உலகின் பல பாகங்களிலிருந்து பெறப்பட்ட, வைரங்கள், நீலக்கற்கள், 4200 இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகப் புகழ்பெற்ற நகை வடிவமைப்பு நிறுவனமான Mouawad நிறுவனத்தால் விக்டோரியா சீக்ரெட்ஸ் நிறுவனத்துக்காக பிரத்தியேகமாக இந்த பிரா தயாரிக்கப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு முதல் தடவை இத்தகைய ஆடம்பர ஃபாண்டெஸி பிராவை விக்டோரியா சீக்ரெட்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியது. ளோடியா ஷிபர் அந்த பிராவை அணிந்துநடந்தார். 2000 ஆம் ஆண்டு 1.5 கோடி டொலர் பெறுமதியான பிராவை கிஸெல் பன்ட்சென் அணிந்து நடந்தார்.

பாவாடை வீசிவர பார்த்த உருவமா... என்று பழைய சினிமாப் பாடலின் இனிமையான வரிகள் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ஆனால் இங்கே இந்த மொடல் அழகி வீசி-வருவது பாவாடை அல்ல பாலாடை. என்ன வியப்பாக இருக்கிறதா?

ஆம், அந்த அழகுப் பெண்ணின் ஆடையாய் உங்கள் கண்களுக்கு விருந்தளித்துக் கொண்டிருப்பது உண்மையாகவே பால்தான். பாலை ஆடையாக அணியலாமா என்ற ஆச்சரியம் உங்களுக்கு இருக்கலாம். ஆனால் ஆடையாக அணியவில்லை. கொள்கலன்களில் கொண்டுவந்த பாலை அவர்மீது வீசியடித்துவிட்டு கண்ணிமைக்கும் பொழுதில் அதிநவீன கமராவினால் க்ளிக் பண்ணி எடுத்திருக்கிறார்கள். அதுவே பார்ப்பவர்களுக்கு ஆடையாகக் காட்சியளிக்கின்றது.









தாய்லாந்தில் நடைபெற்ற திருமண வரவேற்பு வைபவமொன்றில் மணமகள் தோழி ஒருவரை யானைக்குட்டியொன்று இழுத்து அணைத்து முத்தம் கொடுத்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. திருமண ஜோடியின் திருமண வரவேற்பு வைபவம் தாய்லாந்தின் புகெட் நகரிலுள்ள பூங்காவில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்களை மகிழ்விப்பதற்காக வவழைக்கப்பட்ட யானைக்குட்டியொன்றே மணமகள் தோழியொருவரை திடீரென இழுத்து முத்தமிட்டது